# இரவி

கலை இலக்கிய காலாண்டுக் கதிர்

ஆண்டு: 3 | ஆடி - புரட்டாதி 2026 | கதிர்: 09



"கருவேல மரத்து நிழலில்
அந்தக்
கரிசல் காட்டு வெயிலில்
ஒத்தையடிப் பாதையோரம்
ஒய்யாரமாய் நீ நடந்தால்....
மண் வாசம் வீசாதோ
என் ராசாத்தி"

- பாரதிராஜா -

## மண் வாசனை மாறாது திரைக்கலையைத் தந்த

# மாமனிதன்

படைப்பாளர்களையும் வாசகர்களையும் இணைக்கும் இலக்கியப்பாலம்



"ஆயிரம் அழகான முகங்களை விட
ஒரு அழகான இதயம் சிறந்தது"

"வாழ்வில் சில தருணங்களை எல்லாம்
மீண்டும் உருவாக்க முடியாது,
நடக்கும் போது ரசித்து கொள்ளுங்கள்"

மண்ணின் மணத்தை
திரைக்கு கொண்டு வந்த கலைஞன்.

பட்டையை நீக்கி, உள்ளே இருக்கும்
சக்கையை மட்டும்
எடுத்து சுவைப்பது போல்,
மனிதர்களின் குணங்களை ஆராய்ந்து
நல்லதை மட்டும் எடுக்க வேண்டும்."

இரவி

காலாண்டு சஞ்சிகை

ஆண்டு: 3 இதழ்: 09
ஆடி -புரட்டாதி 2026

**பிரதம ஆசிரியர்:**
**த. நரேஸ் நியூட்டன்**

மின்னஞ்சல்:
iravi.magazine@gmail.com

படங்கள் வடிவமைப்பு உதவி:
சாட் ஜிபிரி மற்றும் கோ பைலட்

இந்த இதழில் வெளியிடப்படும் சகல ஆக்கங்களுக்கும் அதனை எழுதியவர் களே பொறுப்பு

ஆக்கங்களை பாமினி யுனிக்கோட் எழுத்துருவில் தட்டச்சு செய்து தங்கள் பெயர் முகவரி மற்றும் 2X2 அளவு புகைப்படத்துடன் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புங்கள்

புதுக்கவிதை
மரபுக் கவிதை
கட்டுரைகள்
சிறுகதைகள்
தொடர் கதைகள்
நேர் காணல்கள்
நூல் அறிமுகம்
நூல் ஆய்வு
நகைச்சுவை
துணுக்குகள்
ஓவியங்கள் போன்றவை
வற்கப்படுகின்றன.

# இந்த இதழில் பங்குபற்றிய ஆளுமைகள்



படைப்பாளர்களையும் வாசகர்களையும் இணைக்கும் இலக்கியப் பாலம்

# இரவி
## இதழின் உள்ளே...

**கதிர் வீச்சு**

வாசிப்பு ஒரு பழக்கமல்ல ஒரு பொறுப்பு

**நூல் ஆய்வு**

சாவியைத் தேடும் பூட்டுகள்

**கட்டுரை**

மண்வாசனை மாறாது திரைக் கலையைத்தந்த மாமனிதன்

ஈழத்து நாடகத்துறையில் வி. எம். குகராஜா எனும் ஆளுமை

கனடிய தமிழ் இலக்கிய வானில் ஒளி வீசும் நட்சத்திரங்கள்

குழந்தை இலக்கியமும் சமுதாயமும்

பாடசாலையின் வளர்ச்சியில் பெற்றோரின் வகிபாகம்

எமது மறுவாழ்வின் ஆரம்பம்

மாற்றம்

எங்கள் படைப்புகளைக் கொண்டாடுவோம்

29வது அகவையில் இனிய நந்தவனம் சஞ்சிகை

**சிறுகதை**

தாயகக் கனவுடன்

சட்டை

செய்யும் தொழிலே தெய்வம்

மந்திரச் சொல்

கசப்பாய் ஒரு கேக்

வளர்ப்புத் தாய்

அதிரடி

**கவிதைகள்**

வாழ்க்கைப் பயணம்

மழை முதல் உலகம்

நெஞ்சமெல்லாம் நீ மட்டும்

பெண்கள் நாட்டின் கண்கள்

வானத்து மேகம்

நீயே என் உலகம் அம்மா

தாய்மை

மௌனமாய் சில நிமிடங்கள்

மாமனைத் தேடி

நல்ல நூல்கள் எதிர்கால பொக்கிசங்கள்

செந்தமிழே எனையாளும் தாயே

இளையவன் சிவா கவிதைகள்

மலரும் காலை வேளை

**துளிப்பாக்கள் (ஹைக்கூ)** வைத்திய கலாநிதி ஜலீலா முஸ்ஸம்மில், ராஜூ ஆரோக்கியசாமி, மங்கையர்க்கரசி

**மரபுக்கவிகள்**

ப.்.ரொடை வெண்பாக்கள்

**தொடர் நவீனம்**

கரிசல் மண்ணில் ஒரு காவியம் - பாகம் - 9

**கேளும்... கேளும்... கேட்டுப்பாரும்...** உங்கள் கேள்விகளுக்கு **'கீரர்'** பதிலளிக்கிறார்

**நிகழ்வுகள்**

கவிஞர் மு.முருகேஷின் ஹைக்கூ நூலுக்கு கவிதை உறவு நிகழ்வின் இலக்கியப் பரிசு

புதுக்கோட்டையில் ஹைக்கூ நூல் வெளியீடுகள்

தேசிய மட்ட நாடகப் போட்டியில் கிளிநொச்சிப் பாடசாலை சாதனை

யாழ் இந்துக்கல்லூரி மாணவன் சாதனை

தேசிய நாடகப் போட்டியில் மன்னார் சித்திவிநாயகர் பாடசாலையின் சாதனை

யாழ். இந்துக்கல்லூரி மாணவன் பிரகலாதன் தேசிய சதுரங்க அணிக்குத் தெரிவானார்

இரவி
கலை இலக்கிய காலாண்டுக் கதிர்

# இது இரவியின் பக்கம்

ஆசிரியரின் எண்ணங்களும் இதழின் பயணமும்...

ஆண்டு: 3 ஆடி - புரட்டாதி 2026 கதிர்: 09

**"தமிழை நேசிப்போம், படைப்பை ஊக்குவிப்போம்"**

## "வாசிப்பு ஒரு பழக்கமல்ல ஒரு பொறுப்பு"

*என் இனிய தமிழ் நெஞ்சங்கள் அனைவருக்கும் நெஞ்சம் நிறைந்த இனிய வணக்கம். மற்றொரு இதழுடன் உங்கள் அனைவரையும் சந்திப்பதில் மட்டற்ற மகிழ்சியடைகிறேன். ஒவ்வொரு இதழும் வெளிவருகையில் எம்முடன் புதிய படைப்பாளர்களும் புதிய வாசகர்களும் இணைந்துகொள்கிறார்கள் அவர்களுக்கு நன்றி தெரிவிப்பதோடு மகிழ்வுடன் வரவேற்றிறோம்.*

**"ஒரு சமூகம் அறிவால் உயர வேண்டுமெனில், அந்தச் சமூகத்தில் வாசிப்பு உயிரோடு இருக்கவேண்டும். வாசிப்பு என்பது நேரத்தைச் செலவிடும் ஒரு பழக்கமல்ல, சிந்தனையை வளர்க்கும் ஒரு பொறுப்பு"**

*ஒவ்வொரு மனிதப் பிறவியும் இப்புவியில் அவதரிக்கையில் 6வது அறிவாகிய பகுத்தறிவுடன்தான் பிறக்கிறது. இதனால்தான் அறிவார்ந்த சமூகம் உருவாகிறது. அப்படியான சமூகம் உருவாகுவதற்கு வாசிப்பே காரணமாகிறது.* **"வாசிப்பு ஒரு பழக்கமல்ல, ஒரு பொறுப்பு."** *ஆதியிலே எழுத்து பதிவுகள் இல்லாத நிலைமை இருந்தது. அந்தக் காலப் பகுதிகளில் பார்த்து, தொட்டு, உணர்ந்து, சைகைகளால் வெளிப்படுத்தி அறிவாற்றலை சமூகம் வளர்த்துக்கொண்டது. பின்னர் படிப்படியாக சிறந்த சிந்தனையாளர்கள் எழுத்துவடிவத்தை உருவாக்கியதனால் கற்களில் செதுக்கிய நிலை மாறி நவீன இலத்திரனியல் நூல் உருவாக்கம் பெற்று கல்வியில் வளர்ச்சியேற்பட்டிருக்கிறது. பெரும் வளர்ச்சியை கண்ட நிலையில் சமூகத்தினிடையே வாசிப்புப் பழக்கம் அருகி வருவதை அவதானிக்க முடிகிறது.*

*தற்போது இது அதிகம் பேசப்படும் விடயமாக அமைந்துள்ளதோடு வாசிப்புப் பழக்கத்தைத் அதிகரிப்பதற்கு என்னவெல்லாம் செய்யலாம் என ஆராய்வதோடு, வாசிப்பை ஊக்குவிப்பதற்கான சில செயற்பாடுகளை கற்றோரும் சமூகப்பற்றுடையோரும் ஆரம்பித்திருக்கிறார்கள். இது அவசியமான ஒரு நகர்வாகும்.*

*ஆதியில் எமது சமூகத்தை அறிவார்ந்த சமூகமாக மாற்றவேண்டும் என்பதற்காகவே தம்மை முழுமையாக அர்ப்பணித்து இலக்கணம், இலக்கியம் சார் பல நூல்களை ஆக்கித்தந்தனர் எமது மூதாதையர். அப்போதைய படைப்புகள் வாசிப்பதற்கும் விளங்கிக்கொள்வதற்கும் மிகவும் சிரமமானவையாக இருந்தபோதும், அவற்றை ஆழமாக ஆய்ந்து கற்றுத்தேறியதோடு, கல்விமான்களிடம் கற்று விளக்கம் தெரிந்து, அறிவை வளர்த்துக்கொண்டனர் எமது மூதாதையர். ஆனால் படிப்படியாக கடினமான அந்தக் கற்றல் முறைகள் இலகுபடுத்தப்பட்டு இன்று சாதாரணமாகவே விளங்கிக்கொண்டு கற்கக்கூடிய வகையில் படைப்புகள் வெளிவந்து கொண்டிருக்க எம்மிடையே வாசிப்புப் பழக்கம் அருகி வருவது எமது எதிர்கால சந்ததியை தேடிப் படிக்கும் பழக்கத்திலிருந்து முழுமையாக ஒதுக்கிவிடக்கூடிய நிலைமையை தோற்றுவிக்கும். இது அறிவார்ந்த சமூகத்தை உருவாக்குவதி ஏற்படும் பாரிய பின்னடைவல்லவா... சிந்தியுங்கள்....*

*ஆகவேதான்* **வாசிப்பு என்பது பொறுப்பு** *என்று குறிப்பிட்டிருந்தேன். இன்றைய நவீன யுகத்தின் புதிய வரவுகள் மூலம் (நூல்கள் அற்ற வேறு ஊடகங்கள்வாயிலாக) எதைக் காண்பிக்கிறார்களோ, எதைச் சொல்கிறார்களோ அவற்றை சரியானவையாக எண்ணுவதோடு எமது தேடலை நிறுத்திக்கொள்வதை வழக்கமாக்கிக்கொண்டோம். இது ஆபத்தானதாக நான் கருதுகிறேன், அதை நீங்களும் விளங்கிக்கொண்டிருப்பீர்கள் என நம்புகிறேன். நான் விளங்கிக்கொண்டவற்றையே பகிர்ந்துகொள்கிறேன். நீங்களும் விளங்கிக்கொண்டதை அனைவருடனும் பகிர்ந்துகொள்வதன் மூலமே வாசிப்புப் பழக்கம் அற்ற*

நிலைமையின் ஆபத்தை வெற்றிபெற முடியும். அனைவரிடத்தும் வாசிப்பை ஊக்குவிக்கவும் முடியும். ஒரு நல்ல புத்தகம் ஒரு மனிதனின் சிந்தனையை சிறப்பானதாக மாற்றியமைக்கும் வல்லமைகொண்டது. அதுவே வாழ்க்கையின் நிலைமையை மாற்றியமைத்து வளர்ச்சியையும் நிர்ணயிக்கிறது.

சிறந்த கட்டுரைத் தொகுப்பு, சிறுகதை, கவிதை, நாவல், ஆய்வு அறிக்கை போன்ற இவையெல்லாம், மனித வாழ்வில் சிறந்த மாற்றத்தை ஏற்படுத்த வல்லது என்பதை நாம் அவற்றை வாசிக்கும்போதுதான் புரிந்துகொள்ள முடியும். நூல்களை வாசிக்கும் பழக்கத்தை வழக்கமாகக்கொண்டவர்களுக்கு இது நன்கு தெரியும், இன்னமும் புரிந்துகொள்ளாதவர்கள் அவர்களிடம் கேட்டு தொந்துகொள்வது சிறப்பே. வாசிப்புப் பழக்கம் யாரிடமெல்லாம் அருகி வருகிறதோ அவர்கள் கட்டாயமாக நூல்களை வாசிப்பதன் பயனையும் முக்கியத்துவத்தையும் அறிந்துகொள்ள வேண்டும். நாம் அதற்கான வாய்ப்புகளை உருவாக்கவேண்டும். வாசிப்பின் பயனை விளங்கிக்கொள்ள பல நூல்களை இருக்கின்றன். அவற்றுள் திருவள்ளுவர் எழுதிய **'திருக்குறள்'** நூலில் அத்தனை வாழ்க்கைத் தத்துவங்களையும் மிகத் துல்லியமாக சுருக்கமான வரிகளுக்குள் புதைத்து இன்சுவையோடு தந்திருக்கிறார். திருக்குறளை முழுமையாக படித்து விளங்கிக் கொண்டு அதை ஒழுகினால் ஒரு மனிதனின் வாழ்க்கை முழுமையாக செப்பனிடப்பட்டுவிடும் அல்லவா.

அதேபோல ஜேம்ஸ் கிளியர் என்ற எழுத்தாளரால் எழுதப்பட்ட **'ஓட்டோமிக் ஹபிட்'** என்ற நூல் சிறிய பழக்க வழக்கங்கள் எவ்வாறு நீண்ட காலத்தில் பெரிய மாற்றங்களை உருவாக்குகின்றன என்பதை விளக்குகிறது. மற்றம் **'பொன்னியின் செல்வன்'** போன்ற வரலாற்று நூல்கள் கற்பனைகள் கலந்து எழுதப்பட்டவையாயிருந்தாலும் வரலாற்றை அறிந்துகொள்ளவும் பல்வேறு சூழ்நிலைகளில் சுதாகரித்து முன்னேறக்கூடிய தந்திரோபாய யுக்கதிகளை தெரிந்துகொள்ள எமக்கு உதவும்.

பாலோ ஹொய்லோ என்ற எழுத்தாளர் எழுதிய **'தி அல்கெமிஸ்ட்'** என்ற நாவல் மிகவும் வித்தியாசமான அணுகுமுறையில் எமது உள்ளுணர்வுகளை உணர்ந்து நம்பவைக்கும்படியாகவும், அந்த நம்பிக் கைகளுக்கூடாக எமது இலக்குகளை நோக்கி உற்சாகத்துடன் முன்னேறும் ஆர்வத்தை தூண்டும்படியாகவும் எழுதப்பட்ட நூல். இந்த நூல்களையெல்லாம் வாசிக்கும்போது தான் அந்த உணர்வுகளை நாம் பெற்றுக்கொள்ள முடியும். எனது வாசிப்புப் பழக்கத்தை ஆரம்பத்தில் தூண்டியது கவிஞர் கண்ணதாசனின் '**அர்த்தமுள்ள இந்துமதம்**'தான். பல பகுதிகளைகொண்ட இந்நூல் ஆழமான வாழ்க்கைத் தத்துவங்களை உள்ளடக்கியிருக்கிறது. வாசிப்பதால்தான் இவற்றையெல்லாம் புரிந்துகொள்ள முடியும். ஆதலால் வாசிக்கத் தூண்டுவதும் வாசிப்பதும் எமது பொறுப்பு என்பதை நாம் விளங்கிக்கொண்டு சிறுவயது முதலே பிள்ளைகளுக்குத்தொடர்ச்சியாக உணர்துவது எமது பொறுப்பே. அத்தோடு வாசிப்பதற்கான சிறந்த செயற்பாடுகளை அடையாளம்கண்டு நடைமுறைப்படுத்துவதும் எமது தலையாய பொறுப்பே. இதன் மூலமே ஆய்ந்தறியும் அறிவார்ந்த சமுதாயத்தை உருவாக்க முடியும் என்பது எனது நம்பிக்கை உங்கள் நம்பிக்கையும் அப்படியே அமையும் என நம்புகிறேன்.

**"ஒளியை உருவாக்குவது சூரியன் மட்டுமல்ல: வாசிப்பால் உருவாகும் ஒரு நல்ல சிந்தனையும் ஒளியே"**

**"ஒரு நல்ல நூலை வாசிப்பது நமக்காக மட்டுமல்ல, நம்மைச் சுற்றியிருக்கும் சமூகத்திற்கும் நாம் செய்யும் ஒரு சிறிய பங்களிப்பு."**

**"அந்த ஒளியைப் பகிரும் ஒரு சிறிய முயற்சியே—இரவி"**

மீண்டும் அடுத்த இதழில் வேறொறு ஆசிரியர் சிந்தனையுடனும் பயணத்துடனும் சந்திப்போம்.. இந்த இதழை உங்கள் நட்பு வட்டாரத்தில் உள்ள பலருடனும் தவறாது பகிர்ந்துகொள்ளுங்கள்

நன்றி


**பிரதம ஆசிரியர்**

**- நரேஸ் -**




**“மண்ணின் மணம் மறையலாம், அதை உணர்ந்த கலை ஒரு போதும் மறையாது.”**

இந்த மனிதரின் கலை வாழ்க்கையை சுருக்கமாக காண்பிக்கும் வாககியம் இது. தேனி மாவட்டத்தின் அல்லி நகரம் திரைத்துறைப் படைப்புலகத்திற்காய் அள்ளிக் கொடுத்த அற்புதப் படைப்பு இவர். சாதாரணமான ஒரு மனிதனாக இல்லாமல் பல கோணங்களிலே மக்கள் மனதை ஆராய்ந்து அந்த மனங்களிலே தன் கதைகளால் புதுமைகளை காண்பித்து புதிய கிளர்ச்சியை சினிமாத்துறையில் தோற்றுவித்து பல சாதனைகளைப் புரிந்த ஒரு கிராமத்துத் தென்றல்தான் இந்த **மாமனிதன் பாரதிராஜா**.



தமிழ் சினிமா வரலாற்றில் சில இயக்குநர்கள் மட்டுமே காலத்தைக் கடந்து சமூக சிந்தனைகளை மக்கள் மனங்களிலே தூண்டி அவர்கள் மனங்களில் ஆழமாய்ப்பதிந்தவர்கள். அந்த வரிசையில் மக்கள் மனங்களை கொள்ளைகொண்ட ஒருவராகவே இவர் திகழ்கிறார்.

மக்களை விழிக்கும் போது கூட **“என் உயிரினும் மேலான, இனிய தமிழ் மக்களே”** என்றுதான் விழிப்பார். அந்த வார்த்தை எங்கிருந்து வரினும் அது பாரதிராஜா என்று உடனே நம்பும் வகையில் தனது விழிப்பிலேயே தனித்துவத்தைக் காண்பித்து முத்திரை பதித்துச் சிறந்த வரலாறாகிய மனிதனை மாமனிதன் என நான் விழிப்பதும் பொருத்தமானதே.

தனது கிராமத்தில் இருந்து திரைக்கலைத் துறைக்குள் நுழைந்து கால் பதித்தபோது இந்திய சினிமா பாரம்பரிய இசை நாடக முறைமையிலிருந்து சற்று விடுபட்டு இரண்டும் கலந்த நவீனத்துக்குள் நுளைந்துகொண்டிருந்தது. ஆயினும் அந்தக் காலப்பகுதியில் ஏறத்தாள அனைத்து சினிமாக்களுமே நகரத்தின் நாகரிகத்திற்குள்ளும் வாழ்க்கை முறைகளுக்குள்ளும் சிக்கி அவற்றை முன்னிலைப்படுத்தியே திரைப்படமாக்கப்பட்டு வந்தன. அத்தோடு சென்னை மதுரை போன்ற நகரங்களைச் சுற்றிய காதல், சமூக மற்றும் குடும்பக்கதைகளை முன்நிறுத்திய திரைக்கதை உருவாக்கமுமே அநேகமாக நடைமுறையில் இருந்தது.

அப்போதைய படப்பிடிப்புகளும் காட்சியமைப்புகளும் திரைப்படக் கலையகத்தின் (ஸ்ருடியோ) உள்ளேயே மேற்கொள்ளப்பட்டு வந்தன. திரைப்படத்தின் தேவைகளுக்கமைய காட்சிக்குப் பொருத்தமான அமைப்புகளும் அங்கேயே உருவாக்கப்பட்டு திரைப்படக் காட்சிகள் படமாக்கப்பட்டன. இந்தக் காலகட்டத்தில் இயற்கைச்சூழல் கிராமிய வாழ்க்கை போன்றவை அப்போதைய திரைப்படங்களில் காண்பது அரிதே. திரைக்கதை அமைப்பும் இசை கலந்தவையாக அல்லது நாடகத்தன்மை வாய்ந்தவையாகவே இருந்தன.

இந்த சூழ்நிலையில் 1977ஆம் ஆண்டு காலப்பகுதியில்தான் தமிழ்த் திரையுலகில் இந்த சூறாவளி

கிராமத்து மண்வாசனையை அள்ளிச் சுமந்து சுழன்றடிக்கத் தொடங்கியது. கிராமத்து மண் வாசைன கலந்த வாழ்க்கையினை, மனித உணர்ச்சிகளின் ஆழத்தை, சமூக மாறுதலுக்கான போராட்டங்களின் குரல்களையும் தனது படைப்புகளுக்கூடாக வெள்ளித்திரைக்கு கொண்டுவந்தார் பாரதிராஜா எனும் கலைப் பொக்கிசம். அவரது படங்கள் வெறும் பொழுது போக்கு அல்ல, அதையும் தாண்டிய சமூகக் கவிதைகள், அவரது பயணம் ஒரு உன்னதமான கலைப்பயணம், சமூகத்துக்கான திரைக்கலைத் துறையின் ஒரு மனிதக்குரல்.

இவர் பிறந்தபோது இவரது தந்தை பெரியமாயத்தேவரோ, தாய் கருத்தம்மாளோ அல்லது இவரது இயற் பெயருக்குள் நுளைந்துள்ள பெயர்களுக்குரிய சகோதரி பாரதியோ சகோதரன் ஜெயராஜோ நினைத்திருக்கமாட்டார்கள் இவன் ஒரு சமூகப்புரட்சி என்று. ஆரம்பத்தில் இவரை உதவி இயக்குநராக வைத்திருந்த புத்தண்ணா கனகல், புல்லையா, கிருஸ்ணன் நாயர், அவினாசி மணி, யு. ஜகன்நாதன் போன்றவர்களும் இப்படியொரு சமூக சிந்தனைவாதியை எதிர்பார்த்திருக்கமாட்டர்கள். அவர்கள் மட்டுமல்ல அப்போது தமிழ் திரையுலகில் பிரபலமாக இருந்த இயக்குநர்கள்கூட பாரதிராஜாவை மாற்றத்தின் ராஜாவாக இந்தத் துறைக்குள் நுளைபவராக பார்த்திருக்க மாட்டார்கள் ஆனால் காலம் சாட்சியானது.

இப்பேற்பட்ட சூழலில்தான் சமூக சிந்தனையூடாக மக்கள் உள்ளங்களில் கிளர்ச்சியையும் ஆர்வத்தையும் தூண்டிவிடும் திரைக்கதையாக **'16 வயதினிலே'** என்ற கதையை உருவாக்கி வெள்ளித்திரைகளில் படமாக மிளிரச்செய்து, இப்படியும் திரைக்கதைகளை சமூக சிந்தனையோடு உருவாக்கலாம் என்பதை எண்பித்து தமிழ்த் திரையுலகை மிரளச்செய்தார். அதுமட்டுமல்லாது மண்வாசனை கலந்த கிராமத்து வாழ்க்கையையும் கிராமத்துக் காதலையும் நகரக்கதைகளில் சிக்கியிருந்த தமிழ் சினிமாவிற்கும் இரசிகர்களுக்கும் கிராமிய விழுமியங்கள் மங்காது இந்தத் திரைப்படத்தின் மூலம் புலப்படுத்தினார். கரிசல் நிலம், வயல்வெளி, மழை, நதி, கோவில், திருவிழா, கிராமிய பண்பாடு, பாரம்பரியத்தையும் தமிழர் பண்பாட்டையும் வெளிப்படுத்தும் விழாக்கள் என்று அனைத்தையும் தனது படங்களில் புகுத்தி அவற்றின் மூலமாக கிராமத்து மண் வாசனையை வெளி உலகுக்கு மிகத்துல்லியமாகப் புலப்படுத்தியிருப்பார். 16 வயதிலே திரைப்படத்தில் இளமைக்காலத்துக்குரிய உணர்ச்சிகளை ஆழ்ந்து அனுபவித்து பொய்மை கலக்காது அப்படியே துணிச்சலுடன் சமூகத்திற்கு படம் பிடித்துக்காட்டும் வல்லமை அந்தக் காலப்பகுதியில் இவரால் மட்டுமே முடிந்தது.




இவரது திரைப்படங்களில், கிராமத்து மண்வாசனை மட்டுமன்றி கலைப்பார்வையையும் வித்தியாசமான கோணத்தில் அணுகி வெளிப்படுத்தியமையை ஒவ்வொரு படத்திலும். படங்களில் காட்சிப்படுத்தப்பட்ட ஒவ்வொரு கிராமத்துக் காட்சிகளும் வெறும் காட்சிகளாக அல்லாமல் உயிராகவே அமைந்தன. கிராமத்து சூழலை படத்தின் உயிராக வைத்து எடுக்கப்பட்ட படங்களில் **'அலங்கட்டி பொம்மை'** படமும் சிறந்த சாட்சியாகும். அதில் மண்ணின் மகிமை, மழை, பசுமை, மனித உறவுகளின் மாண்பு போன்ற அனைத்தையும் ஒருங்கிணைத்து சாட்சியங்களாக இரசனை கலந்து தரைக்கவியாய்ப்படைத்தார்.

மண்வாசனை, கலைப்பார்வை என்ற வரிசையில் சமூக சிந்தனையும் மேலோங்கும் படியாக கதைகளை அமைத்தும் சாதனை நிகழ்த்தியிருக்கிறார். சாதி, வறுமை, சமயம், வகுப்புவாதம் போன்றவற்றுக்கு மத்தியில் காதல், போராட்டம், இவற்றின் வெகுமானம் என்று சமூகம் சார்ந்த சிந்தைக்கலப்போடு வெளிப்படுத்த வேண்டிய ஆழமான கருத்துகளை மிகத்துல்லியமாக துணிவுடன் வெளிப்படுத்திய ஒரு சாதனைக் கலைஞனாக இவரைக் காணமுடியும். இவருடைய **'சிகப்பு ரோஜாக்கள்'** திரைப்படம் காதலையும் சமூக சிந்தனைகள் எவ்வாறு மனிதர்களின் வாழ்கையில் பிறழ்வுகளை ஏற்படுத்துகின்றது என்பதையும் உணர்த்தியது. இந்தத் திரைப்படத்தினூடாக திரைப்படம் எப்படி ஒரு சமூகத்தின் குரலாக மாறலாம் என்பதை நிரூபித்துக்காட்டினார்.

மனித உணர்வுகளுக்கும் மனித மாண்புக்கும் முக்கியத்துவம் கொடுப்பதிலும் தனது கதைக்களத்தை உருவாக்கி வெள்ளித் திரையில் காண்பித்தவர் பாரதிராஜா. மேலே குறிப்பிட்ட படங்களோடு **'முதல் மரியாதை'** திரைப்படத்தை இதற்கு சிறந்த சாட்சியாகக்கருதலாம். கிராமத்துக் கட்டமைப்புகளுக்குள் நிகழக்கூடய தனி மனித விருப்புக்கு மாறான விடயங்களையும் தனி மனித விருப்புகள் எப்படி இருக்கின்றன அந்த விருப்பு வெறுப்புகளுக்கு மத்தியில் சமூகக் கட்டமைப்புகளோடு ஒன்றித்த குடும்ப மேலாதிக்கத்தின் தன்மைகள் இந்தப் படத்தில் மிகத்துல்லியமாகக் காண்பிக்கப்பட்டிருப்பதை யாரும் மறந்திருக்க முடியாது. இது எப்படி சாத்தியமாகும் என்ற வினவிற்கு சாத்தியமாகும் என்ற நம்பிக்கையை இந்தத் திரைப்படங்களின் திரைக்கதைகள் மற்றும் காட்சிப்படுத்தலூடாக சிறப்பாக நிரூபித்திருப்பார் இந்த **'மாமனிதன்.'**

இவரது திரைப்படங்களில் பெண் கதாபாத்திரங்களை வலிமை மிக்கதாக சித்தரித்து காண்பிப்பதில் கை தேர்ந்தவராக திகழ்ந்தமையையும் பல படங்களில் காணலாம். அத்தோடு காதல், தியாகம், எதிர்ப்பு, சுய மரியாதை போன்றவற்றை பெண் கதாபத்திரங்களுக்குள் புகுத்திப் பிரமிக்க வைப்பதில் கை தேர்ந்தவர். பெண் பாத்திரத்தில் புதுமையையும், துணிச்சலையும், புரட்சிகரப் போக்கையும் மிக தெளிவாக காண்பித்த அதேவேளை பெண்களின் சுயமரியாதை, சமூகச் சிக்கல் மற்றும் ஆணாதிக்கம் அதற்கெதிரான பெண்ணின் துணிச்சலான தீர்மானம் போன்றவற்றை காண்பிக்கும் திரைப்படமாக 1984இல் ரேவதி நடித்து வெளிவந்த **'புதுமைப் பெண்'** திரைப்படத்தைக் குறிப்பிடலாம். பல பெண்களிடத்தில் துணிவையும் மாற்றத்தையும் நடைமுறையில் கொண்டுவந்த திரைப்படமாக இது அந்தக் காலப்பகுதியில் உணரப்பட்டது.



இவ்வாறாக தமிழ் திரைத்துறையில் புதுமைகளை புகுத்த வந்த இந்த மனிதரின் சிறந்த படைப்புகள் பலவற்றில் **'அலைகள் ஓய்வதில்லை', 'காதல் ஓவியம்', 'வெற்றிக்கான வலி', 'கிழக்கே போகும் ரயில்', 'நிழல்கள்', 'டிக் டிக் டிக்', 'கருத்தம்மா', 'வேதம் புதிது', 'மண் வாசைன', 'கடலோரக் கவிதைகள்', 'புதிய வார்ப்புகள்'** போன்றவற்றை அவரை **'இயக்குனர் இமயம்'** என்ற நிலைக்கு உயர்த்திய படங்களாக குறிப்பிடலாம்.

தமிழ்த் திரையுலகின் சிம்ம சொப்பனமாக விளங்கிய பாரதிராஜா திரைக்கதை, காட்சியமைப்பு, உணர்ச்சி வெளிப்பாடு, மண்வாசனை, சமூக சிந்தனை போன்ற பல விடயங்களை முதன்மைப்படுத்தியவர் என்று வெளிப்படுத்தும் அதே வேளை புதியவர்களை அறிமுகப்படுத்தி சாதிக்க முடியும் என்பதையும் தனது திரைப்படங்களில் உறுதிப்படுத்திக் காட்டினார் என்பதும் இவரது திரைக்கலைச் சாதனைகளில் ஒன்று. தமிழ்த் திரையுலகின் உச்சம் தொட்ட நடிகர்களாக இன்று திரையுல-காலும் சினிமா இரசிகர்களாலும் கொண்டாடப்படும் சுப்பர் ஸ்டார் ரஜினிகாந்த், உலக நாயகன் கமலஹாசன் மற்றும் மிகச்சிறந்த கதாநாயகிய மக்கள் மனங்களை கொள்ளையடித்து வலம்வந்த ஸ்ரீதேவி போன்றவர்கள் பாரதிரா ஜாவினால்தான் முதன்மைப் பாத்திரங்களாக முதன் முதலில் '16 வயதினிலே' படத்தின்மூலம் அறிமுகப்படுத்தப்பட்டனர்.

> "பாரதிராஜாவின் மிகப்பெரிய வெற்றி, அவர் எடுத்த திரைப்படங்கள் மட்டுமல்ல அவர் உருவாக்கிய மனிதர்களும் ஆகும். ஒரு தலைமுறை நடிகர்கள், இயக்குநர்கள், தொழில்நுட்பக் கலைஞர்கள் அவருடைய படைப்புப் பயணத்தின் வழியே தமிழ்த் திரையுலகிற்குள் வந்தனர்."

இவர்கள் மட்டுமன்றி ராதா மற்றும் கார்த்திக் (முத்துராமனின் மகன்) போன்றோர் அலைகள் ஓய்வதில்லை, ரேவதி - மண் வாசனை, முரளி – புதுமைப்பித்தன், மனோஜ் பாரதிராஜா (அவரது மகன்) – தாஜ்மஹால், ரோகினி – கிழக்கே போகும் ரயில், ரஞ்சிதா மற்றும் நிழல்கள் ரவி – நிழல்கள் (1986) போன்ற படங்களில் முன்னணி கதாபாத்திரங்களாக அறிமுகப்படுத்தப்பட்டு அவர்கள் பிற்காலத்தில் மிகவும் பிரபல்யமாக வலம் வந்தமைக்கு இவரது அந்தத் திரைப்படங்களே அத்திவாரமாக அமைந்தது.

இத்தனை விடயங்களுக்கும் அப்பால் இவருடய படைப்புகள் காலத்தால் அழியாத பல இலக்கியங்களின் சாயலை நவீனத்துவத்துக்குள் புகுத்தி வசனங்களின் வடிவிலும் திரைக்கதைகளில் பயன் படுத்திய கவி வடிவங்களிலும், தமிழ் இலக்கிய இரசனையையும் கலந்து வழங்கினார். தமிழ் மொழியின் அழகை மிகவும் இரசனைக்குரியதாக இலக்கண இலக்கியப் பிறழ்வு ஏற்படாதவாறும், உவமை உருவகம் போன்றவற்றை ஆங்காங்க கருத்துவன்மையுடன் கதைகளுக்குள் புகுத்தியும் தமிழ்ப்பற்றை உலகுக்கு உணர்த்தினார். இவ்வாறு இலக்கியத்தை பலவடிவங்களில் தனது திரைக்கதைகளில் செதுக்கி அழகுபார்த்த ஒரு இலக்கியவாதியாகவும் இவரை பார்க்கராம்

இவர் தமிழ்த் திரையுலகில் ஏற்படுத்திய மாற்றம், கிளர்ச்சி, சாதனைகள் போன்றவறினைப் பார்க்கும்போது இவரை ஒரு இயக்குநராக, தயாரிப்பாளராக அல்லது திரைக்கதை ஆசிரியராக மட்டும் பார்த்து நகர்ந்து போய்விட முடியாது. மாறாக பாரதிராஜா என்பது ஒரு பள்ளிக்கூடம், ஒரு கலைக்களஞ்சியம், கால ஓட்டத்தின் மாறுதல்களை திரையில் காண்பிக்கத் தவறாத காலம், மண்ணின் வாசனையை நிறைவாக அள்ளித் தெளித்த மண்வாசனை, சமூக மாற்றங்களை சொன்னதால் மாற்றங்களை முன்நிறுத்திய ஒரு சமூக பற்றாளன், சமூக ஆர்வலன், இயற்கையை இயற்கையாகவே படம்பிடித்துக்காட்டிய பசுமைப் பற்றாளன் மொத்தத்தில் இவன் ஒரு திரைத்துறைக் கலைகளஞ்சியம் ஆகிய இவன் ஒரு மாமனிதனே.

ஈழத்து நாடகத் துறையில்


# வீ.எம்.குகராஜா

எனும் ஆளுமை



கே. கே. தர்சனி

**இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்தின் மொழிப் பீடத்தின் இறுதி கல்வியாண்டு பரீட்சையில் ஒரு பகுதியாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுக் கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு ஆயிரத்து தொள்ளாயிரத்து எழுபது மற்றும் எண்பது ஆண்டு காலப்பகுதிகளில் ஈழத்து நாடக வரலாற்றில் ஒரு புதிய யுகத்தை உருவாக்கிய கலைஞன் எந்தை வீ.எம்.குகராஜா தொடர்பாக இக்கட்டுரைத் தொடர் ஆராய்கின்றது. இலங்கையின் பல பிரதேசங்களுக்கும் சென்று இக்கலைஞனுடன் பணியாற்றிய அவரது ஆசிரியர்கள், சக கலைஞர்கள், நண்பர்கள் மற்றும் உறவினர்களிடமிருந்து திரட்டப்பட்ட தகவல்கள் மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகள் போன்றவற்றை அடிப்படையாக கொண்டு இவ் ஆய்வுக் கட்டுரை 2024 இல் தயாரிக்கப்பட்டது. ஈழத்து நாடக வளர்ச்சியில் அக்கறை கொண்ட பலரது வேண்டுகோளுக்கு இணங்க இக் கலைஞனின் படைப்புக்கள் தொடர்பான ஆவணப்படுத்தலாக இக்கட்டுரைத் தொடர் எழுதப்படுகின்றது. இக்கட்டுரை தொடர் வாயிலாக 1970, 1980 களில் வீ. எம். குகராஜா என பலராலும் அறியப்பட்ட நாடகக் கலைஞர் அவர்களால் இத்துறைக்கு ஆற்றிய பங்களிப்பு, இக்கலைஞரால் ஈழத்து நாடக முறைமைகளில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்கள் போன்ற பல்வேறு அம்சங்கள் ஆராயப்படுகிறது.**



முதலில் கலைஞர் தொடர்பான ஓர் விரிவான அறிமுகத்தோடு அவரது சேவைகள் பற்றிய கட்டுரையை தொடரலாம் என எண்ணுகின்றேன். கூத்துக் கலைகளில் அக்காலத்தில் சிறந்து விளங்கிய அண்ணாவியர்களில் ஒருவரான "ஜமன்" மார்க்கண்டு என எல்லோராலும் அழைக்கப்பட்ட திரு வேலு மார்க்கண்டின் நான்காவது மகனாக 1950. 02. 17 இல் யாழ் வசாவிளானில் அவதரித்தார். இவரின் இயற்பெயர் குகராஜா என்பதாகும். நாடக வாழ்வில் காலடி எடுத்து வைத்தது முதல் தனது பாட்டனாரதும், தந்தையாரதும் பெயர்களது முன் எழுத்துக்களையும் இட்டுக் கொண்டதன் விளைவாக வீ. எம். குகராஜா என எல்லோராலும் அறியப்பட்டார்.

"ஜமன்" மார்க்கண்டுவின் மகன் ஆகையால் தந்தையாரிடம் காணப்பட்ட இசை நாடகத் திறமை இவரிடமும் இயல்பாகவே பிரதிபலித்திருந்தது. இளமைக் காலத்தில் நடிப்பு, நாடகம் போன்ற துறைகளில் மிகுந்த ஈடுபாடு கொண்ட இவர், தனது தந்தையாருடன் இளமை நாட்களில் புராண நாடகங்கள், சரித்திர நாடகங்கள், சத்தியவான் சாவித்திரி, மயான காண்டம், நந்தனார் சரித்திரம் போன்ற நாடகங்களில் சிறுவர்களுக்கு உரிய வேடமைத்து நடித்து தனது நடிப்புத் திறமையை வெளிப்படுத்தினார். தனது இளமைக் கல்வியை வசாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தில் பயின்றார். பாடசாலையிலும் நாடகம், நடிப்பு துறைகளிலும் சிறந்து விளங்கினர். பாடசாலை கல்வியை முடித்த பின்னர் சுன்னாகம் பலநோக்கு கூட்டுறவு சங்கத்தில் இலிகிதராக தன்னை இணைத்துக் கொண்டாலும், வேலை நேரம் தவிர்ந்த ஓய்வு நேரங்களில் நாடகத் துறையில் தொடர்ந்து ஈடுபட்டு வந்ததுடன் ஊரில் உள்ள இளைஞர்கள் மற்றும் யுவதிகளையும் இணைத்துக்கொண்டு " சித்ரா கான சபா" என்ற பெயருடைய சபாவை ஆரம்பித்து நாடகங்களை தயாரித்து வந்தார்

1969. 15. 16 அன்று டட்லி சேனாநாயக்க வசாவிளான் வந்த போது சித்ர கான சபா உறுப்பினர்களுடன் குமணன் நாடகத்தை தயாரித்து மேடை ஏற்றி பாராட்டு பெற்றார். இந்த நாடகத்தை கண்ணுற்ற பெரியோர் பலரது பாராட்டுதல் காரணமாக, ஏ. ரி. பொன்னுத்துரை அவர்களின் இறுதி பரிசு எனும் குமணன் நாடகத்தை இரண்டு மணித்தியாலங்கள் கொண்ட நாடகமாக வசாவிளான் கலையரங்கில் மேடை ஏற்றினார். இதுவே இவரது முதலாவது நாடக நெறியாள்கை எனலாம். இந் நாடகம் புத்தூர் சனசமூக நிலையத்தால் மேற்கொள்ளப்பட்ட நாடகப் போட்டியில் முதலிடத்தைப் பெற்றுக் கொண்டதோடு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழராய்ச்சி மாநாட்டிலும் மேடை ஏற்றப்பட்டது.

இவ்வெற்றிக்குப் பின்னர் சமூக நாடகம் ஒன்றை எழுதுவதற்கு உந்தப்பட்ட குகராஜா, நீதியின் கரங்கள் என்ற சமூக நாடகத்தை தயாரித்து வசாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தில் மேடை ஏற்றினார்.

தொடர்ந்து குகராஜாவின் மூத்த சகோதரரான திரு. கைலைவாசன் அவர்கள் மூலம் இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தில் கடமை புரிந்த கே. எம். வாசகர் அவர்களின் அறிமுகத்தைப் பெற்றுக் கொண்ட வி. எம். குகராஜா, தனது நாடக வாழ்வின் அடுத்த மைல்கல்லாக வானொலி நாடகங்களை கே. எம். வாசகர் அவர்களின் ஆசியுடனும் அறிவுரைகளுடன் எழுத ஆரம்பித்தார். “ படலை திறக்கிறார்கள்” எனும் இவர் எழுதிய வானொலி நாடகம் ஒலிபரப்பப்பட்ட போது மக்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பை பெற்றது. இதுவே இவரது முதலாவது வானொலி நாடகம் எனலாம். அக்காலத்தில் வானெலி நாடகம் எழுதுவதில் பிரபல்யம் பெற்று இருந்த வீ.எம் குகராஜா, பல வானொலி நாடகங்களை எழுதி வெளியிட்டார். இவை தொடர்பாக பின்னர் நாம் விரிவாக ஆராய்வோம்.

1977 இல் தேசிய நாடக விழாவிற்கு இவரது மனிதனும் மிருகமும் என்னும் நாடகம் யாழிலிருந்து தெரிவு செய்து அனுப்பப்பட்டு சிறந்த நாடகத்திற்கான விருதை பெற்றுக் கொண்டது நாடகத்துறையில் இவரால் மேற்கொள்ளப்பட்ட சாதனையாக கருதப்படுகின்றது. யாழிலிருந்து தேசிய நாடக விழாவிற்கு முதல் முதலில் சென்ற நவீன நாடகம் இதுவாகும். அக்காலத்தில் மரபு ரீதியான கூத்துக்களே தேசிய நாடக விழாக்களுக்கு யாழில் இருந்து அனுப்பபட்டுக் கொண்டு இருந்தது. இவ்வாறான காலப்பகுதியில் இவரது மனிதனும் மிருகமும் என்ற நவீன நாடகம் தெரிவாகி பங்கு எடுத்துக் கொண்டமை பெருமைக்குரிய விடயமாக கருதப்பட்டது

தொடர்ந்து நாடக அரங்க கல்லூரியில் மூன்றாண்டுகள் நாடகப் பயிற்சியை திரு. குழந்தை ம. சண்முகலிங்கம், திரு. மௌனகுரு, திரு. ஏ. தாஸீசியஸ் அவர்களிடம் பெற்றார். பயிற்சிக் காலத்திலும் பல நாடகங்களை நாடக அரங்க கல்லூரிக்காக தயாரித்து அளித்தார். நாடக அரங்க கல்லூரியில் இவரது சிறந்த பணி எனக் கொள்ளக்கூடியது, “அரங்கம்” எனும் நாடக நூலின் ஆசிரியராக இருந்து அச் சஞ்சிகையை வெளியிட்டமை ஆகும்.



அக்காலத்தில் நாடக அரங்க கல்லூரி சமுதாயத்தில் உயர் மட்டத்தில் உள்ளவர்களுக்கு மட்டும் வாய்ப்புகளை வழங்கியதால், படிக்காத பாமர மக்களும், சமூகத்தில் தாழ்ந்த மட்டத்தில் உள்ளவர்களும் நாடகப் பயிற்சி பெற வேண்டும் என்ற ஆவலில் இணுவில் காலிங்கன் தியேட்டரில் “மக்கள் கலை யரங்கம்” என்ற பெயரில் அரங்கம் ஒன்றை நிறுவி அதனூடாக பல கலைச் சேவைகளையும் பல நாடகப் பயிற்சி பட்டறைகளையும் நடாத்தினார். .ஈழத்து இலக்கியத் துறைக்கு இவரால் ஆக்கப்பட்ட உச்சகட்ட பணியாக கொள்ளக்கூடியது இவரது திரைப்படத் தயாரிப்பு ஆகும். 80 களில் பொருளாதார வளப்பிரச்சனைகள் மற்றும் வடக்கில் காணப்பட்ட போர்ச்சூழல் போன்றவற்றின் தாக்கங்களோடு திரைப்படத் தயாரிப்பில் ஈடுபட்டமை இக்கலைஞனின் மிகப் பெரிய வெற்றி எனலாம். “சிலந்தி வலை”, “கதை இதுதான”, “தியாகங்கள்” என்ற மூன்று திரைப்படங்கள் எண்பதுகளில் தயாரிக்கப்பட்டதோடு இவை பாடல்களுடன் சமுதாயக் கருத்துக்கள் மற்றும் விழிப்புணர்வுக் கருத்துக்களை உள்ளடக்கியதாக காணப்பட்டது. இப்படைப்புக்கள் தொடர்பாக எதிர்வரும் தொடர்களில் நாம் கலந்துரையாடுவோம்.

ஈழத்துக்கலை இலக்கியத்துறைக்கு இக்கலைஞனால் மேற்கொள்ளப்பட்ட இன்னொரு முக்கியமான படைப்பாக கூறக்கூடியது மெல்லிசை பாடல்கள் ஆகும். இக்காலத்தில் இவரால் 30க்கும் மேற்பட்ட மெல்லிசை பாடல்கள் உருவாக்கப்பட்டதாகவும், அதனை இலங்கை ஒலிபரப்பு கூட்டுதாபனத்தால் அக்காலத்தில் ஒலிபரப்பு செய்யப்பட்டதாகவும் குறிப்பிடப்படுகின்றது. ஈழத்து இலக்கியம் பல தன்னிகரில்லாத கலைஞர்களை தன்னகத்தே கொண்டிருந்தாலும் அக்காலத்தில் எமது பிரதேசங்களில் காணப்பட்ட அசாதாரண நிலைமைகளால் இவர்களை இழந்தது எமது கலைகளின் வளர்ச்சிக்கு பாரிய தடைக்கல்லாக இருந்திருப்பதை உணரும் போது மிகவும் வேதனையாக உள்ளது. அந்த வகையில் குகராஜா தனது 36 ஆவது வயதில் 1987 அக்டோபர் மாதம் 13-ம் தேதி இந்திய ராணுவத்தின் ஆக்கிரமிப்பால் அகால மரணமடைந்தார். **(தொடரும்)**

- வைத்திய கலாநிதி ஜலீலா முஸம்மில் -

ஏறாவூர், இலங்கை



# ஹைக்கூ கவிதைகள்

*1*

*காலை நேரம்*
*தட்டி எழுப்புகிறது*
*பறவைகள் ஒலி*

*2*

*உச்சிக்கிளை*
*வான் தொடுகிறது*
*வேரின் மௌனம்*

*3*

*பசி இல்லை*
*நீளும் அழுகை*
*காப்பகத் தொட்டிலில்*

*4*

*மலைப்பாதை*
*மூடுபனியைத் துளைத்து*
*எழும் நினைவுகள்*

*5*

*வயல் நிலம்*
*காற்றோடு செல்லும்*
*பச்சை அலை*

*6*

*வீசும் காற்று*
*ஆ(ட்)டும் தூளி*
*தாயில்லாத வீடு*

*7*

*மொட்டை மாடி*
*விழுந்து கிடக்கிறது*
*தரையில் நிழலா*

*8*

*வெளியே அமைதி*
*கேளாத தாலாட்டு*
*முதிர்கன்னி அழுகை*

*9*

*பட்ட மரம்*
*கிளைகளில் இன்னும்*
*பறவைகளின் கனவு*

*10*

*வீசும் காற்று*
*கதை சொல்லும்*
*மரத்தின் இலைகள்*

*11*

*மழை இரவு*
*உறக்கம் கலைக்கும்*
*நகரத்தின் ஒலி*

*12*

*கவியும் இருள்*
*வானத்தில் பரவும்*
*மென்சோகம்*

கனடிய தமிழ் படைப்பிலக்கியத்தில் இன்று புகழ் மிக்கவர்களாக இருக்கும் எழுத்தாளர்களில் இருவர் முக்கியமாக இனங்காணப்பட்டவர்கள். இவர்களில் ஒருவர் மூத்த எழுத்தாளரான அ. முத்துலிங்கம், மற்றவர் அடுத்த தலைமுறை எழுத்தாளரான குரு அரவிந்தன் ஆகும். இலங்கையில் பிறந்து கனடாவில் வாழும் இவர்கள் இருவரும் தங்கள் எழுத்தாற்றலால் இன்று சர்வதேசப்புகழ் பெற்ற எழுத்தாளர் களாக, இலட்சக்கணக்கான வாசகர்களைக் கொண்டவர்களாகத் திகழ்கின்றார்கள். இவர்களிடம் உள்ள ஒற்றுமை என்னவென்றால் இவர்கள் இருவரும் இலங்கையில் கணக்காளர்களாகப் படித்து வாழ்வாதாரத் திற்காக வெளிநாட்டில் பணிபுரிபவர்கள். இவர்களில் எழுத்தாளர் அ. முத்துலிங்கம் கனடா தமிழ் இலக்கியத் தோட்டத்தின் தலைவராகவும், எழுத்தாளர் குரு அரவிந்தன் கனடா தமிழ் எழுத்தாளர் இணையம், பீல்பிரதேச குடும்ப மன்றம் (சொப்கா), ஒன்ராறியோ தமிழ் ஆசிரியர் சங்கம் போன்றவற்றின் தலைவராகவும் பணியாற்றியவர்கள்.

எழுத்தாளர் அ. முத்துலிங்கம் அறுபது ஆண்டுகால இலக்கிய சேவையையும், எழுத்தாளர் குரு அரவிந் தன் ஐம்பது ஆண்டுகால இலக்கிய சேவையையும் தமிழ் இலக்கிய உலகில் இதுவரை ஆற்றிப் புகழ் பெற்றிருக்கிறார்கள். தமிழ் இலக்கிய உலகிற்கு அறிமுகமே தேவையில்லாத இவர்கள் இருவரும் ஒருவ ரைப் பற்றி ஒருவர் அவ்வப்போது குறிப்பிட்டுச் சுவாரஸ்யமாக எழுதிய சில வரிகளை இங்கே தருகின்றேன்:




**- சுலோச்சனா அருண் -**

இதோ எழுத்தாளர் அ. முத்துலிங்கம் பற்றி எழுத்தாளர் குரு அரவிந்தன் இலங்கையில் இருந்து வெளி-வரும் 'தினக்குரல்' பத்திரிகையில் எழுதிய கட்டுரையில் இப்படி எழுதியிருந்தார்: 'சுமார் பதினைந்து வருடங்களுக்கு முன்பாக இருக்கலாம், அமெரிக்காவில் இருந்து கடிதம் ஒன்று எனக்கு வந்திருந்தது. அந்தக் கடிதம்தான் எனக்கும் எழுத்தாளர் அ. முத்துலிங்கம் அவர்களுக்குமான இலக்கியத் தொடர்பை எங்களுக்குள் முதலில் ஆரம்பித்து வைத்தது. இந்தத் தொடர்பை ஏற்படுத்தி வைத்த அவருடைய மகள் எழுதிய கடிதத்தை தமிழ் மொழிக்கு மொழி மாற்றித் தருகின்றேன். 'நீங்கள் தமிழ் மொழிக்கு ஆற்றும் உதவிக்கு நன்றி. எனது தந்தை வெளி நாடுகளில் இருந்ததால், என்னால் எனது தாய் மொழியான தமிழ் மொழியில் பாண்டித்தியம் பெறமுடியவில்லை. அந்தக் குறை எனது மனதில் எப்பொழுதும் இருக்கிறது. எனது மகளுக்கும் அந்தக் குறை இருக்கக் கூடாது என்பதால் அவர் தமிழ் மொழி கற்பதற்குத் தேவையான சரியான சாதனங்களைப் பல இடங்களிலும் தேடிக் களைத்துப் போனேன். கனடாவில் இருக்கும் அப்பாவின் நண்பர் ஒருவர் மூலம் தங்களின் 'தமிழ் ஆரம்' பாடல்கள் அடங்கிய குறுந்தட்டுக் கிடைத்தது. அருகே உள்ள கனடாவில் தயாரிக்கப்பட்டது என்று தெரியாமல், இது போன்ற பாடல்கள் அடங்கிய குறுந்தட்டிற்காக எங்கோ எல்லாம் நாங்கள் இதுவரை தேடினோம். இப்போதெல்லாம் எனது மகள் தினமும் தாங்கள் தயாரித்த இந்தப் பாடல்களையே கேட்டு மகிழ்ந்து போகிறாள். இசை மூலம் மொழியைப் புகுத்துவதில் தாங்கள் எடுத்துக் கொண்ட முயற்சி பாராட்டுக்குரியது. அதுமட்டுமல்ல, தங்கள் குறிக்கோள் வெற்றியும் அடைந்திருக்கிறது என்பதற்கு, இந்தப் பாடல்களை மிகவும் விருப்போடு கேட்கும் எனது மகளே சாட்சி. மீண்டும் தங்களுக்கும், இந்த முயற்சியில் துணை நிற்றவர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றி.'

அந்தக் கடிதம் அமெரிக்காவில் இருந்து வந்திருந்தது. எழுதியது வேறுயாருமல்ல பிரபல ஈழத்து எழுத்தாளர் திரு அ. முத்துலிங்கத்தின் அருமைப் புதல்வி தான் ஆங்கிலத்தில் எழுதியிருந்தார். அவரு டைய தமிழ் உணர்வைப் பாராட்டி, நன்றி கூறி அந்தக் கடிதத்திற்குப் பதில் அனுப்பியிருந்தேன். எனது நண்பர் டாக்டர் கதிர் துரைசிங்கத்தின் மூலம் அந்தக் குறுந்தட்டு அங்கே சென்றடைந்ததாகப் பின்பு அறிந்தேன். சந்தோஷமிகுதியால் இதைப்பற்றி அதிபர் கனகசபாபதியிடம் குறிப்பிட்டபோது அவர்

இன்னுமொரு மகிழ்ச்சியான செய்தியையும் சொன்னார். அதாவது நண்பர் வ. ந. கிரிதரன் ஆசிரியராக இருக்கும் 'பதிவுகள்' என்ற இணையத்தளத்தில் 'தமிழ் ஆரம்' குறுந்தட்டைப் பற்றி திரு. அ. முத்துலிங்கம் அவர்கள் எழுதியிருப்பதாகவும் அதை வாசித்துப் பார்க்கும் படியும் குறிப்பிட்டிருந்தார். 'மூன்று குருட்டு எலி' என்ற தலைப்பில் அதைப் பற்றி அ. முத்துலிங்கம் அவர்கள் எழுதியிருந்தார். கையிலேயே வெண்ணெய்யை வைத்துக் கொண்டு உலகமெல்லாம் இப்படியான ஒரு குறுந்தட்டுக்காகத் தாங்கள் தேடியலைந்த கதையை அவர் மிகவும் அருமையாக நகைச்சுவை உணர்வோடு அங்கே குறிப்பிட்டிருந்தார்.

குரு அரவிந்தனின் 25 வருடகால கனடிய இலக்கிய சேவைப்பாராட்டில் திரு. அ. முத்துலிங்கம், எழுத்தாளர் குரு அரவிந்தனின் தமிழ் மழலைப் பாடல்கள் பற்றிக் குறிப்பிட்டிருந்ததைப் பாருங்கள்: '2003ம் ஆண்டு என்று நினைக்கிறேன். தமிழ் மழலைப் பாடல்களைத் தேடி நான் ரொறொன்ரோவில் பல கடைகளில் ஏறி இறங்குகிறேன். இந்தியாவில் எழுத்தாள நண்பர்களுக்கும் எழுதுகிறேன். அங்கேயும் தமிழ் மழலைப் பாடல்கள் இல்லை என்ற விடை கிடைக்கிறது. என்னால் நம்ப முடியவில்லை. ஆங்கிலத்தில் இருக்கும் பல குழந்தைப் பாடல்கள் வன்முறையை தூண்டுபவையாக இருக்கின்றன. 'மூன்று குருட்டு எலி' என்ற குழந்தைப் பாடலில் 'கமக்காரன் மனைவி எலியின் வாலை கத்தியால் வெட்டினாள்' என்று வருகிறது. என்னை அதுதான் தமிழ் பாடல்களைத் தேடி அலைய வைத்தது. குழந்தைக்கு எலி, பூனை, நாய், யானை, வண்டு எல்லாமே பிடிக்கும். குழந்தை கேட்கிறது 'ஏன் வாலை வெட்டினார்?' என்று. எப்படி பதில் சொல்வது? அப்பொழுதுதான் தற்செயலாக குரு அரவிந்தனின் மழலைப் பாடல் குறுந்தகடு கையில் கிடைக்கிறது. அழகிய பொருள் பொதிந்த பாடல்கள். இன்னும் அழகான மெட்டுகள். குழந்தைகள் மட்டுமல்ல, பெரியவர்களும் அவற்றினால் ஈர்க்கப்பட்டனர். தமிழ் நாட்டின் முக்கிய எழுத்தாளர் எஸ். ராமகிருஷ்ணன் இந்தக் குறுந்தகடு பற்றி வியந்து எனக்கு எழுதியிருக்கிறார். கடும் உழைப்பின் பின்னால் இந்த மழலைப்பாடலை எழுதிக் குறும்தட்டாக வெளியிட்ட குரு அரவிந்தனை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.'

அ. முத்துலிங்கம் அவர்கள் கனடாவிற்கு வந்தபின்தான் அவரை நேரடியாகச் சந்திக்கும் வாய்ப்பு பல தடவைகள் தனக்குக் கிடைத்ததாகவும், சிறுவர்களுக்கான தனது புத்தகங்கள் வெளியிடப்படும் போது, ஒவ்வொரு முறையும் தானே நேரில் வந்து பாராட்டிப் புத்தகங்களைப் பெற்று, பின் அதைப் படித்துவிட்டு அந்தப் புத்தகம் பற்றிய விமர்சனங்களையும் தொலைபேசி மூலம் எடுத்துச் சொல்லுவார் என்றும், கனடிய மண்ணில் தமிழ் மொழி நிலைத்து நிற்க வேண்டும் என்ற அவரது ஆர்வம் பற்றியும் குரு அரவிந்தன் குறிப்பிட்டிருந்தார்.

'உறங்குமோ காதல் நெஞ்சம்' என்ற குரு அரவிந்தனின் நாவல் பற்றிக் 'கனடா தமிழர் இலக்கியம்' என்ற நூலில் உள்ள கட்டுரையில் அ. முத்துலிங்கம் குறிப்பிடும் போது, 'குரு அரவிந்தனின் நாவல் ஒன்றில் வரும் பாத்திரம் சாந்தி. அவள் பள்ளிக்கூடம் சென்று வரும் மாணவி. ஒருநாள் பரீட்சை எழுதிவிட்டு வீட்டுக்கு திரும்பும்போது நேரமாகிவிடுகிறது. சிங்கள ராணுவத்தின் காவல் அரணைக் கடந்தபோது அவள் காணாமல் போய்விடுகிறாள். அவளைத் தேடிச் சென்று அவளுடைய தகப்பன் பொறுப்பான ராணுவ அதிகாரியை சந்தித்து தன் மகளைப்பற்றி கேட்கிறார். அவர்களிடம் பதில் இல்லை. திடீரென தகப்பனும் காணாமல் போய்விடுகிறார். இப்படி நாவல் விறுவிறுப்பாகப் போகிறது. ஒரு காலகட்டத்து யாழ்ப்பாண வாழ்கையின் ஒரு கூறு வரலாறாக மாறிவிடுகிறது. நூறு வருடம் கழிந்த நிலையில் 'உறங்குமோ காதல் நெஞ்சம்?' என்ற இவரது இந்நாவலைப் படிக்கும் ஒருவர் கண் முன்னே போர்க்கால யாழ்ப்பாணமும், மக்களும், அவர்கள் வாழ்வும், வலியும் நிதர்சனமாக விரியும். குரு அரவிந்தனின் புனைவு சரித்திரமாக மாறும் தருணம் அது.'

உண்மைச் சம்பவங்களைக் கொண்ட ஒரு வரலாற்றுப் புனைவு எப்படி சரித்திரமாக மாறுகிறது என்பதை எவ்வளவு சிறப்பாக அ. முத்துலிங்கம் எடுத்துச் சொல்லியிருந்தார். பாருங்கள், அவர் மேலும் குரு அரவிந்தனின் படைப்பிலக்கியம் பற்றிக் குறிப்பிடும் போது,

'நான் சிறுவனாய் வளர்ந்த கிராமத்தில் ஐஸ்கிரீம் அபூர்வமாக எப்போதாவது சாப்பிடக் கிடைக்கும். விருந்துகளில் அல்லது திருவிழாக்களில் இதைச் சாப்பிடும் சந்தர்ப்பம் அமையும். கூம்புகளின் மேல் உருண்டையாக மென்சிவப்பு, மஞ்சள் அல்லது பச்சை நிறங்களில் கிடைப்பதை உருகி வழிய வழிய சாப்பிட்டு முடிக்கவேண்டும். இதன் சுவையையும் சுகத்தையும் தாண்டி இது சாப்பிடும்போது ஒர் பதற்றம் இருக்கும். இதைச் சாப்பிட்டால் முடிந்துபோகும். சாப்பிடாமல் விட்டாலும் உருகி அழிந்துவிடும். சுவை இன்பத்தை நீடிக்க முடியாது. அதனால் கிடைக்கும் இன்பத்திலும் பார்க்க அது கொடுக்கும் ஏக்கமும் அவலமுமே கூடுதலாக இருக்கும். எனக்குக் கிடைத்த குரு அரவிந்தனின் புனைவுகளைப் படித்தபோது எனக்கும் இந்த அனுபவம் கிடைத்தது, அதாவது முடிந்துவிடுமோ என்று அடிக்கடி மீதிப் பக்கங்களை எண்ணிப் பார்க்க என்னைத் தூண்டியது. படித்தால் முடிந்துவிடும், ஆனால் படிக்கவேண்டும் என்ற ஆவல் மனதை நிரப்பியிருக்கும். புனைவுகளில் சுவை முக்கியம். அதனிலும் முக்கியம் அவை

வரலாற்றின் ஒரு கூறை பதிந்து அதை அழியவிடாமல் காப்பது. எங்கள் சரித்திரத்தை அவை நினைவூட்டிக்கொண்டே இருக்கும். இந்த இரண்டும் குரு அரவிந்தன் படைப்புகளில் நிறைந்து கிடக்கின்றன.’

இதோ, அ. முத்துலிங்கம் பற்றி குரு அரவிந்தன் என்ன சொல்கிறார் என்று பாருங்கள்:

திரு. அ. முத்துலிங்கம் அவர்களிடம் எனக்குப் பிடித்த விடையம் என்னவென்றால் ஒருவருடைய திறமையைப் பாராட்ட அவர் என்றும் பின் நின்றதில்லை. முக்கியமாக கனடிய இளம் தலைமுறையினரை ஊக்குவிப்பதில் எப்பொழுதும் முன்நிற்பார். என்னுடைய கதைகளோ அல்லது கட்டுரைகளோ தனக்குப் பிடித்ததாக இருந்தால் உடனே தொலைபேசி எடுத்துப் பாராட்டுவார். குறிப்பாக ஆனந்தவிடனில் வெளிவரும் எனது கதைகளை உடனே வாசித்துவிட்டு அதைப் பற்றி பாராட்டுவார். கலைமகள் இதழின் ராமரத்தினம் குறுநாவல் போட்டியில் பரிசு கிடைத்தபோதும் தொலைபேசி மூலம் பாராட்டியிருந்தார். ஈழத்து நெய்தலும் மருதமும் என்ற தொடர் கட்டுரையில் சோமசுந்தரப் புலவர் பற்றிக் கனடா உதயன் பத்திரிகையில் குறிப்பிடும் போது, ‘ஆடிப்பிறப்பிற்கு நாளை விடுதலை’ என்ற பாடல் பற்றியும், ‘கத்தரித் தோட்டத்தில் காவல் புரிகின்ற சேவகா’ என்ற பாடல் பற்றியும் அந்தவாரம் குறிப்பிட்டிருந்தேன். ‘கத்தரித் தோட்டத்தில் காவல் புரிகின்ற சேவகா’ என்ற பாடல் வரிகளுக்கு நான் எமது மண்ணைக் காக்கும் போராளிகளோடு ஒப்பிட்டு எழுதியிருந்தேன். அதை வாசித்துவிட்டு அவர் என்னைப் பாராட்டியது மட்டுமல்ல, ஈழத்துப் புலவர் களின் திறமைகளை நாங்கள்தான் வெளிக்கொண்டு வந்து காட்டவேண்டும் என்ற தனது ஆதங்கத்தையும் அப்போது வெளிப்படுத்தினார். ஈழத்து தமிழ்ச் சான்றோர்கள் பற்றிய கட்டுரையைத்தொடரை இப்போது நான் எழுதிக் கொண்டிருப்தற்கு அவரது தூண்டுதலும் ஒரு காரணமாகும்.’

அ. முத்துலிங்கம் தனது வாழ்த்துரையில் குரு அரவிந்தன் பற்றி மேலும் இப்படிக் குறிப்பிடுகின்றார்.

‘குரு அரவிந்தன் பலராலும் அறியப்பட்ட எழுத்தாளர். 25 வருடங்களுக்கு மேலாக கனடாவில் எழுதி-வருகிறார். ஏழு சிறுகதை தொகுப்புகள், ஏழு நாவல்கள், ஒலிப்புத்தகங்கள், நாடகங்கள், சினிமா கதை, வசனம், சிறுவர் இலக்கியம் என இதுவரை நிறையவே படைத்திருக்கிறார். இலங்கை, இந்தியா, கனடா, ஐரோப்பா நாடுகளில் இவருக்கு அறிமுகம் தேவையில்லை. அவருடைய வாசக வட்டம் உலகளாவியது. தமிழ்நாட்டின் புகழ்பெற்ற வருடாந்த மலர்களில் இவருடைய புனைவுகள் பலதடவை வெளிவந்திருக்கின்றன. புனை கதைகள் பல பிறமொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டு பாராட்டைப் பெற்றிருக்கின்றன. தமிழர் தகவல் விருது, யுகமாயினி பரிசு, கலைமகள் பரிசு, விகடன் பரிசு, உதயன் பரிசு, சி.டி.ஆர் வானொலி பரிசு, ஜனகன் பிக்சேஸ் விருது, போன்ற பல பரிசுகளையும், விருதுகளையும் பெற்றிருக்கிறார். ஓர் அரசன் தன் நினைவாக சிலை எழுப்பலாம். ஒரு ஜனாதிபதி தன் பெயரால் நெடுஞ்சாலை அமைக்கலாம். ஒரு நகரபிதா ஒருவர் பெயரால் பூங்கா உண்டாக்கலாம். ஓர் எழுத்தாளர் என்ன செய்வார்? அவர் தன் படைப்புகளை உலகத்துக்கு விட்டுச் செல்வார். எழுத்தாளருடைய ஆயுளையும் தாண்டி அந்தப் படைப்புகள் நிலைத்து நிற்கும். அவர் பெயரைச் சொல்லும். எழுத்தாளருக்கு அவருடைய எழுத்தைவிட சிறந்த நினைவுச் சின்னம் என்ன இருக்கமுடியும்? கனடாவில் ஆக்க இலக்கியம் படைக்கும் குரு அர விந்தன் சோர்வடையும் நேரம் இதுவல்ல. இந்த வேகம் குறையாமல் இன்னும் பல வருடங்கள் அவர் தொடர்ந்து எழுத என் வாழ்த்துக்கள்.’

தமிழ் இலக்கிய உலகில் தங்கள் திறமையால் அரிய பல சாதனைகளைக் கடந்த அறுபது ஆண்டுகளுக்கு மேலாகப் படைப்பிலக்கியம் படைத்துக் கொண்டிருக்கும் எழுத்தாளர் அ. முத்துலிங்கம், மற்றும் ஐம்பது ஆண்டுகாலமாகப் படைப்பிலக்கியம் படைத்துக் கொண்டிருக்கும் எழுத்தாளர் குரு அரவிந்தன் ஆகியோரது சாதனைகளை நிச்சயமாக நாம் பாராட்டியே ஆகவேண்டும். குரு அரவிந்தன் அவர்கள் 2025 ஆம் ஆண்டு கனடாவில் வாழ்நாள் சாதனையாளர் விருதைப் பெற்றிருந்தது மட்டுமல்ல, தொடர்ந்து கடந்த 25 வருடங்களாக இலக்கியத்திற்காகப் பரிசும் விருதும் ஒவ்வொரு வருடமும் பெற்றவர். இவர்கள் பெற்ற பரிசுகளும், விருதுகளும், பாராட்டுகளும் மிகவும் பெறுமதியானவை மட்டுமல்ல, ஈழத்தமிழர்களுக்குப் பெருமை சேர்ப்பனவாகவும் இருக்கின்றன. எனவே ஆக்க இலக்கியம் படைக்கும் இவர்களை இச் சந்தர்ப்பத்தில் பாராட்டுவது மட்டுமல்ல, இவர்களது இலக்கியப் பணிக்குப் பின்னின்று உழைக்கும் இவர்களது குடும்பத்தினருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் நன்றி கூறி, இவர்களது தமிழ் இலக்கியப்பணி மேலும் பரந்து விரிந்து இன்னும் பல உலக சாதனைகளைப் படைக்க வேண்டும் என்று கனடிய தமிழ் இலக்கிய ஆர்வலர்களின் சார்பில் வேண்டிக் கொள்வது மட்டுமல்ல, வாழ்க வளமுடன் என மீண்டும் வாழ்த்துகின்றோம்.

இல்லற வாழ்வின் இனிமை நன்மழலைகளைப் பெற்று நற்பிரசையாக நற்சமூகத்திற்குக் கொடுத்தலே ஆகும்! இவ்வகையில் குழந்தை வளர்ப்பு இப்போதுதான் உளவியல் அடிப்படை ஆய்வுகள். ஆராய்ச்சி முடிவுகள் என தம்பட்டம் அடிக்கின்றன! ஆனால் ஆதி காலங்களில் எமது பாட்டன், .பாட்டி, பூட்டி என்றுதானே வளர்த்து வந்தனர்! இவர்களின் அன்றைய வளர்ப்பிலிருந்தே இன்றைய குழந்தை இலக்கியங்கள் தோன்றின.

குழந்தை இலக்கியம் என்பதற்கு பல்வேறு வரைவிலக்கணங்கள் முன் வைக்கப்பட்டாலும், நாட்டார் வழக்கின்படி, குழந்தை இலகுவில் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் கூறப்படும் கதை, பாடல், ஆடல். மொழி வெளிப்பாடு எனக்கூறலாம்!

பழைய காலத்திலே சங்க இலக்கியமே வாய்மொழி இலக்கியமாக இருந்ததற்கான ஆதாரங்கள் உண்டு. இவை ஏட்டிலே எழுதாது நாட்டுப்புற இலக்கியமாக தாய்மார் வாய்மொழி மூலமாகவே வளர்த்து வந்தனர்! கற்றல் வடிவம் வாய்மொழியாகவே நடந்தது! கடத்தப்பட்டது!



# குழந்தை இலக்கியமும்.சமுதாயமும்

– தம்பிலுவில் கனகசாந்தி –

கட்டுரை

இந்தவகையில் குழந்தைகள் புரிந்து கொள்ளக்கூடிய எளிய நடையிலே அமைந்து வயதிற்கும். அறிவிற்கும் ஏற்ற சொற்களையும். கருத்துக்களையும் கொண்டதாக இருந்தது! இதிலே கடினத்தன்மை கிடையாது!

கொலை. கொள்ளை. களவு. பழிக்குப்பழி வாங்கல். கூடா நடத்தை என்பன இடம்பெறாது நீதிக்கருத்துகளை கதைகளாகக் கூறும்போது குழந்தைகள் கதையோடு ஐக்கியமாகி உணர்வோடு ஒன்றி தம்மைத்தாமே நெறிப்படுத்திக்கொள்வர்!

ஆக குழந்தைக்குப் பயனுள்ள. வாழ்வை நெறிப்படுத்தும் கருத்துள்ள கண்ணோட்டத்தைக் கொண்டே குழந்தை இலக்கியம் அமைய வேண்டும்! இதனையே எம்முன்னோர் கதைகள் மூலம் படைத்தனர்! குழந்தைகள் படிப்பதற்கே குழந்தை இலக்கியம் என எண்ணுவது தவறு!

எல்லோரும் படிக்க வாசிக்கத் தெரியாத காலத்திலேயே கதைமொழி இலக்கியம் தோன்றி விட்டதென்பதே உண்மை! இதற்கும் அறிவு. புலமை. ஆளுமை. பொறுமை. பொறுப்பு. பிழையற்ற சொல்லாடல். என்பன புகுத்தப்பட வேண்டும்!

இப்படிப்பட்டவைகளைக் கொண்டே தற்போது குட்டிக்கதை நாவல். கட்டுரை. துணுக்கு. நாடகம். கவிதை என்பன உருவாக்கம் பெற்று வருகின்றன! ஆனாலும் அவைகள் பூரணமாகக் குழந்தைகளைச் சென்றடைய நாமே பெரும்பங்கு வகிக்க வேண்டியவர்களாக உள்ளோம்!



- மு. மங்கையர்க்கரசி -

1. மலையின் உச்சி
மிகவும் குளிர்ச்சியாக இருக்கிறது
பனிப் பொழிவு

2. உயர்ந்த மலை
பாதை உச்சிவரை தொடர்கிறது
தேயிலைத் தோட்டம்

3. யாசகர்கள் எண்ணிக்கை
பெருகிக் கொண்டே இருக்கின்றன
வேலையில்லாத பட்டதாரிகள்

4. மிதக்கும் படகு
நதியில் சுமந்து செல்கிறது
அக்கரையில் சேர்க்க

# ஹைக்கூ கவிகள்



## நிழல்

- ராஜ் ஆரோக்ககிய சாமி -

மதுராபுரி நகர்,
திருச்சி

நிழல் ஒளியின் எதிர்ப்பக்கம் மட்டுமல்ல

நினைவுகள், உறவுகள், தனிமை, அதிகாரம், அச்சம், அன்பு என மனித வாழ்வின் அமைதியான மொழி.

அந்த மௌன மொழியின் சில தருணங்கள் இத்தொடர் ஹைக்கூக்கள்.

1.

காற்று வீசும் போது

அசைந்து நீள்கிறது

தரைநிழல்

2.

திருவிழா தெரு

மிதிபடுகின்றன

வண்ண நிழல்கள்

3.

மின்தடை இரவு

திடீரென பெரிதாகிறது

பூனை நிழல்

4.

செல்பி எடுக்க

பின்னால் சிரிக்கிறது

நண்பன் நிழல்

5.

கடற்கரை மாலை

அலை அழித்துச் செல்கிறது

காதலர் நிழல்

6

தேர்தல் மேடை

கொடியைவிட பெரிது

தலைவர் நிழல்

7.

மின்விளக்குக் கீழ்

தனியாக நீள்கிறது

முதியவர் நிழல்

8.

மழை நின்றது

குடையோடு நடக்கிறது

ஒரு நிழல்

9.

சுடுகாட்டு பாதை

ஒரு கணம் நின்றுபோகிறது

என் நிழல்




அன்னையின் வயிற்றில்
கருவாக உருவாகி
ஆறறிவு உயிராக
அகிலத்தில் அடிவைத்து
அழகாக தொடங்கும்
ஆண்டவன் படைப்பு...
மழலை மொழியில்
மனங்களைக் கவர்ந்து
மனையை விட்டு
வகுப்பறை தொட்டு
மாணவப் பருவத்தை
கல்வியால் கடந்து
மனமது அலைபாயும்
இளமையில் மூழ்கி
மணநாள் எட்டி
நீளும் பாதை...
காண விரும்பா
கசப்பிலும் வீழ்ந்து
கண்ணீர் துளிகளை
உள்ளே மறைத்து
எண்ணிய இலக்கை
நோக்கி நகரும்...
பண்ணிய பாவங்களைக்
குறைக்க நற்செயலால்
புண்ணியம் சேர்த்து
புவியில் உலவும்...
புத்தரைத் தொடரும்
முதிர்ந்த வயதில்
சொத்து சுகமின்றி
ஒற்றைப் பெயருடன்
மொத்தமாய் முடியும்
வாழ்க்கைப் பயணம்..!




– பாக்கிய பாரதி –

# மௌனமாய் சில நிமிடங்கள்

கவிதை

•

– பிரேம் சுரேஷ் –



தனிமையின் அமைதியான
மொழியே மௌனம்
சில நேரங்களில் அதுவும் ஊமையாய்

இடிந்து போன நம்பிக்கைகளின்
மத்தியில் அரசியலின் மௌனம்
என்றுமே பூகம்பமாய்

காணமல் போன காடுகளின்
அச்சத்தில் இயற்கையின்
மௌனம் புயலாய்

கடவுளை தரையில் தேடும்
முட்டாள்தனமான ஆன்மீகத்தின்
மௌனம் ஆபத்தாய்

அலைபேசியின் காலடியில்
இளையோரின் அடிமைத்தனம்
இளமையின் மௌனம் வேதனையாய்

ஆசையின் மௌனம் புத்தரின்
காலடியில் அமைதியாய்
தொலைந்தன மௌனத்தின்
மொழிகள் தேடல்களாய்

# மழை தரும் உலகம்

வானின்று பெய்யும் நீர்க்கோட்டின் மழையினால்...
இவ்வுலகம் தானென்றும் தன்னையேச் சுற்றுதே
தன்வழியில் கேளா இயற்கையும் தானுமே
மேனி விரித்திடு மிங்கு பசுமையாய்...

காடுகளின் பயன்களால் கானமது நீரனுப்புதே...
காண்பதே உண்மைகளின் தாரக மந்திரமே...
வானமது பூமியினை ஈரமாய் நனைக்குதே...
கானமயில் தானுமே தோகை விரித்தாடுதே...



- இரஜகை நிலவன் -

மழை இன்றி வளங்களோ பட்டினியால் அழியுமாமே...
தழைக்காதாம் தாவரங்கள் பூவுலகம் எங்கும்...
பசிப்பிணி நல்மழையால் பாரில் ஒழியுமாமே....
இசைந்தே மழையேவா அவனியில் பொங்கும்!

வான்மழை இல்லையெனில் வாழ்வில்லை
எவ்வுயிர்க்குமே...
கான் கூட பாலையாய்க் காட்சியுறுமே...
தேன்சுமந்தே பூந்தென்றல் தேடி வராதே...
வான்முகிலைப் போற்றி வணங்கு தினமுமே...

நிலத்தின் நெடுந்தூர நீர்வளத் தேக்கம்
தலத்தின் உயிர்களைத் தானும் தாங்கிடும்
பண்பட்ட வாழ்வின் பழமையைக் காத்திட
விண்ணின் மழைதனை தினமும் மண்டியிடும....

வாழ்வை வளர்த்திடும் வானத்தின் நீர்தானும்
தாழ்வை அகற்றி தன்மை தனித்திடும்
விண்ணின் கருணை மிகுதியாய் ஓங்கினால்
மண்ணின் மணமே எங்கும் வனப்பு....

மழைதரா வானம் மலட்டை தழுவ
தழைக்காது பூமி தனித்துச் சருகாய்
பிழைக்க உயிரில் பிணைந்தே இயக்கும்
மழையே வானின் விண்ணக மதிப்பு...

# பாடசாலையின் வளர்ச்சியில் பெற்றோரின் வகிபாகம்

## கட்டுரை

### ஜெனனி. மோ





எந்தவொரு சமூக அமைப்பிலும் பாடசாலை ஒரு முக்கிய அங்கமாக அமைகிறது. பாடசாலையின் வளர்ச்சியும், தளர்ச்சியும் சமூகத்தில் முறையே எழுச்சியையும் தாழ்வையும் ஏற்படுத்துகின்றது.

ஒரு சமுதாயத்தின் வளர்ச்சி அங்குள்ள பள்ளிகளின் வளர்ச்சியைப் பொறுத்தே அமையும். "ஆற்றல்களில் மிகச்சிறந்த ஆற்றல் மனித ஆற்றல்" என்றார் மார்'ல் ஸ்டாலின். அத்தகைய மனிதனது மனத்தினைப் பக்குவப்படுத்தி, அவனைப் பண்புள்ளவனாக, நன்னெறியில் செல்பவனாக உருவாக்குவது கல்விக்கூடங்களின் தலையாய பணியாகும்.

பாடசாலைகள் தம் குறிக்கோள்களையும், நோக்கங்களையும் செவ்வனே நிறைவேற்ற வேண்டுமாயின் அது சார்ந்த சமூகத்தின் ஆதரவையும் அங்கீகாரத்தையும் பெற்றிருத்தல் அவசியம்.

பாடசாலையை அதிபரினால் மாத்திரம் திறம்பட செயற்படுத்த முடியாது. அதிபருடன் இணைந்து ஆசிரியர்கள், பெற்றோர்கள் உள்ளிட்ட கல்விச் சமூகம் கூட்டுப்பொறுப்புடன் செயற்படுகின்ற பொழுது பாடசாலை நல்ல முன்னேற்றப் பாதையில் செல்வது மாத்திரமன்றி சமூகமும் நல்ல பெறுபேறுகளை அறுவடை செய்ய முடியும்.

பாடசாலையின் வளர்ச்சியில் பெற்றோரின் பங்கு மிகவும் முக்கியமானது.

1. பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு உதவுதல்.

2. பாடசாலையின் செயற்படுகளில் தீவிரமாகப் பங்கேற்பது.

3. பாடசாலை நிர்வாகத்துடன் இணைந்து செயற்படுவது.

4. பிள்ளைகளின் கல்விசார் விடயங்கள் தொடர்பாக ஆசிரியருடன் தொடர்பில் இருத்தல்.

5. பாடசாலையில் இடம்பெறும் கூட்டங்களுக்குச் சமூகமளித்தல்.

6. பௌதீக , நிதி மற்றும் மனித வள உதவிகளை வழங்குதல்.

7. வெளிக்கள பிரயாணங்களின் போது பங்கெடுத்தல்.

8. மாணவர்களின் ஒழுக்கமான வளர்ச்சிக்கு வழிகாட்டுதல்.

போன்ற பல வழிகளில் பெற்றோர்கள் உதவ வேண்டும்.

பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு உதவுதல்.

---

கல்வியை மாணவன் தாமாக கற்று பரீட்சையிலே சிறந்த பெறுபேற்றைப் பெற வேண்டும் என்று பெற்றோர் சும்மா இருப்பது அவ்வளவு நல்லதல்ல. பெற்றோரின் ஊக்கமும், வழி நடத்துகையும் மாணவரின் போட்டி நிறை கல்வி முறைக்கு அவசியமாகும். நன்கு விடயங்களைத் தெரிந்த, கற்றுக் கொண்ட பெற்றோரும் கூட பிள்ளையின் கல்வியிலே அக்கறை கொள்வது இன்று குறைந்தே போய்விட்டது. சிறிய பிள்ளைகள் மீது காட்டும் அக்கறை போல் வளர்ந்த பிள்ளைகள் மீதும் அக்கறை காட்டப்பட வேண்டும். அவர்களின் வழியிலே அவர்களை விட்டுவிடுதல் தவறானதாகும். கல்வி பற்றியும், அதன் நல்ல நிலைமைகள் பற்றியும் பிள்ளைகளுக்கு எடுத்தரைப்போம். எப்படி படிப்பது? பாடங்களை முடிப்பது? பரீட்சையில் வெற்றியடைவது என்றும் நட்புரீதியாக விளங்கப்படுத்த வேண்டும். நேத்துக்கு தூங்கச் செய்வதுடன், நேரத்துக்கு எழும்பவும் பழக்க வேண்டும்.

பெற்றோர்களின் ஈடுபாடானது மாணவர்களின் பல்வேறுபட்ட வளர்ச்சிகளுடன் தொடர்புடுகிறது.

இவையாவன:

1. கல்வியானது ஓர் முக்கியத்துவமானது என்பதில் வலுவான நம்பிக்கையை ஏற்படுத்தல்.

2. கிரமமான பள்ளி வருகை.

3. கற்றலுக்கான தனிப்பட்ட திறன் மற்றும் சுய செயல்திறன் ஆகியவற்றில் அதிக ஈடுபாடு.

4. பாடசாலை வேலைகளில் அதிக ஈடுபாடு.

5. மேம்பட்ட நடத்தைகள்.

6. சிறந்த சமூக திறன்கள்.

ஆரம்ப கல்வியில் இருந்து உயர்நிலைப் பள்ளி வரை குழந்தைகள் முன்னேறும் போது பெற்றோரின் ஈடுபாடானது பாடசாலை வளர்ச்சிக்கும் கல்விசார் சாதனைக்கும் பங்களிக்கும். எனவே பெற்றோர்களே பிள்ளைகளின் கல்வியில் பாரிய பங்கை வகிப்பதனூடாக கல்வியில் அவர்களது அடைவு மட்டத்தை அதிகரிப்பதற்கு முக்கிய பங்களிப்பினை வகிக்க முடியம்.

பிள்ளைகளின் கல்விசார் விடயங்கள் தொடர்பாக ஆசிரியருடன் தொடர்பில் இருத்தல்.

----------------------------------------------

பிள்ளையின் இரண்டாவது வீடே பாடசாலையாகும். அங்கே அவர்களோடு தொடர்பானவர்களான வகுப்பாசிரியர், அதிபர்களோடு தொடர்பை ஏற்படுத்தி பிள்ளைகள் பற்றிக் அறிய வேண்டும். இரண்டு வாரத்திற்கொரு முறையாவது பாடசாலைக்குச் சென்று ஆசிரியரோடு பேச வேண்டும். அது மேலும் பிள்ளைக்கு உற்சாகமாக அமையும். பிள்ளைகளின் பலம், பலவீனங்களை அறிந்து செயற்படலாம்.

பாடசாலை நிர்வாகத்துடன் இணைந்து செயற்படுவது

----------------------------------------------

பாடசாலை நிர்வாகத்துடன் சுமுகமாகவும், புரிந்துணர்வுடனும் செயற்படுவது அவசியம். பெயர், புகழ், விளம்பரம் ஆகியவற்றைக் கருத்தில் கொள்ளாது பாடசாலை அபிவிருத்திப் பணியில் பாடசாலை நிர்வாகத்துடன் இணைந்து செயற்பட வேண்டும்.

பிள்ளைகளின் கல்விசார் விடயங்கள் தொடர்பாக ஆசிரியருடன் தொடர்பில் இருத்தல்.

----------------------------------------------

பிள்ளைகளைப் பாடசாலையில் சேர்த்ததும் தமது பொறுப்புக்கள் முடிந்து விட்டதாகக் கருதுகின்றார்கள் பெற்றோர்கள் . அவ்வாறு இல்லாது தாமாக வந்து தமது பிள்ளைகளின் கற்றல் செயற்பாடு தொடர்பாக ஆசிரியருடன் உரையாட வேண்டும். பாடசாலை சார்ந்த பெற்றோர்களின் தொடர்பு நெருக்கமாகும் போது பிள்ளைகளின் கற்றல் செயற்பாட்டுத் தன்மைகள் உயர்வானதாக அமையும் என்பது யதார்த்தமாகும்.

மாணவர்களின் ஒழுக்கமான வளர்ச்சிக்கு வழிகாட்டுதல்.

----------------------------------------------

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" என்கின்றார் திருவள்ளுவர். எனவே ஒழுக்கம் என்பது வாழ்வின் அடிப்படை அங்கமாகவே காணப்படுகின்றது. இந்த ஒழுக்கத்தினை மாணவ பருவத்திலேயே கற்றுக்கொள்ள வேண்டும். மாணவர்கள் நாட்டை நிர்ணயிக்கும் சிற்பிகள். பணிவான நடத்தை, ஆசிரியர்களுக்கான மரியாதை, ஒழுங்கான வரவு, கல்வியில் ஆர்வம், இணைப்பாடு விதான செயற்பாடுகளில் ஈடுபாடு, சக மாணவர்களுடன் நடந்து கொள்ளும் விதம் போன்ற அனைத்தும் ஒரு மாணவனின் ஒழுக்கத்தினை சார்ந்ததாகவே காணப்படுகின்றது. கல்வியோடு இணைத்து சிறந்த ஒழுக்கத்தையும் கற்றுக் கொள்ளும் மாணவர்களே பிற்காலத்தில் சிறந்த நிலையில் செழிப்புற்று வாழ்வதனைக் காணலாம்.

எனவே பாடசாலையானது பெற்றோருடன் இருந்து விலகாமலும், பெற்றோர் பாடசாலையின் சகல செயற்பாட்டிற்கும் உறுதுணையாகவும் இருந்தும், பாடசாலை - பெற்றோர் உறவு மேம்பட வேண்டும். இவ்வாறாக பாடசாலை - பெற்றோர் உறவு மேம்படும் பொழுது பாடசாலையை உயர்நிலைக்குக் கொண்டு செல்ல முடியும்.

ஜெனனி. மோ

சிறப்பு கலைமாணி

இந்துநாகரிகத்துறை

யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

**"வானம் இருண்டுவிட்டது...**

**மேகங்கள் முட்டிக்கொள்கின்றன!**

**பூமியில் விழும் ஒவ்வொரு துளியும்,**

**நம் காதலின் சாட்சி!"**

- பாரதிராஜா -

**"கடல் அலைகள் ஓயலாம்,**

**ஆனால் என் இதயத்தில் எழும்**

**உன் நினைவுகள் ஒருபோதும் ஓய்வதில்லை!**

**மரணம் கூட நம்மைப் பிரிக்க முடியாது!"**

- பாரதிராஜா -



# வளர்ப்புத் தாய்..

சிறுகதை

– ந. இரவிச்சந்திரன் பழனி



என்னப்பா . சௌக்கியமா.. ! சாப்பிட்டாச்சா. ...!!! இப்ப எல்லாம். போனில் கூட பேசறதில்லை, அவ்வளவு பிஸியா வீட்ல? எல்லாரும் நலமா? என்று எப்போதும் அன்போடும் பண்போடும் பாசத்துடனும். அழைக்கும் குணசுந்தரி அம்மாவின் குரல் இனி ஒலிக்காது.

ஒரு நாள் அதிகாலை வேளை வந்த அவசர அழைப்பில் அந்த துயரச் செய்தியை பகிர மனம் பதை பதைத்தது. சித்தம் தடுமாற-ியது அடுத்தடுத்த வீடு சிறு குழந்தையாக இருந்தது முதல் பள்ளி கல்லூரிக் காலம் ஏன். .. திருமணமாகி வேலை விசயமாக வெளியூர் சென்றது வரை, ஒரு. வளர்ப்புத்தாய் போல் இருந்தவர், உதவிய-வர், இன்று இல்லை.

தகவல் கேட்டதும் மனம் வலித்தது ரவிக்கு. அன்றாட அலுவ-லகப்பணி, வீட்டுப்பணி, கணவரிடம் சில பல சண்டைகள் பிரச்சனைகள், இடையே குழந்தை வளர்ப்பு, அதனை நல்ல முறை-றயில் படிக்க வைத்தல், மாமியார் நாத்தனார் பிரச்சனை. இத்தனையும் தாண்டி முன்னேறி வந்ததுதான் அவர்களின் பாதை. நானே. சிறுவயது முதலே அவர்களை கண்கூடாக காண்பதால் அவர்கள் பட்ட கஷ்டங்கள் அப்போது புரியவில்லை. இப்போது நினைத்தால் அழுகை வருகிறது. இதற்கிடையே ஆறுதலாக மாறுதலாக எனது படிப்புக்கு உதவி. அவர்கள் இல்ல நிகழ்ச்சிகள் கோவில் விழாக்கள் என எங்கு சென்றாலும், என்னையும் மறவாமல் அழைத்துச் செல்வார்கள். எனது படிப்பு தேர்வு, நான் பெறும் மதிப்பெண்கள், விளையாட்டுகளில் நான் பெறுகிற சிறு வெற்றி என பலதும் கண்டு ஆனந்தம் கொள்வார்கள். ஒரு வகையில் பார்த்தால், நான் செய்த குறும்புகள் அவர்கள் சிறுவயது மகள் செய்கிற குறும்புகள் என அனைத்தையும். மிகவும். ரசிப்பார்கள். அதுவே. அவர்களுக்கான. சிறு ஆறுதலும். மாறுதலும். கூட.

பாசம் நேசம் தானாக வர வேண்டும். அது தேனாக இனிக்க வேண்டும். அது அவர்களிடம் நிறை யவே இருந்தது. எந்தபிரதி பலனும் எதிர்பாராது ஒரு காலகட்டத்தில் நாங்கள் உதவிடக் கூடும் என நினைத்தார்களோ என்னவோ..? சிறுவயதில் கடைக்கு செல்ல, காய் வாங்க, சிறு சிறு மளிகைப் பொருட்கள் வாங்க, டிபன் வாங்க என உதவிய எனது கரங்களால், அவர்களின் இறுதி யாத்திரைக்கும் உதவ வேண்டியது வந்தது.

ஒரு தாய்க்கு மகன் செய்யும் கடமையாக என் வளர்ப்புத்தாயார்க்கு நான் சில சடங்குகளை ஓர் பெறாத பிள்ளையாகச்செய்ய வேண்டி வந்தது. பிறந்தது, வளர்ந்து, திருமண பந்தம் வரை ஒருமித்து இருந்து வேறு வழியின்றி வெளியூர் வாசம் என்றான பின்னால், அவர்களை அடிக்கடி சந்திக்க முடியாமல் போனிலும் கடிதத்திலும் என்றேனும் ஓர் நாள் ஊர் செல்லும் போதும் சந்திப்பேன். எனக்கு பிடிக்கும் என அவர்கள் எனக்கு அடிக்கடி செய்து தரும் சந்தகை, பூரி, மசால் என பலதும் உபசரிப்பில் மறவாமல் இடம் பெறும்.

மரணம். என்கிற ஒற்றை வார்த்தையை கேள்விபட்டவுடன், ஆதி முதல் அந்தம் வரையிலான நினைவுகள் நிழலாட, நினைத்தாலே இனிக்கும் என்ற நிலை மாறி, பயம் கலந்த மரியாதையே ஞாபகம் வருகிறது. போலித்தனமில்லாத உண்மையான பாசமான பேரன்பு சிலரிடம் மட்டுமே சாத்தியம். அது, இன்னும் ஓர் பாதுகாப்பு கவசம், நம்மை நேசிக்கும் உறவுகளை நாமும் மனதார நேசிப்போம். அவர்களின் தேவை பணம் காசல்ல, ஆறுதலான நலம் விசாரிப்பு மட்டுமே இன்னொரு நிழலாக வளர்ப்புத் தாய், என்றும் என்னுடன் தொடர்வார்கள்...

முற்றும்



# மாமனைத்தேடி

- லியாகத்அலி -

வயலோர வரப்பினிலே முத்துபோல பொண்ணு

மாமனத்தான் தேடுதடி ஒத்தயில நின்னு

கரிசனமா கஞ்சிக்கொண்டு

வரும்போது மாமா

தரிசனமே காட்டாம தள்ளி நிக்கலாமா

அருகிருந்து ஊட்டிவிட்டு

ரசித்ததெல்லாம் வீனா

நடந்தகதை அத்தனையும் கனாவுல தானா

பவளவாய் இதழ்மீது அன்றுதந்த முத்தம்

பகலிரவா நெனப்பால தூங்காம நித்தம்

சிறகடிக்கும் ஆசைகளை மனசில்வச்சு பூட்டி

ஒனக்காக கத்திருக்கேன் காதல் சீமாட்டி

ராசாவின் மடிசாய ஏங்கியே ராணி

பூவாட்டம் வாடுதே தடுமாறுதே தோணி

ராசாத்தி உள்ளத்துல ராசாங்கம் செய்யும்

பேரன்பை எம்மீது பெருமழையா பெய்யும்

அத்தானை கட்டச்சொல்லி அழைக்குதடி தோழி

முந்தானை ஓரத்துல முடிஞ்சிவச்ச தாலி

தகப்பனை போற்று

தாயே வணங்கு

இயற்கை அழகு வெளிப்படும்

தகப்பனை கேவலப்படுத்தாதே

தாயே அழகு படுத்தாதே

இயற்கை அழகை சிதைக்காதே

**- மாப்பிள்ளை மிரன்முகைதின் -**



# நெஞ்செமெலாம் நீமட்டுமே

- கனல்கவி

சென்னிமலை அ.சீனிவாசன்

கண்ணாலே கவிதைபேசிக் கவுத்தாளே அத்தமகளே

கண்டாங்கிச் சேலையில மயக்கிய கள்ளியே

ஆயிரமாயிரம் கதைபேசிக் களித்தோமே ஒண்ணாவே

பாயிரம் பாடவா என்னுசுரான காதலியே

பார்த்தும் பார்க்காமலே போவதென்ன பைங்கிளியே

இரக்கமே இல்லையாடி தனிமையில் தவிக்கிறேனே

அச்சுவெல்லப் பேச்சுக்காரி அயிரமீனுக் கண்ணழகியே

வைச்சகண்ணு விலக்காமலே பார்ப்பதென்ன தேவதையே

மாந்தோப்புக்கு வந்திடடி அச்சாரத்தைக் கொடுக்கவே

தென்னந்தோப்புக் குளுமையில் தேத்தண்ணி குடிப்போமடி

சம்மதத்தைக் கூறுபுள்ள பரிசம்போட வாரேனடி

அத்தமாமா சம்மதத்தோடு நாளுங் குறிக்கலாமடி

கூரைப்பொடவை வாங்கிடறேன் பொன்னாலே தாலியுந்தான்

ஊருமெச்சக் கலியாணம் சிறப்பாவே நடத்திடலாம்

செவளைக்காளை வண்டியிலே சோடியாப் போகலாமடி

வெவசாயத்தில செயிப்போமடி சேர்ந்துழைக்க யோகமடி

# நல்ல நூல்கள்
## எதிர்கால பொக்கிஷங்கள்

கவிதை

- றிஹானாஹ் முகம்மட் காசிம் -

சாய்ந்தமருது

நூல்கள் அறிவை விரிவுபடுத்துகின்றன
அனுபவம் இன்றி கற்றுக் கொள்ள
முடியாத விஷயங்களை புரிய வைக்கின்றன
வாழ்க்கை வழிகாட்டியாக செயல்படுகின்றன
மனிதனின் சிந்தனை திறனை மேம்படுத்தகின்றன
மொழி கற்பனை மற்றும் படைப்பாற்றலை
வளர்க்கின்றன

காலங்கடந்தாலும் அதன் அறிவு அழியாது
வையகத்தின் எந்த மூலையிலும் உள்ள
அறிவை எளிதில் வழங்கும்
அமைதியான நண்பனை போல்
எப்போதுமே துணை நிற்கும்
நூல்கள் பேசாது
ஆனால் வாழ்க்கையை மாற்றும்

அறிவின் கதவை திறக்கும் சாவி
ஒரு நூலை வாசிப்பது
வாசிப்பது ஆயிரம் வாழ்க்கைகளை
வாழ்வதற்கு சமம்
நல்ல நூல்கள் எதிர்கால பொக்கிஷங்கள்
நல்ல நூல்கள்
மனிதனின் எண்ணங்களை உயர்த்தும்
அமைதியான ஆசான்கள்

இன்று படிக்கும் நல்ல புத்தகம்
நாளைய வெற்றியின் விதை
செல்வம் அழியலாம்
ஆனால் நூல் அறிவு என்றும் அழியாது
புத்தகங்கள் பேசாது
ஆனால் வாழ்வில் பேச கற்று தரும்
நல்ல நூல்கள் மனதை செம்மைப்படுத்தி
மனிதனை மேம்படுத்தும்

நல்ல ஒரு புத்தகம்
நூறு நண்பர்களுக்கு சமம்
நூல்கள் அறிவை மட்டும் அல்ல
ஒழுக்கத்தையும் வளர்க்கின்றன
வாசிப்பு பழக்கம்
வாழ்க்கையை வெளிச்சமாய் மாற்றும்
எதிர்கால தலைமுறைக்கு நாம் தரும்
சிறந்த பரிசு நல்ல நூல்களே

புத்தகங்களை நேசிப்பவன் எப்போதும்
தனிமையில் இருப்பதில்லை
நல்ல நூல்கள்
காலத்தை தாண்டி
மனிதனை வழி நடத்தும் பொக்கிஷங்கள்
அறிவு சேர்க்கும் இடம் நூலகம்
அறிவை வளர்க்கும்
கருவி புத்தகம்

நல்ல நூல்கள் வாழ்க்கை பயணத்தில்
வழிகாட்டும் விளக்குகள்
வாசிக்கும் ஒவ்வொரு பக்கமும்
வெற்றிக்கான ஒரு படி
புத்தக வாசிப்பு
மனிதனை சிந்திக்கவும்
சாதிக்கவும் தோன்றும்

– டாக்டர் புட்பா கிறிட்டி –



ஆன்மீக வாழ்க்கைக்கு வருவதால் என்ன பயன்?

சுவாமி விவேகானந்தரிடம் இந்தக் கேள்வியைக் கேட்டான் ஒரு அமெரிக்கச் சிறுவன். அவனைப்பார்த்து

“நீ இந்த உலகில் எதைக்கண்டு அதிகம் பயப்படுகிறாய்” எனக் கேட்டார் சுவாமி விவேகானந்தர்.

“சந்தேகமில்லாமல் எல்லா மனிதர்களையும் போல் நான் மரணத்தைக் கண்டுதான் பயம் கொள்கிறேன்.” எனச் சொன்னான் சிறுவன்.

“நீ ஆன்மீக வாழ்வுக்கு வந்தால் அந்த மரணபயத்தை விரட்டி மரணத்தைக்கூட நேசிக்க நான் கற்றுத்தருவேன்.” என்றார் விவேகானந்தர்.

பின்னர் விவேகானந்தர் அவனுக்கு ஒரு கதை சொல்லி அவனுக்கு அதனைப் புரிய வைத்தார்.

ஒர் அரசன் வினோதமான போட்டி ஒன்றை அறிவித்தான்.

ஆடு ஒன்றை அரசன் தருவான். ஒரு மாத இடைவெளிக்குப் பிறகு அந்த ஆட்டினைத் திருப்பி அரசனிடம் கொடுக்க வேண்டும். அத்துடன் கூடவே

அரசன் ஒரு நிபந்தனையும் விதித்தான்.

அரசனிடமிருந்து ஆட்டை வாங்கும் போது அதன் எடை எவ்வளவு இருந்ததோ அதே எடையில் கொடுக்கும் போதும் இருக்க வேண்டும் என்பதே அந்த அரசனின் நிபந்தனை.

எடை கூடவோ குறையவோ கூடாது. இதுதான் போட்டி. போட்டியில் தோற்றால் தண்டனை. வென்றால் பல கிராமங்கள் பரிசாகக் கிடைக்கும் என அறிவித்தான் அரசன்.

# எமது மறுவாழ்வின் ஆரம்பம்

போட்டியில் வெல்வது எப்படி? அனைவரும் குழம்பினார்கள்.

உணவு அளிக்காமல் இருந்தால் எடை குறையும். உணவு அதிகம் அளித்தால் எடை கூடும். எப்படி உணவு கொடுத்தாலும் எடை ஒன்றில் கூடும். அல்லது குறையும். எனவே அந்தப் போட்டியை ஏற்க எவரும் முன்வரவில்லை. கடைசியாக அரசனின் போட்டியை ஏற்று ஒரு முனிவர் முன்வந்தார். ஆட்டினை வாங்கிச் சென்றார்.

ஒரு மாதம் கழித்து ஆட்டினை முனிவர் அரசனிடம் ஒப்படைத்தார். அப்போதுஎடை மிகச்சரியாக இருந்தது. கூடவும் இல்லை. குறையவும் இல்லை.

அனைவருக்கும் ஆச்சரியம் அரசனுக்கும்தான். “எப்படி இது முடிந்தது முனிவரே? போட்டி வைத்த எனக்கே இது புரியவில்லையே!” என்றான் அரசன்.

“அரசே! நீங்கள் தந்த ஆட்டினை ஒரு கூண்டில், நிறைய உணவு கொடுத்து அடைத்து வைத்தேன். ஆட்டிற்கு எதிரே மற்றொரு கூண்டில் புலி ஒன்றையும் அடைத்து வைத்தேன். இரை தின்று கொண்டே இருக்கும் போது ஆட்டிற்கு புலியின் பயமும் அதே நேரத்தில் இருந்தது. பயம் இருக்கும்போது எந்த உயர்வான இன்பமும் மனதையும் உடலையும் மகிழ்விப்பதில்லை என்பதை நான் நன்றாகவே அறிவேன். எனவே இதனைச் செய்தேன்.” என்றார் முனிவர்.

“உயிர்கள் எல்லாவற்றிற்கும் அதிக பயம் உயிர் மேல்தான் உள்ளது. உடலுக்கு வேண்டிய சக்தியை உணவு தந்தாலும், புலியினால் ஏற்பட்ட உயிர்ப்பயம், உணவால் ஏற்பட்ட அதிக எடையைச் சமன் செய்து விட்டது. மரணத்தைக் கண்டு பயம் கொள்ளாதவர்கள், முற்றும் துறந்த முனிவர்கள் போன்றவர்களால் மட்டும் செய்யக்கூடியது” என்றார் முனிவர்.

அரசனின் பரிசு முனிவருக்கு கிடைத்தது.

இதன் கருத்து என்னவென்றால், இயல்பாகவே எல்லோரிடமும் பயஉணர்வு இருக்கிறது. பயம் என்பது, வாழ்வின் முன்னேற்றத்துக்கு எதிரியாக இருக்கிறது. மரண பயம் யாரையும் விட்டு வைப்பதில்லை. மரணம் என்பது உடலுக்கு மட்டும்தான். உண்மையாகவே அது நிலையான மறுவாழ்வின் ஆரம்பம் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

நிலையான வாழ்வுக்கு வழி என்பதை நம்பினால் மரண பயம் குறையும். இதையே விவேகானந்தர் ‘‘மரணத்தை நேசிக்க வைக்கலாம்’’ என்கிறார்.

உயிரும் ஆன்மாவும் உடலில் குடிபுகுவதும் குடிபெயர்வதும் இயற்கையே. குடிபெயரும் போது இவ்வுலக வாழ்வு நிலையான வாழ்வாக மாறுகிறது.

பயம் பலரைக் கொன்று கொண்டிருக்கிறது. பயம் ஒவ்வொருவர் மனதை அரித்துக் கொண்டேயிருக்கிறது. பயம் மனதைக் கரைத்துக் கொண்டே இருக்கிறது.

ரால்ப் வால்டோ என்ற தத்துவமேதை கூறுகிறார் :

‘‘எதைச் செய்வதற்குப் பயப்படுகிறீர்களோ அதையே செய்யுங்கள். அத்துடன் பயம் செத்துப்போகும்.” என்று கூறுகிறார்.

“பலம் வாழ்வு, பயம் மரணம்’’ என்பதை அடிக்கடி நினைவு கூருவோம்.

“இறை நம்பிக்கை” என்ற ஒளியில், பயம் எனும் இருள் மறையும்.

யாரையும் காயப்படுத்தி விடக்கூடாது என்பதற்கான ஒரு விலகுதல் கூட நேசித்தலை விட அழகானது தான்.  மற்றவர்களை கீழே தள்ளி விடுவதால் நாம் வலிமை அடைவதில்லை, அவர்களைத் தூக்கி விடும்பொழுது தான் நாம் வலிமை அடைகிறோம்.

ஒருவருடைய நடத்தைதான் நண்பர்களையோ, விரோதிகளையோ உருவாக்குகிறது.

பொய்யைச் சொல்லாதீர்கள். நீங்கள் தான் அதைக் காப்பாற்ற வேண்டும். உண்மையைச் சொல்லுங்கள் அது உங்களைக் காப்பாற்றும்.

.விமர்சனம் செய்வது மற்றவர்களுக்கு எப்போதும் ஒரு வாடிக்கையாகிப்போன ஒன்று தான். நாம் என்றும் அவர்களோடு விவாதித்து நமக்கு, எவ்வித நன்மையும் ஏற்படப்போவது இல்லை.  எந்தபயனும் வரப் போவதில்லை என்பதை நாம் அறியலாம்.  ஆதலால் அதை கேட்டுவிட்டு நாம் மவுனமாகக் கடந்து செல்ல வேண்டும்.

எங்கள் வாழ்க்கை வளமாகும்

மாறிப்போவது, பிரச்சனைகளைக் கடந்து போவதும், பின் பழகிப்போவதும்தான், இந்த வாழ்க்கை என்பதை உணர்வோம்.

இன்று நீ உன்னை ஜெயிக்க வில்லை என்றால் மேலும் நாளை இந்த வாழ்க்கை உன்னை ஜெயிச்சு விடும் என்பதை உணர்ந்து கொள்.

இன்று காலையில் நீ எடுக்கும் ஒரு சிறிய முடிவே, முழு நாளையும் உனது வாழ்வு மாற்றும் அடையும். எனவே இன்றே உங்கள் வாழ்க்கையை வாழத் தொடங்குங்கள்.

எமது அனைத்து முடிவுகளும் சரியானதாக இருக்கும் என்று நாம் என்றும் எதிர்பார்க்க முடியாது வாழ்வின் எது சரியாக அமையவில்லையோ, அதனைப் பாடமாக எடுத்துக் கொண்டு முன்னேறிச் செல்ல முயலுவோம்.

**முன்னுரை:**


மாற்றம் என்றால் என்ன. உலகில் ஒவ்வொரு பொருளும் மாறிக்கொண்டே இருக்கிறது. நேற்றைய தோற்றங்கள் இன்று மாறிவிடுகின்றன. அது இயற்கை.

**பொருளுரை:**

எதுவும் எப்போதும் ஒரே மாதிரியாக இருந்தால் ரசிக்காது. இப்போது நாம் சாப்பிடும் உணவை எடுத்துக் கொள்வோம். காலை உணவு . பகலுணவு. இரவு உணவு என தனித் தனியாகத் தானே சாப்பிடுகிறோம். அவற்றிலும் அவ்வப்போது வித்தியாசமான புதுப்புது பதார்த்தங்களைத் தானே தெரிவுசெய்கிறோம்.




அதே போலவே ஒவ்வொரு விடயத்திலும் நாம் மாற்றத்தை எதிர்பார்க்கிறோம். நமது உடையிலும் நேற்று போட்டதை இன்று போடுகிறோமா. நமது நடை உடை பாவனைகள் அனைத்தும் எப்போதும் ஒரே மாதிரி யாகவா உள்ளது. இல்லையே. ஒவ்வொருவரும் அவரவர் தகுதிக்கேற்ப ஒப்பனை செய்து கொள்கிறார்கள். முடி முதல் அடிவரை ஒவ்வொன்றிலும் வித்தியாசத்தை செய்து கொள்கிறோம்.



# மாற்றம்

கட்டுரை

– கீதாரமணி –

முன்பெல்லாம் முடிவெட்டுவது ஆண்களுக்கு மட்டுமே. (பார்பர்சாப்) முடி திருத்தகம். ஆனால் இப்போது பெண்களுக்கு ஏராளமான அழகுபடுத்தும் நிலையங்கள் உள்ளன. வித விதமாக சிகையலங்காரம். அன்றைய சடை பின்னல் எல்லாம் இன்று பார்ப்பது மிக அபூர்வம். இன்றைய தலைமுறையினர் அழகு நிலையங்களுக்குச் செல்லாதவர்களே கிடையாது. ஒருமணி நேரம் முதல் பல மணிநேரங்கள் செலவு செய்கின்றனர். நேரம் மட்டுமல்ல. பணமும் கூட ஆயிரக்கணக்கில்.

மாற்றம் எனப்படும் போது இன்றைய அலுவலகங்கள் அல்லது தொழிற்கூடங்கள். அவை எதுவாக இருந்தாலும் சரி. பெட்டிக்கடை, டீக்கடை முதல் பெரிய இயந்திரங்கள் இயங்கும் தொழிற்கூடங்கள் வரை நிறைய விஞ்ஞான முன்னேற்றங்களை அடிப்படையாகக் கொண்ட மாற்றங்கள். அன்று எல்லாமே கையால் பேப்பரில் எழுதிக் கூட்டி கழித்துத்தான் பணப் பரிமாற்றங்கள் நடந்தன. ஆனால் இன்று எவரும் தங்கள் பைகளில் கூட பணத்தைக் கொண்டு போவதில்லை. எல்லாமே கணினி வழி பணப்

பரிமாற்றங்கள். நமது பணம் திருடு போக வாய்ப்பில்லாமல் உள்ளது.

அதேபோல்... வாழ்க்கை முறையில் ஏராளமான மாற்றங்கள். உணவு முறையும் நமது பாரம்பரிய வழக்கப்படி இப்போது இல்லை. காலை. பகல், மாலை. இரவு என்ற ஒழுங்குமுறைகள் கொஞ்சம் கொஞ்சமாக மாறி வருகின்றன. பசிக்கு உணவு என்பது போய் உருசிக்கெனவே புசிக்கிறார்கள். வீட்டில் சமையல் என்பதும் குறைந்து வருகிறது. ஏராளமான ஃபாஸ்ட்ஃபூட் கடைகள், ஓட்டல்கள், காரணம் காலத்தின் வேகமும் மக்களின் சுறுசுறுப்பின்மையும்.

இவற்றிற்கெல்லாம் ஏற்றாற்போல் வீட்டுக்கு வீடு வாசற்படி என்பதுபோல வீதிக்கு வீதி மருத்துவமனைகள். ஏராளமான நோய்கள். ஏராளமான மருத்துவர்கள். அன்றைய வைத்தியர்கள் நாடி பிடித்து நோயைக் கண்டு பிடித்து மருந்து கொடுத்தனர். இன்று நோயைக் கண்டுபிடிப்பதற்கே ஏராளமான சோதனைகள். ஏராளமான மருந்துகள், சிகிச்சைகள்.

அதே நேரத்தில் மரணங்களும் அவ்வப்போது நடக்கின்றன. இளவயது முதல் முதுமை வரை. தவிர விபத்துக்களால் மரணங்கள். எந்த நேரம் எப்படி என்றெல்லாம் இல்லை.

அடுத்து இறந்த உடல்களை அழிப்பதிலும் பல மாற்றங்கள். புதைத்தல் எரித்தல்.... எரிப்பதற்கு மின் மற்றும் எரிவாயு மயானங்கள். அன்றைய சாத்திரங்களில் ஒரு பிடி சாம்பல் என்றார்கள் முன்னோர். இப்போது அதுவும் கிடையாது. அஸ்தி என்ற பெயரில் எரியத் தவறிய சில எலும்புத் துண்டுகள்.

போக்குவரத்தில் பலவித வாகனங்கள். இரயில் வண்டிகள், விமானங்கள், உந்துருளி வாகனங்கள் இல்லாத வீடே இல்லை. இன்று மகிழுந்து நான்கு சக்கர வாகனம் இல்லாதவர்களை கேவலமாகப் பார்க்கிறார்கள். பேருந்துகளில் தூங்கும் வசதி. இரயில் வண்டிகளில் மிக வேகமான பயணம். என் பலவித முன்னேற்றமான மாற்றங்கள்.

சாலைகள் விரிவாக்க விரிவாக்க வாகனங்களும் பல்கிப் பெருகி போக்குவரத்து நெருக்கடிகள். குறிப்பிட்ட இலக்கை அடைய வேகம்... வேகம்... வேகம்.... போக்குவரத்து விதிகள் மீறல். விபத்துகள். மரணங்கள். ஆனால் எல்லா விஞ்ஞான மாற்றங்களும் தேவையானவையே.

மாற்றங்கள் அதிகரிக்க அதிகரிக்கக் குற்றங்களும் அதிகரிக்கின்றன. கொலை, கொள்ளை. பாலியல் வன்முறைகள்,

குடும்ப வாழ்க்கையிலும் கணவன் மனைவி கருத்து வேறுபாடுகள் பொறாமை, விட்டுக் கொடுத்து வாழப் பழகாமை... போதுமென்ற மனமின்றி பணத்தாசை... விவாக ரத்துக்கள். மக்களின் வாழ்க்கைபற்றிக் கவலைப்படாத பெற்றோர்கள்... என சில மாற்றங்கள் கேடுகளை விளைவிக்கின்றன.

முதியவர்கள் பலர் இன்றைய தலைமுறையினருடன் தங்கள் ஆசாபாசங்களை விட்டுக் கொடுத்து ஒன்றி வாழ வேண்டிய கட்டாயங்கள்.

வேளாண் நிலங்களும் நீர் நிலைகளும் அடுக்குமாடிக் குடியிருப்புகள் ஆனதால் விவசாயம் கேள்விக்குறியாக மாறிவிட்டது. அடுக்குமாடிகளிலும் அடுப்பில்லாமல் வாழ முடியாது என்பதை உணர்ந்தால் நன்று. உணவிற்கு அடிப்படை வேளாண்மை. வேளாண்மைக்கும் அதிநவீன இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. மனித சக்திக்கு மதிப்பில்லை. உடலுழைப்பின்றி ஆரோக்கியம் பாதிக்கப்படுகிறது.

இந்த மாற்ங்களுக்கெல்லாம் மேலாக அரசாங்கத்தையே மாற்ற மக்கள் விரும்பி அந்த மாற்றமும் ஏற்பட்டுள்ளது.

முடிவுரை:

மாற்றங்கள் தேவவைதான். ஆனால் அந்த மாற்றங்களில் நல்லவற்றை மட்டும் ஏற்றுக்கொண்டு மற்றவற்றைப் புறந்தள்ளுதல் சமூகத்தின் முன்னேற்றத்திற்குச் சிறப்பாகும். மாற்றங்களையொட்டி வாழப் பழகுவோம்.

**“மாற்றம் என்பது தவிர்க்க முடியாத இயற்கை நியதி. ஆனால் எந்த மாற்றத்தை ஏற்றுக்கொள்வது, எதை மறுப்பது என்பதே மனிதனின் அறிவை அளக்கும் தராசாகும். மாற்றங்களோடு பயணிப்போம்; மனிதநேயத்தை மட்டும் மாற்றாமல் காப்போம்.”**

“என் அனுபவ முத்துக்களின், அடுத்த படைப்பாக, படிப்பவர் கைகளில் இந்த ”சாவிகளைத் தேடும் பூட்டுக்களை” சமர்ப்பிக்கிறேன். சமூக அவலங்களும் வாழ்வியல் மேம்பாட்டிற்கான வழி முறைகள் உணர்ந்தும், சூழ்நிலைகள் காரணமாக சொல்ல முடியாமலும் செயல்படுத்தப்பட முடியாமலும் இருக்கின்ற பரிதாப நிலைகள் தான் திறக்க முடியாத பூட்டுக்களாய் சாவிகளைத் தேடிக் கொண்டே இருக்கின்றன. சொல்ல வந்ததன் ஒரு பகுதிதான் இந்த புத்தகத்தில் கவிதைகளாக வெளிவந்திருக்கிறது. வாசகர்களின் ஊக்கமான ஆதரவுகள் தரும் வரவேற்பின் துணை கொண்டு அடுத்தடுத்த பதிப்புகள் வெளியிடப்படும். கருத்துகளை உள் வாங்கிப் படித்து விமர்சிக்கும் மேலான வாசகர்களே படைப்பெனும் படகை வெற்றிகரமாகக் கரை சேர்ப்பவர்கள் என்பதில் மிகுந்த நம்பிக்கை கொண்டு உங்கள் முன் இந்த புத்தகம் சமர்ப்பிக்கப்படுகிறது” என்னும் என்னுரையுடன் வந்திருக்கும் தொகுப்பு சாவியைத் தேடும் பூட்டுக்கள். புதுக்கவிதைகள் அடங்கிய இத்தொகுப்பின் ஆசிரியர் அனுராதா சௌரிராஜன்.






தோல்வித் தோல்கள் தினம் சீவச் சீவக் குறைந்தாலும் சீரிய கூர்மை கொண்டு சிறப்புடன் சேவை செய்கிறது என பென்சில் குறித்து எழுதியுள்ளார். பென்சில் என்றால் தமிழில் கரிக்கோல். எழுதுகோலை விட கரிக்கோலே மனித வாழ்வில் முக்கிய பங்காற்றியிருப்பதாகும். பென்சிலை சீவச் சீவத்தான் கூர்மையாகும். சீவினாலும் சேவைச் செய்யும் என்கிறார்.

உள்ளபடி

நீ எழுதினால் பள்ளம் மேடு

புரிய வரும்

என பேனா குறித்தும்

எழுதியுள்ளார். பேனாவிடம் பேசுவதாகவே எழுதியுள்ளார். எழுதுகோல் எழுதினால் சமத்துவம் பேசும் என்கிறார். ஊனத்தில் பலவகை உண்டு. ஊனங்களில் ஒன்று வாய் பேசாதது. கவிஞர் ஊமை என்கிறார். வாய் பேசாதவர் என்றே சொல்ல வேண்டும்.

ஊமை ஊனமல்ல

ஈனமானதும் அல்ல

உன்னதமான உத்தியை

உரைக்கும் மவுன சக்தி

என தெரிவித்துள்ளார். வாய் பேசாதது ஊனமுமல்ல, ஈனமுமல்ல என்று தெரிவித்ததுடன் உன்னதமான உத்தியை உரைக்கும் மவுன சக்தி என்று வாய் பேசாதவரின் சக்தியை உயர்த்திக் காட்டியுள்ளார்.

கல்கி அவதாரம் என்பது இந்து சமய நம்பிக்கையின் படி மகாவஷ்ணு கலியுகத்தின் இறுதியில் தீமை-களை அழித்து தர்மத்தை நிலைநாட்ட எடுக்கும் பத்தாவது மற்றும் இறுதி அவதாரமாகும். வெள்ளைக் குதிரை மீது கையில் வாளுடன் தோன்றி அதர்மத்தை அழித்து மீண்டும் பொற்காலத்தை உருவாக்குவார் என்று புராணங்கள் கூறுகின்றன. கல்கி என்றால் காலம் முடிவிலி அல்லது பாவம் நீக்குபவர் என்று பொருள். தற்போது நடக்கும் கலியுகத்தின் முடிவில் பாவம் உச்சத்தை அடையும் போது இந்த அவதாரம் நிகழும்.

கல்கி என்னும் தலைப்பில்

பெற்ற மகளைப்

பெண்டாளும் பெருங்




கொடுமை அவலம்

இற்றைக்கு இவ்வுலகில் இழி

நிலை வழிகிறது

எற்றைக்கு

இவை மாறுமென

குற்றமாய்க் காலம் கழிகிறது

என்று கொடுமைகள் நடக்கின்றன என கவலையுற்றுள்ளார். எனினும் என்று இக்கொடுமைகள் முற்றுப்பெறுமோ என்று கேள்வி எழுப்பியுள்ளார். கல்கி அவதாரம் வந்தாலே இவை முடிவிற்கு வரும் என்று தெரிவித்துள்ளார்.

தவற விட்ட நகை தொகை

வறியவர் ஆயினும்

உரியவரிடம் ஒப்படைக்கும்

நெகிழ்ச்சி நிகழ்ச்சி - வியப்பு

என தொடங்கும் வியப்புகள் கவிதையில் பல வியப்புகள். கவிஞர் கூறிய ஒவ்வொரு வியப்பும் வியக்கச் செய்கிறது. கவிதையும் வியக்கச் செய்கிறது. எத்தனை வியப்புகள் என வியக்கச் செய்கிறது. ஒருவர் தவற விட்ட நகை எனினும் தொகை எனினும் உரியவரிடம் ஒப்படைப்பது உண்மையிலேயே வியப்புதான்.

மனிதர்கள் ஆழ்ந்து தூங்கினால், நீண்ட நேரம் தூங்கினால் கும்பகர்ணன் தூக்கம் என்பர். கும்பகர்ணனின் தூக்கம் என்பது எவ்வளவு காலம்? கும்பகர்ணன் ஒரு முறை தூங்கினால் ஆறு மாத காலம் உறங்குவான் என்பர். இன்று மனிதர்களோ ஆறுமணி நேரமே அதிகபட்சம் உறங்குகின்றனர். உறக்கம் என்றொரு கவிதை.

கும்பகர்ணனாய்

இருந்திருந்தால்

குற்றங்களேனும்

குறைந்திருக்கும்

குறை -

நிறைகள் தூக்கத்தில் சிறை

பட்டுப் போயிருக்கும்

என்பது உறக்கத்திலொரு பகுதி. இன்று மனிதர்கள் கும்பகர்ணன் போல் ஆறுமாதம் உறங்கினால் நாட்டில் குற்றங்கள் குறைந்திருக்கும் என்கிறார். குற்றங்களே ஏற்பட்டிருக்காது என்று சொல்லவில்லை. குறைந்திருக்கும் என்கிறார். ஒரு நாளைக்கு ஆறுமணி நேரமே உறங்கும் மனிதன் அதிகபட்சமான குற்றங்களைச் செய்கிறான் என குற்றம் சாட்டியுள்ளார்.

மரணம் கவிதையில் மரணத்தை

நிறைவேறா ஏக்கங்களுடன்

நீள் தூக்கம்

என்கிறார். மரணம் மனிதருக்கு ஒருவகையில் விடுதலை. மரணம் மனிதரை விடாது. மரணத்தை ஏற்றுக் கொள்ளும் மனநிலை வாய்த்தவரே வாழமுடியும்.

கண்டதும் வரும் காதல் கல்யாணம் செய்ததும் காணாமலாகிவிடும். ஆராயாமல் செய்தால் ஆயிரம் பிரச்சனைகள்.

ஆராயாக் காதலால்

உடைந்த வளையல்களென

ஓராயிர துக்கத் துண்டுகள்

என மிக்சர் கவிதையில் தெரிவித்துள்ளார். எதையும் ஆராய்ந்து செய்ய வேண்டும். காதலைக் கண்டிப்பாக ஆராய்ந்து செய்ய வேண்டும். இல்லையெனில் துயரமே மிஞ்சும்.

ஈ என்பது உயிரினம். ஈயினால் நன்மையும் உண்டு. தீமையும் உண்டு. ஈ என்றால் மக்கள் விரட்டுவர். ஈ என இளித்தால் ஈவதில்லை. ஆனால் ஈயென சிரித்தால் இளிச்சவாயன் என்பர்.

ஈயென்றால் - இளிச்சவாயா

நீயென - என்பேர் இழுப்பர்

தன்மானத்தை விட்டுடு

வாயால் தகுதியின்றி எனைக்

காட்டுவர்

என ஈ சார்பாக எழுதியுள்ளார். இளிச்சவாயன் என்பவருக்கு எதிராக குரல் கொடுத்துள்ளார். ஈ என்னும் ஒரு சிறு உயிருக்காக இரக்கம் காட்டியுள்ளார்.

முதியோர்கள் ஒரு வகையில் குழந்தைகளே. முதியோர்களுக்கு முடிவு காலத்தில் தேவை அரவணைப்பு, ஆதரவு. ஆனால் பிள்ளைகள் வயதான காலத்தில் முதியோர் இல்லத்தில் விட்டுவிடுகின்றனர். எனவே முதியோர் இல்லங்கள் கவிதையில்

தனிமையில் தவிப்பும்

பிணியோடு புறக்கணிப்பும்

அணி வகுக்கும் முதுமை

அதை விடக் கொடுமை

என முதியோருக்காக மனம் இரங்கியுள்ளார். தவிப்பும் புறக்கணிப்பும் முதுமையில் கொடுமை என்கிறார். முதியோர் இல்லங்கள் முற்றிலும் ஒழிக்கப்படவேண்டும். ஒழிக்கப்பட்டாலே பிள்ளைகள் வீட்டில் பெற்றோர்களை வைத்து பார்த்துக் கொள்வர்.

நான்கு

வயதாயிருந்தாலென்ன

நாற்பதைக் கடந்தாலென்ன

நாய்களுக்கும் காம

நோயினருக்கும்

நடைமுறையில் போட்டிகள்

என மாற்றம் கவிதையில் எழுதியுள்ளது கவனத்திற்குரியது. பெண்கள் பாலியல் தொல்லைக்குள்ளாவது குறித்து எழுதியுள்ளார். காம வெறியர்களைக் கண்டித்துள்ளார். காம நோயினர் என்பது குறிப்பிடத்தக்கது. காம நோய்க்கு மருந்தில்லை.

மனிதராக வாழ நினைத்தால்

வீட்டிற்கு தேவை ஏது

வாஸ்து சாஸ்திரம்?

என யோசிக்கிறேன் கவிதையில் எழுதி யோசிக்கச் செய்துள்ளார். மனிதராக பிறந்தவர்கள் மனிதராக வாழ நினைத்தாலே போதும். வாஸ்து சாஸ்திரம் தேவையில்லை என்கிறார். வாஸ்து என்பது இடையில் வந்துதானே? வாஸ்துவை விட தோஸ்துவே முக்கியம். மனிதர்கள் ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டும். ஏன் பிறந்தோம் என்னும் கேள்வியை எழுப்ப வேண்டும். ஏன் பிறந்தோமென எண்ணிப்பார்த்தாலே நல்லவனாக வாழ வைத்துவிடும்.

ஏன் பிறந்தோம்

என்றோர் கேள்வி எல்லோர்

வாழ்வையும் நல்லோனாய்

மாற்றுமோ?

என கேள்விகள் கவிதையில் ஒரு கேள்வி எழுப்பியுள்ளார். ஏன் பிறந்தோம் என்னும் கேள்வியே எல்லோர்

வாழ்வையும் நல்லோனாய் மாற்றிவிடும் என்கிறார். பேச்சு என்பது ஒரு முக்கிய கலை. பேசியே ஆட்சியைப் பிடித்தவரும் உண்டு. பேசியே ஆட்சியை இழந்தவரும் உண்டு. பேச்சில் நன்மையும் உண்டு. தீமையும் உண்டு. பேசுவதால் நட்பாவதும் உண்டு. பேசுவதால் எதிரியாவதும் உண்டு. அளவோடு பேச வேண்டும். அன்போடு பேச வேண்டும்.

அதிகமாய்ப் பேசி

அமைதியை இழக்கிறோம்

ஆணவமாய்ப் பேசி

அன்பை இழக்கிறோம்

என பேச்சு கவிதையில் எழுதியுள்ளார். கவிஞர் அமைதியாகவும் அன்பாகவும் பேச வேண்டும் என்று அமைதியாகவும் அன்பாகவும் வேண்டியுள்ளார்.

பத்துக்கு மேலாடை

பதினொன்றேயாகும்

என்று பாடினார் கவிஞர் சுரதா.

மோசம் குரோதத்தின் ஆடை

வே'ம் கயவரின் ஆடை

மனிதம் நேயத்தின் ஆடை

புனிதம் பிறவியின் ஆடை

என்கிறார் கவிஞர் அனுராதா சௌரிராஜன். மனிதனின் அடிப்படைத் தேவைகளில் ஒன்று ஆடை. கவிஞர் எல்லாவற்றுக்கும் ஆடை அணிந்து அழகு பார்த்துள்ளார்.

வயிற்றுப் பிழைப்புக்காக

வெளிநாடுகள் போனாலும்

வேர்கள் என்னவோ

விழுந்த மண்ணில்தான்

என்று எதார்த்தத்தைப் பேசியுள்ளார். இக்கவிதையின் தலைப்பு கையளவு கடல். திரைக்கடலோடி திரியம் தேடினாலும் தாய் நாட்டுக்கே திரும்பி வந்தாக வேண்டும். மரத்தின் கிளை விண்ணோக்கி சென்றாலும் வேர்கள் மண்ணிலேதான் இருக்கும்.

கவிஞர் அனுராதா சௌரிராஜன் சாவியைத் தேடும் பூட்டுக்கள் என்னும் கவிதைத் தொகுப்பில் உள்ள கவிதைகள் புதுக்கவிதைகளாக, புத்துணர்வூட்டுபவையாக உள்ளன. கவிதைகள் மூலம் மனிதர்களை, மனித உணர்வுகளை பிரதிபலித்துள்ளார். எதிர்க்க வேண்டியதை எதிர்த்துள்ளார். கண்டிக்க வேண்டியதைக் கண்டித்துள்ளார். பாராட்ட வேண்டியதை பாராட்டியுள்ளார். கவிதைகள் எதார்த்தமாகவும் எளிமையாகவும் இனிமையாகவும் இருக்கின்றன. சிந்திக்கவும் செய்கின்றன. நெடுங்கவிதைகள் எழுதுவதில் அனுராதா சௌரிராஜன் தேர்ந்தவர் என்பதைக்காட்டுகிறது சாவியைத் தேடும் பூட்டுக்கள். கவிதையைத் தேடும் கருத்துகள் என ஏராளம் உள்ளன என அனுமானிக்க முடிகிறது. கவிஞர் கவிதைப்பயணம் தொடர வாழ்த்துகள்.

வெளியீடு: புஸ்தகா Pustaka 7418555884

**“பெண்ணென்றால் சமையலறை மட்டுமல்ல,**

**இந்த உலகத்தின் சரிபாதி அவள்!**

**அவளின் கோபம் நெருப்பானது,**

**அவளின் அன்பு உயிரானது!”**

- பாரதிராஜா -

**“ரத்த சொந்தங்கள் ஆயிரம் இருக்கலாம்,**

**ஆனால் மனசு தொடும் உறவு நீதான்!**

**இந்த மண்ணில் நாம் வாழும் வரை,**

**நம் பாசம் என்றும் நிலைத்திருக்கும்!”**

- பாரதிராஜா -

# கவிதை

## - கவி சந்திரா -






பெண்கள் நாட்டின் கண்கள்

பெண்கள் என்றும் நாட்டின் கண்கள் தானே
ஆண்களோடு கரம் கோர்த்து
நாட்டை ஆள்வாளே

அஞ்சா நெஞ்சமோடு அகிலத்தை ஆண்டிடுவாளே
நிமிர்ந்த நடை நேர்கொண்ட

பார்வையுடன் இருப்பாளே
சமுதாயம் காத்திடவே சஞ்சலமின்றி ஈனரைச் சாய்த்திடவே
விரைந்திடுவாளே மண்ணில்

வாழும் உயிர்காக்க படையெடுப்பாளே
குடும்பம் மகிழ்ந்திடவே
குலமகளாய் ஒளிர்ந்திடுவாள் சுடர்விளக்கே
இல்லறம் பேணியே நல்லறம்
இனிதே காத்திடுவாளே
ஈன்றெடுத்த செல்வங்கள்
நனிசிறக்க பாடுபட்டு மேன்மையுற
நாளும் பாடுபடும்

நல்லதோர் தாய் அவள்
இல்லத்தில் இனிமையான

இன்முகத்துடன் அனைவரையும் வழிநடத்துவாளே

அன்னையென்ற அற்புதம்

அன்பெனும் கொடியே அவள்மீது

படர்ந்திடும் உறவுகள்

அவளைக் கைவிரித்து அணைத்திடும்
தாய் நாட்டைக் கண்ணாரக்
காத்திடும் வீரப் பெண்மணி

அறிவியல் ஆராய்ச்சி வளர்ந்திட
சாதனை புரிந்திடுவாள்
கணினியிலும் கரைகாணுவாள்
வரலாறு படைத்திடுவாள்






“என்னம்மா வழக்கம் அதே சிம்பிள் கேக் தானா?” ரேவதி உதட்டைச் சுளித்தாள்.

இன்று ரேவதியின் 16வது பிறந்த நாள். அதற்கு அவள் தாய் கோகிலா வாங்கியதோ சின்ன வட்ட வடிவக் கேக். அதன் மேலே, “ஹேப்பி பர்த் டே” என்ற எழுத்துக்கள் மட்டும்.

“என் ஃப்ரெண்ட்ஸ்ங்க எல்லோரும் ரெண்டு மூணு அடுக்கு இருக்கும் காஸ்ட்லி கேக் வாங்கி பிறந்த நாளுக்கு வெட்டறாங்க... எனக்கு மட்டும் ஏன் இந்த மாதிரி…” ரேவதி வாய் விட்டே கேட்டாள்.

அம்மா சிரித்தாள். “இதுவும் நல்லா இருக்கும்… சாப்பிடு…”

ஒவ்வொரு வருடமும் அதே கதைதான்.

அம்மாவின் அதே சிரிப்புத்தான். மகள் ரேவதி மனத்தில் அதுவே பெரிய குறை.

“இந்த 16வது வருடமாவது ஒரு காஸ்ட்லி கேக் வாங்கக் கூடாதா…?”

சலிப்புடன் கேட்டாள்.




“ம்ம்...ம்ம்...பார்ப்போம்… பார்ப்போம்” என்றாள் தாய்.

அடுத்த வாரத்தில் கோகிலா அடிக்கடி வெளியே போகத் தொடங்கினாள்.

தொலைபேசியில் யாருடனோ பேசுவாள். பின்னர், சிறிது நேரம் கவலையுடன் அமர்வாள்.

ஆனால், ரேவதி அதைக் கவனிக்கவில்லை.

பிறந்த நாளன்று காலை. வீடு அமைதியாக இருந்தது. கோகிலா இல்லை.

“எங்கே போயிட்டாங்க…?” ரேவதி யோசித்தாள்.

மாலை வாக்கில்தான் கோகிலா வீடு திரும்பினாள். அவள் கையில் ஒரு பெரிய அட்டைப் பெட்டி.

ரேவதியின் கண்கள் பிரகாசித்தன. “வாவ்…!”

அது ஒரு பெரிய கேக். மூன்றடுக்கு. அழகான டிஸைன். ரேவதி கனவு கண்டதை விட அதிகமாய்.

“ஹேப்பி பர்த் டே” சொல்லி விட்டு கோகிலா சிரித்தாள். அந்தச் சிரிப்பில் ஒரு சோர்வு தெரிந்தது.

ஃப்ரெண்ட்ஸ்கள் வந்தார்கள். போட்டோ, சிரிப்பு, என பர்த் டே ஃபங்ஷன் களை கட்டியது.

அன்று இரவு ரேவதி மிகவும் சந்தோசமாயிருந்தாள்.

“இத்தனை வருடத்தில் இப்பத்தான் ஒரு திருப்தியான பிறந்த நாள் கொண்டாட்டம் அமைந்திருக்கின்றது”

அடுத்த நாள் காலை… அம்மா எழுந்திருக்கவில்லை.

ரேவதி அடித்துப் பிடித்து அவளை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றாள்.

ஐ.சி.யுனிட்… டாக்டர்கள்…. அவசரம்…. சீரியஸ் கண்டிசன்…

ரேவதி கதவுக்கு மறுபுறம் சோகமாய் நின்றிருந்தாள்.

நேற்று சந்தோசமாய்ச் சிரித்த முகத்தில் இன்று டன் கணக்கில் சோகம்.

சில மணி நேரத்தில்… அம்மா மரணித்து விட்டதாய் தகவல் சொன்னார்கள்.

அதிர்ந்து போய் அப்படியே தரையில் அமர்ந்தாள் ரேவதி.

மறுநாள் மதியம், அம்மாவை அடக்கம் செய்து விட்டுத் திரும்பிய பின் வீட்டில் மயான அமைதி நிலவியது.

ஒரு வாரம் கழித்து, அம்மாவின் அறையில் அவளின் உடமைகளைச் சோதித்துக் கொண்டிருந்த ரேவதியின் கைகளில் அந்தக் கவர் கிடைத்தது.

அதில் மருத்துவமனை பில்கள். எல்லாம் ரேவதியின் பிறந்த நாளுக்கு முந்தைய தின பில்கள்.

உடனிருந்த மெடிக்கல் ரிப்போர்ட்டில், “அறுவை சிகிச்சை நோயாளியின் வேண்டுதலுக்கிணங்க ஒத்தி வைக்கப்பட்டது” எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

ரேவதியால் அதைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

அதே கவரில் இன்னொரு ரசீது. கேக் ஆர்டர் செய்ததற்கான ரசீது. ரேவதியின் கைகள் நடுங்கின.

அம்மாவிற்கு மிக நெருக்கமான பக்கத்து வீட்டு மாமியிடம் விசாரித்தாள்.

“உன் அம்மா சொல்லிட்டே இருந்தாங்க… ”இந்தத் தடவை அவளுக்கு அவள் விரும்பின காஸ்ட்லி கேக் வாங்கணும்… கைவசம் கொஞ்சம்தான் பணம் இருக்கு… அதுவும் என்னோட சர்ஜரிக்காக வெச்சிருக்கற பணம்…. டாக்டர் கிட்டே சொல்லிட்டேன், “சர்ஜரியைக் கொஞ்சம் தள்ளிப் போட்டுக்கலாம்”ன்னு… அவரும் ஒத்துக்கிட்டார்… நான் இருக்கும் போதே அவளோட ஆசையை நிறைவேத்திடணும்ன்னு”

ரேவதி உடைந்து போனாள்.

“ஒரு கேக்குக்காக… உங்க வாழ்க்கையையே … தியாகம் பண்ணிட்டீங்களே அம்மா?” கதறினாள்.

ஃப்ரிட்ஜில் இன்னும் அந்த கேக்கின் ஒரு துண்டு இருந்தது.

ரேவதி அதை எடுத்தாள். மெதுவாகக் கடித்தாள்.

முதல் முறையாக அதில் இனிப்பு இல்லை. காரணம் அது அவள் அம்மாவின் உயிரின் ருசி.

**“வறண்ட பூமிக்கு மழை எவ்வளவு அவசியமோ,**

**அதைவிட அதிகம் எனக்கு உன் அன்பு!**

**ஊருக்காகத்தான் நான் வாழ்கிறேன்,**

**என் உயிருக்காக நீ வாழ்கிறாய்!”**

- பாரதிராஜா -



– தி. ஸ்ரீராமன் –

# செந்தமிழே
# எனையாளும் தாயே

**கவிதை**



வந்தாரை வாழவைக்கும்
வளமிகு நாட்டினுடைச்..
செந்தமிழே எனையாளும் சீர்மைத் தாயே..!
அறிந்தேனே உன்னை
அன்னையின் தயவாலே..!

அறிவால் தெளிந்தேனே
உன்றன் தொன்மையை தன்மையை..!
புரிந்தேனே உனது
பொதிந்த பொருளை..!

முதல் இடை கடையென வகையாய்...!
சங்கம் வைத்துச் சான்றோர் வளர்த்தவளே..!
சிறப்பாய்ச் சந்தி
இலக்கணம் உடையவளே..!

அகத்தியர்க்காய்த் தோன்றிய
அமுத மொழியே..!

தாய்மொழி உன்னையே
வாய்மொழியாயும் உவந்தே சிறப்பேன்..!
தகைமையுடை உன்றனையே
தலையாகப் போற்றுவேன்..!

செம்மொழிச் செல்வமுனைச்
சிந்தையிலே சேமிப்பேன்..!

நீயே உவந்து என்றன்
நாவில் உறைந்து நாளும்
எனையே வாழ்விப்பாய்..!

தாயே.. தமிழே..

தன்னிலை மறந்தாலும்
உன்றனையே மறவாத
தனயனாய் என்றனையே ஆசீர்வதிப்பாய்..!!



# வானத்து மேகம்

- கவிதை -

**சேஹ் மொஹம்மது பெனாஸிரா –**

முஸ்லிம் ஹல்மில்லாவ, மதவாச்சி

*தொடராக கைவிரித்து*

*சுற்றி வளைக்கும்*

*சூழலும்*

*சந்தர்ப்பங்களும்*

*எத்தனையோ*

*நல்ல வாய்ப்புக்களை*

*நழுவ விடச்*

*செய்கிறது...*

*கை தவறிய*

*பேருந்தைப் போல*

*கடந்து மற்றையதை*

*எதிர்பார்த்து மறைகிறது*

*இந்த வானத்து மேகம்...*

*வாழ்க்கை ஒரு உயிரை*

*அனுப்பி வைக்கும் இயற்கையாகவே....*

*சிரிப்பு அழுகை இரண்டையும்*

*பகிர்வதற்கு...*

*அதை விட மேலாக*

*இந்த நிமிடத்தையும் பகிர்வதற்கு*

*எதையும் ஆற்றுபடுத்தும்*

*அந்த ஒரு மருந்து*

*இருந்தால் போதுமானது...*

*ஏக்கப்பட்ட வாழ்வு*

*அதைக் கொஞ்சம்*

*நகர்த்தி வைப்பதற்கு*

*ஆனால் அதுவும் நிரந்தரமாக இல்லை*

*எனத்தெரிந்தும்*

*சில பயணக்கள்*

*தொடரத்தான் செய்கிறது..*



**- சி.துளசி -**

# இளையவன் சிவா கவிதைகள்



1

இழுவை ரயிலுக்குள்
மலை ஏறும்
மகளின் உற்சாகத்தில்
ஒளிந்து கிடக்கிறது
ஒட்டுமொத்த பழநியின்
உயிர் தரிசனம்.
கடவுளை வணங்கி வெளிவந்தவள்
விளம்புகிறாள்
ஆண்டியாய் நிற்பவனிடம்
ஆசைகள் கூட்டுகிறோம் என.

2

நெடுஞ்சாலை பரபரப்பில்
விரையும் வாகனங்களுக்குள்
அலாரம் எழுப்பியபடி
நுழைந்து ஊடுருவி
வரும்
அபாய வண்டியில்
ஓடுகிறது உயிர்த்துடிப்பு.
பெரு விபத்தின்
குருதித்தடத்தில்
பெருக்கெடுக்கும் சுயமிகளை
காற்றில் தவழவிட்டபடி
கதறும் அலைபேசிக்குள்
அழுவதா சிரிப்பதா
என
குழம்புகிறது
மனித நேயம்.

3

பெருமழையின்
சிறு பிள்ளையென
தலை நனைத்தும்
கால் நனைக்கா
தூறலில்
நடக்கிறேன்
நனையாத நிலத்தினில்
நனையும் மகிழ்வில்
தலைகாட்டும் வெயிலை
எப்படி ஆற்றுப்படுத்த?

4

நெடுஞ்சாலையின்
ஈரத்தை உறிஞ்சியபடி
விரையும் வாகனங்களுக்கு
மத்தியில்
பெய்தும் பெய்யாமலும்
குழம்பித் தவிக்கும்
மழையைப் பார்த்து
கிளைக்
கைகளை ஆட்டி
கேலி பேசுகிறது
மரம்.
விரையும்
வாகனங்களை விலக்கி
பூவின் இதழ்களுக்குள்
புயலெனப் பொழிகிறது
மழை.
வானத் தீண்டல்
தீர்ந்த பின்னும்
கண்ணீர் வடிக்கிறது
மரத்தின் கிளைகள்.






# பஃரொடை வெண்பா



## மரணத்தின் நிமிடம்

மரணப் படுக்கை வலியைக் கொடுக்கும்
இரவு பகலை இணைத்து நிறுத்தும்
பிரியும் உயிரோ பிதற்றும் உடலைப்
புரியா உலகம் புரிந்திட லாகும்
கடந்துவந்த பாதையும் கண்முன்னே தோன்றும்
மடமைச் செயல்கள் மனத்தை உறுத்தும்
தொலைத்த உறவுகள் தோன்றுவர் முன்னே
அலைபோல் நினைவுகள் அலைக்க ழிக்கும்
வலையிடை மீனாய் மனமும் துடிக்கும்
உலைநீர்க் கொதிப்பாய் உளத்தை உருக்கும்
விழுதுகள் நீங்கிட வீழும் தருவாய்ப்
பொழுது மறையும் புதைந்து

**- தனராஜ் பாப்பணன் -**

## மரணத்தின் நிமிடம்

மரண நிமிடம் மலருமே ஞானம்
விரதம் இருந்தே விரும்பி வணங்கி
வரங்கள் பெறுகின்ற வேள்வி வளர்த்தே
இரந்தவர் கையில் இறைத்த நினைவும்
பரமன் பதத்தைப் பரவித் துதித்துக்
கரங்கள் குவித்திட்டக் காலமும் தோன்றும்
பரந்த நிலத்தைப் பறித்திடச் சேர்த்தும்
அரணாம் மனைவியின் அன்பைத் தவிர்த்தும்
வரம்பிலாதக் காம வகையற்று வாழ்ந்த
நிரம்பிய பாவம் நிறுத்திடக் கண்டால்
துரத்துமே தேடிய தன்வினைத் துன்பம்
அரனும் அகற்றுவாரோ அற்று

- **கி சிவக்குமார்** - திண்டல் ஈரோடு

## மரணத்தின் நிமிடம்



மரணத்தின் போது மயங்கும் மனதில்
தரமான வாழ்வை தனக்குள் நினைக்கும்
ஒவ்வொரு நாளும் ஒழுகும் குணத்தாலே
வெவ்வேறாய் நெஞ்சில் விளைந்த கருத்துகளை
நன்றாய் மனதில் நலமுடனே நினைத்திடவே
என்றுமே சொர்க்கத்தை ஏந்தியே நிற்குமே
பொன்னாய் நினைவுகள் பூத்திருக்கும் போக்கை
தன்னில் உணர்ந்து தழைத்திடவே நிற்கும்
உயிராய் உருகியே உள்ளம் தவிக்கும்
பயிராகி நின்றே பரவசம் கூட்டும்
இறுதிக் கனவாய் இதயத்தில் காட்டும்
உறுதியை நீயும் உணர்

**-முனைவர் கவியருவி ஜோதிபாரதி - தேனி**




# சட்டை

சிறுகதை

அவனோட வீட்டுக்கதவை யாரோ தட்டுற சத்தம் கேட்டுச்சு. அவன் எந்திச்சி கடிகாரத்தைப்பாத்தா மணி ராத்திரி 8.00 என்று காட்டியது

இந்த நேரத்துல யாரு வரப்போறா ன்னு ஊருக்கு வார கடைசி பஸ்ஸும் வந்து போயிடுச்சி இந்த ஊர்க்காரவுகன்னா ஒறவு மொறை சொல்லி அக்கா அண்ணன் மாமானு கூப்புட்டுத்தான் தட்டுவாக ஆனா அதுமதிரி இல்லையே ஏதோ கட்டையில கதவைத்தட்டுற மாதிரி இல்ல இருக்குன்னு சந்தேகப் பட்டுக்கிட்டே கதவைத் தொறந்தான் அவன்,

வெளிய நின்ன ரெண்டுபேர் இவன் முன்ன பின்னப் பாத்ததில்ல. அதுனால

“யார் நீங்கன்னு” கேட்டான்

அதுக்கு அவங்க “இங்க சோணைங்கிறது யாருன்”னு கேட்டாங்க

இவன் “ஏன் என்ன விசயம்”னு கேட்டான்

அதுக்கு அவங்க

“நாங்க சொல்ற எடம் வரைக்கும் வாப்பா ஒரு சின்ன விசாரணை முடிச்சிட்டு அனுப்பிடுறோம்”னு சொன்னாங்க.

இவனுக்கு ஒன்னும் புரியல. “யார்கிட்ட என்ன விசாரணை, ஏன் அங்க வரணும் நீங்களே சொல்லுங்கன்னு”

“மொத சோணை நீ தான”

“இல்ல அது என் தம்பி”

“அவனக்கூட்டிட்டுப்போய் ஒரு சின்ன விசாரணை பண்ணிட்டு அனுப்பிடுவோம் கூடவேணுமுன்னா நீயும் வா”

“என்னா ஏதுன்னு தெரியாம எப்புடி வாரது அதுவும் இந்த நேரத்துல”

“அதெல்லாம் தெரியாது பெரிய அய்யா கூட்டியாரச்சொன்னாரு”

இவன் போய் அவன் தம்பிய எழுப்பியாந்தான் அவன் கண்ணைக்கசக்கிக்கிட்டே வந்தான்

அப்ப வந்தவர் சொன்னாரு

“வாப்பா ஒரு சின்ன விசாரணைதான் போய்ட்டு ஒடனே வந்துரலாம்”

வாடா போய்ட்டு வந்துரலாம்னு சொல்லி இவன் சொன்னதும் அவனுமிவனும் சட்டைய மாட்டிக்கிட்டு அவங்க கூடப்போனாங்க

அங்க வந்ததும் வந்தவர் சொன்னார் “நீ வெளிய இரு இவன மாத்திரம் உள்ளாற கூப்புட்டுப்போறோம்”னு

“இல்லை சார் நானும்வாறேன்னு” சொன்னான் இவன்

“இல்லப்பா நீ எதுக்கு நீ இங்கயே இரு அவன் போய்ட்டு அஞ்சு நிமிசத்துல வந்துருவான் கூப்புட்டுப்போகலாம்”னு

சொல்லிட்டு அவனை மட்டும் உள்ளாற கூப்புட்டுப்போனாங்க.

கொஞ்சநேரத்துல அவனோட அலறல் சத்தம் கேட்டுச்சு

இவன் உள்ளாற போகலாம்னா வெளிய நிக்கிறவர் இவனை உள்ளாற விடல

என்ன பண்ணுறதுன்னு தெரியல. ஊருக்குள்ள ஒருத்தர் தான் இது மாதிரி விசயங்களுக்கு வந்து




பேசுறவர் அதுனால அவரைத்தேடி ஓடினான்

அங்க அவர்கிட்ட விசயத்தை எடுத்துச்சொன்னான் . ஆனா அவர்

“அது எதுனாச்சும் திருட்டுக்கேசா இருக்கும் பா அதுக்கெல்லாம் நான் வாரதில்ல” அப்படின்னாரு

“ஐயா அவன் அப்படிப்பட்ட ஆளில்ல அப்பாவி அதுமாதிரி எல்லாம் செய்ய மாட்டான் ஒங்களுக்கே தெரியும்ல, என்னா ஏதுன்னாவது கேட்டுச்சொல்லுங்க அதுபோதும்” நு கெஞ்சினான்

சரின்னு அவரும் அவனை வண்டில ஏத்திக்கிட்டு அங்க போனாரு

இவன வெளிய இருக்கச்சொல்லிட்டு உள்ளாற போய் பேசிட்டு வந்தாரு

“நான் சொல்லல அது திருட்டுக்கேசுதானாம் நேத்து பக்கத்து ஊரில கடைய ஒடைச்சி திருட்டு நடந்திருக்கு அந்தப் பக்கமா போனவர் பாத்துட்டு திருடன எட்டிப்பிடிச்சிருக்காரு அவன் இவரைக் கீழ தள்ளிட்டு ஓடிட்டானாம் ஆனா அவன் சட்டை பாதி கிழிஞ்சி இவர் கையில மாட்டிக்கிச்சாம் அதைக் கொண்டுபோய் குடுத்திருக்கார் சாட்சியா அங்க இவர் சொன்னதுதான்”

“அவனுக்கு 25 வயசிருக்கும் ஒல்லியா கருப்பா இருந்தான்னு சொல்லிருக்காரு” அதைவைச்சி டெயிலர் கடையில போனப்பத்தான் அவன் சொல்லிருக்கான் அவனோட நோட்டப்பாத்து ஒன் தம்பி பேரை அதான் வந்து கூப்புட்டுப்போய் விசாரிக்கிறாங்க அதுல நான் ஒன்னும் பண்ணமுடியாது”னு சொன்னார்

இவன் ஒடனே வீட்டுக்கு போய் அவனோட பொட்டில தேடி அவன் தீவாளிக்கு எடுத்த சட்டைய எடுத்துட்டு நேர அங்க போனான். அங்க இருந்தவங்க கிட்ட இவன் சட்டையக்காட்டி

“அய்யா இவன் தீவாளிக்கு தைச்ச சட்டை இதுதான் அவன் தைச்சது இந்த ஒரே சட்டைதான் வேற எதுவும் அவன் தைக்கலன்னு” சொன்னான்

அங்க இருந்தவர்

“அப்ப இது யாரு சட்டைன்னு” ஒரு கிழிஞ்ச சட்டையக் காமிச்சாரு

அதைப்பாத்துட்டு இவன் சொன்னான்

“அய்யா அதுமாதிரி இவன் போடவே மாட்டான் அது சார்ட்டு இவன் எப்பையுமே முழுசாத்தான் போடுவான்” னு சொல்லவும்

அங்க உள்ளாற இருந்த ஒருத்தனைக் கூட்டியாந்தாக அவன் கிட்ட

“ஏய் நீ சொல்லு இவன் சொல்றது உண்மையா இது உள்ளாற இருக்குறவன் சட்டையா” கேட்டாரு

அதுக்கு அவன்

“அய்யா நோட்டப்பாத்தப்ப சோணைன்னு பேர் இருந்துச்சு இன்னொரு சோணையும் என்கிட்டத் தைக்கிறவர் தான் அவரைக் கேட்டாத்தெரியும் அவர் இவங்க தெருவுக்குப்பக்கத்து தெருதான்” னு சொன்னான்

ஒடனே இவனைக்கூப்புட்டுக்கிட்டு அங்க போனாங்க. அங்க அந்த வீட்டுக்கதவைத்தட்ட அங்க இவன் தம்பி சைசிலேயே ஒருத்தன் வந்தான் அவன்கிட்ட சொல்லி அவனை இங்க கூட்டியாந்தாங்க

அவன் கிட்ட விசாரிச்சப்ப அவன் சொன்னான்

“ஐயா நான் மூணுநாளா ஊரில் இல்ல. வேலை விசயமா வெளியூர் போயிருந்தேன் நான் டிரான்ஸ்போர்ட்ல

தான் வேலை செய்யிறேன் கண்டக்டரா ரெண்டு நாளைக்கி முன்னாடி சென்னைக்கி டூட்டி போய்ட்டு இன்னிக்கி காலையிலதான் வந்தேன் அந்தச்சட்டைய எங்கம்மா ரெண்டு நாளைக்கி தொவைச்சிக் காயப் போட்டிருந்தாங் களாம் அது காணாமப்போச்சாம் என்கிட்ட சொன்னாங்க ஆனா அது என் சட்டைதான் நான் சென்னைக்கிப் போனத நீங்க விசாரிச்சிக்கலாம்"னு சொன்னான்

அப்ப அவன் கிட்ட அங்க இருந்தவர் சொன்னார்

"உன் தம்பி என்ன கேட்டாலும் அடிச்சாலும் கத்துறானே தவிர ஒன்னும் பதிலே சொல்ல மாட்டீங்குறான் ரொம்ப அழுத்தக்காரனா இருக்குறானே வீட்டுலயும் அப்படித்தானான்னு" கேட்டார்

அதுக்கு இவன் சொன்னான்

"அய்யா இவன் அப்படியில்ல பயந்தா அவனுக்குப் பேச்சு வராது பொதுவாவே திக்கித்திக்கித்தான் பேசுவான் நீங்க வேற அவன அடிச்சிருக்கீங்க அப்ப அவனால பேசவே முடியாது, பேச்சு சரியா வராத அவனைத்தான் போட்டு டார்ச்சர் பண்ணிருக்கீங்க"ன்னு சொல்லவும்

அங்க இருந்த பொறுப்பானவர் சொன்னார்

"களவாணியப்புடிச்சிட்டு வாங்கன்னா இப்புடி அப்பாவியப்புடிச்சிட்டு வந்திருகீங்க"ன்னு சொல்லிட்டு "நீ இவனைக்கூப்புட்டுப்போப்பா"ன்னாரு

"போய் ஒழுங்கா தேடி அக்கூயூஸ்டப்புடிக்கிற வழியப்பாருங்க"ன்னு புடிக்கப்போனவங்ககிட்ட சொன்னாரு

அப்ப இவனோட தம்பி இவன் கிட்ட திக்கித் திக்கிக் கேட்டான்

"எல்லாரையும் இப்படித்தான் செய்வாங்களான்" ன்னு

அதுக்கு இவன் சொன்னான் "எல்லாரையும் இப்படிச் செய்ய மாட்டாங்க, நாம ஏழைங்க அதான் இப்படி" ன்னு

(பின் குறிப்பு இது ஒரு கற்பனைக்கதை)

அ.முத்துவிஜயன்

# கவிஞர் மு.முருகேஷ் எழுதிய ஹைக்கூ கவிதை நூலுக்கு 'கவிதை உறவு' இதழின் இலக்கியப் பரிசு வழங்கப்பட்டது




சென்னை. கவிஞர் மு.முருகேஷ் எழுதிய 'புத்தருக்குப் பொய் சொல்லத் தெரியாது' ஹைக்கூ கவிதை நூலுக்கு 'கவிதை உறவு' இதழின் சிறந்த ஹைக்கூ கவிதை நூலுக்கான இலக்கியப் பரிசு வழங்கப்பட்டது.

'கவிதை உறவு' இதழின் 54-ஆம் ஆண்டு விழாவும், கலைமாமணி ஏர்வாடி எஸ்.இராதாகிருஷ்ணனின் பிறந்த நாள் விழாவும் கடந்த மாதம் சென்னை வாணி மகாலில் நடைபெற்றது. இவ்விழாவிற்கு, விஜடி வேந்தர் கல்விக்கோ கோ.விஸ்வநாதன் தலைமையேற்றார். புலவர் சு.மதியழகன் அனைவரையும் வரவேற்றார். விழாவில், டாக்டர் வி.ஜி.பி.சந்தோசம், பத்மபூஷன் டாக்டர் நல்லி குப்புசாமி செட்டி, தஞ்சைப் பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் ம.இராசேந்திரன், கலைமாமணி கவியருவி தி.மு.அப்துல் காதர், நாடாளுமன்ற மேனாள் உறுப்பினர் டி.கே.எஸ்.இளங்கோவன், சட்டமன்ற மேனாள் உறுப்பினர் கவிச்சுடர் கவிதைப்பித்தன், கலைமாமணி ஏர்வாடி எஸ்.இராதாகிருஷ்ணன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

விழாவில், நூல் வெளியீடுகளும், தமிழ்ச்சான்றோர்களுக்கு கவிதை உறவு விருதுகளும் வழங்கப்பட்டன. 2025-ஆம் ஆண்டு வெளியான சிறந்த நூல்களுக்கான 'கவிதை உறவு' இதழ் வழங்கும் இலக்கியப் பரிசுகளும் 12 தலைப்புகளின்கீழ் வழங்கப்பட்டன. ஹைக்கூ கவிதை நூல்ப் பிரிவில் கவிஞர் மு.முருகேஷ் எழுதிய 'புத்தருக்குப் பொய் சொல்லத் தெரியாது' எனும் நூல் சிறந்த நூலாகத் தேர்வுசெய்யப்பட்டு, ரூ.5000/- பரிசுத்தொகையும் பாராட்டுச் சான்றிதழையும் தஞ்சைப் பல்கலைக் கழக மேனாள் துணைவேந்தர் ம.இராசேந்திரன் வழங்கினார். கடந்த 35 ஆண்டுகளுக்கும் மேலாகப் படைப்பிலக்கிய வெளியில் தொடர்ந்து இயங்கிவரும் கவிஞர் மு.முருகேஷ் எழுதிய நூல்கள் பல இந்திய – உலக மொழிகளிலும் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளன. 'கவிதை உறவு' இலக்கியப் பரிசினைப் பெறும் இந்நூல், கவிஞர் மு..முருகேஷ் எழுதிய 14-ஆவது ஹைக்கூ கவிதை நூல் என்பது குறிப்பிடத்தக்கது.

படக்குறிப்பு: சென்னையில் நடைபெற்ற 'கவிதை உறவு' இதழின் 54-ஆவது ஆண்டு விழாவில், கவிஞர் மு.முருகேஷ் எழுதிய 'புத்தருக்குப் பொய் சொல்லத் தெரியாது' ஹைக்கூ கவிதை நூலுக்கு 2025-ஆம் ஆண்டின் சிறந்த ஹைக்கூ நூலுக்கான முதல் பரிசினை தஞ்சைப் பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் ம.இராசேந்திரன் வழங்கியபோது எடுத்த படம். அருகில், கலைமாமணி ஏர்வாடி ஸ்.இராதாகிருஷ்ணன், பேராசிரியர் தி.மு.அப்துல் காதர், நாடாளுமன்ற மேனாள் உறுப்பினர் டி.கே.எஸ்.இளங்கோவன் உள்ளிட்டோர் உடன் உள்ளனர்.

# தாயகக் கனவுடன்...

**– குரு அரவிந்தன் –**

(அவள் தனிமைப்படுத்தப்பட்டிருந்தாள். குமர்ப்பிள்ளைகளோடு கண்டபடி பேசக்கூடாது என்ற அம்மாவின் அறிவுறுத்தல் ஒரு பக்கம் என்னைப் பின் வாங்க வைத்தது. நாங்கள் வெளியே ஓடியாடி விளையாடும்போதெல்லாம் அறையன்னலுக்கால் அவள் ஏக்கத்தோடு எட்டிப் பார்ப்பதை அவதானித்திருக்கிறேன்)

ஸ்டோர்ரூம் சுவரில் சாய்ந்தபடி நான் விம்மியழுததை சுவேதா கவனித்திருக்க வேண்டும்.

'அப்பா, ஏன் அழுவுறீங்க?' என்றாள்.

'இல்லை, ஒன்றுமில்லை.' என்று தலையை அசைத்தபடி கண்களைத் துடைத்துக் கொண்டேன்.

'அழாதீங்கப்பா, அத்தைப் பாட்டியோட வீடு மட்டுமல்ல, இங்கே எல்லா வீடும்தான் சிதைந்து போச்சு, மெல்ல மெல்லத் திருத்தியிடுவாங்க.' ஏன்று தனது அறிவுக்கேற்ற அறிவுரை தந்தாள்.



யுத்தம் முடிந்தபின் நான் குடும்பத்தோடு விடுமுறைக்குச் சண்டிலிப்பாய் சென்றிருந்தேன். ஏனைய வீடுகள் போல அத்தையின் வீடும் யுத்தத்தின் அவலத்தை எடுத்துக் காட்டியது. செல் குண்டுகள் வந்து விழுந்ததில் கூரை முற்றாகவே தூர்ந்து போயிருந்தது. செடி கொடி பற்றைகளுக்கு நடுவே வீடு ஒன்று இருந்ததற்கு அடையாளமாய் ஆங்காங்கே இடிந்து போன சுவர்கள் தலை தூக்கி நின்றன.

நான் கண் கலங்கியதற்குக் காரணமிருந்தது. என்னை அழவைத்தது கூரையற்ற அந்த ஸ்டோர் ரூமில் முளைத்திருந்த பற்றைச் செடிகளுக்கு மத்தியில் முளைத்துப் பூத்திருந்த கார்த்திகைச் செடியின் பூதான் என்பது மகளுக்குத் தெரியாது. மஞ்சள் சிகப்பு நிறத்தில் பளீச்சென்று கண்ணில் பட்டது. பழைய நினைவுகள் எல்லாம் திடீரெனக் கண் முன் னால்வந்து நின்றன. என்னால் மறக்க முடியாத அந் நிகழ்வு இங்கே, இந்த ஸ்டோர் ரூமில்தான் அன்று நடந்தது. ஒவ்வொரு விடுமுறையின்போதும் நாங்கள் ஓடியாடிக் கும்மாளம் போட்ட இந்த வீடு இன்று சீரழிந்து கேட்பாரற்றுக் கிடந்தது. குடியிருந்த அந்த வீட்டைப் பார்க்கவே எவருக்கும் அழுகை வரும், ஆனால் நான் அழுதது அதற்காக அல்ல, என் அத்தை மகள் பிரியாவுக்காகத்தான்.

மனதைவிட்டகலாத எவ்வளவு மகிழ்ச்சியான நாட்கள் அவை என்பதால் அந்த நாட்களை நினைத்துப் பார்த்தேன். எங்கள் இளமைக் கனவுகளைத் தின்றுவிட்ட யுத்தத்தை மனசுக்குள் திட்டித் தீர்ப்பதைத் தவிர வேறு என்னதான் செய்ய முடியும்.

அத்தையின் குரல் கேட்டு வெளியே விளையாடிக் கொண்டிருந்த நாங்கள் சமையல் அறைக்கு ஓடிச் சென்றோம். சாப்பிட வரும்படி எல்லோரையும் அழைத்த அத்தையின் 'கை அலம் பியாச்சா' என்ற கேள்விக்குப் பதில் சொல்லாமல் கையலம்பக் கொல்லைப் பக்கத்தில் இருந்த கிணற்றடி நோக்கி ஓடினோம்.

கொழும்பு பட்டணத்தில் இருந்து நானும் தங்கையும் விடுமுறையைக் கழிக்க அத்தை வீட்டிற்கு வந்திருந்தோம். யாழ்ப்பாணத்தில் இருந்த சண்டிலிப்பாய் என்ற கிராமத்தில்தான் அத்தையின் வீடு இருந்தது. பட்டிணத்தில் வளர்ந்த எங்களுக்குக் கிராமத்து மருதநில சூழ்நிலை வித்தியாசமாக இருந்தது.

வயல் வரம்பு வழியே ஓடிப்பிடிப்பது, இலுப்பங்கொட்டை பொறுக்குவது, வானரப்படைகளோடு ஒல்லித்தேங்காய் கட்டிப்பூவல் குளத்திலே தாமரைக் கொடிகளில் சிக்காமல் நீச்சலடிப்பது, ஐயர் வீட்டு வளவிலே கொய்யாப்பழம் பறிப்பது, வேப்பமர நிழலில் மாங்கொட்டை அடிப்பது, மாட்டுவண்டில் சவாரி விடுவது இப்படிப் பொழுது போவதே தெரியாது. வேப்பமர நிழலில் விளையாடினாலும், வெய்யில் அதிகமாகையால் ஓடியாடி விளையாடியதில் உடம்பெல்லாம் வியர்த்து வழிந்தது. முகம் கைகால் அலம்பி ஒடிவந்த எல்லோரையும் உட்காரவைத்து அத்தை பிட்டு பரிமாறினாள். பிட்டுக்குத் தொட்டுக் கொள்ள மிளகாய்ச் சம்பல். வறுத்த மிளகாயை இடித்து தேங்காய்த் துருவலுடன் உப்பும் புளியும் கலந்து தயாரிப்பதுதான் சம்பல். நான் ஒரு கவளம் எடுத்து வாயில் வைத்துவிட்டு, சாப்பிடாமல் அத்தை முகத்தையே பார்த்தேன்.

'என்ன அரிசிமாப்பிட்டு பிடிக்கலையா?'

‘பிட்டுப்பிடிச்சிருக்கு ஆனா.’


‘என்ன சம்பல் வேண்டாமா? உறைக்குதா?’

‘ஆமா உறைப்பாயிருக்கு, எனக்கு மாம்பழம் சீவித் தாறீங்களா?’

‘மாம்பழமா? ஓ அதுக்கா இந்தத் தயக்கம், சரி ஓடிப்போய் ஸ்டோர் ரூமில இருக்கு பழுத்ததாய் பார்த்து இரண்டு எடுத்துவா’ என்றாள் அத்தை.

நான் சந்தோஷமாய் எழுந்து ஓடிப்போனேன். ஓடி ஒளித்து கண்ணாமூச்சி விளையாடும் போதெல்லாம் இந்த ஸ்டோர் ரூமுக்குள் நாங்கள் ஓடிவந்து பதுங்கி இருந்திருக்கின்றோம். வீட்டின் கடைசியாக இருந்த சிறிய அறையைத்தான் ஸ்டோர் அறையாகப் பாவித்தனர். அந்த அறைக்குச்சிறிய யன்னல் ஒன்று தான் இருந்தது. அதுவும் அரைகுறையாக மூடியபடியிருந்தது. உள்ளே போதிய வெளிச்சம் இல்லாமல் இருட்டாய் இருப்பதால் என்ன உள்ளே இருக்கிறது என்று உடனே கண்டு கொள்வது கடினம். நேற்று இங்கேவந்து ஒளித்திருந்த போதுதான் மாம்பழ வாசம் குப்பென்று அடித்தது. அங்கே மாம்பழம் பழுக்க வைத்திருப்பதை அவதானித்தேன். அருகே சென்று பார்க்க முடியவில்லை, வாசத்திலிருந்து கறுத்த கொழும்பு மாம்பழமாய் இருக்கலாம் என்று ஊகித்தேன்.

கறுத்தக் கொழும்பு மாம்பழம் என்றாலே எனக்கு வாய் ஊறும். அதற்கு ஒரு காரணமும் இருந்தது. மாம்பழங்களில் பலவகையான மாம்பழங்கள் யாழ்ப்பாண மண்ணிலே இருந்தன. ஒவ்வொரு வீட்டுக் காணியிலும் குறைந்தது இரண்டு மூன்று மா மரங்களாவது இருக்கும். முக்கனிகள் என்று சொல்லப்படுகின்ற கனிகளில் மாம்பழமும் ஒன்றாக இருந்தது. குறிப்பாக யாழ்ப்பாண நகரத்திற்கு வடக்கே காங்கேசந்துறைக்குத் தெற்கே இணுவில் என்ற ஊர் ஒட்டு மாம்பழக் கன்றுகளுக்குப் பிரபலமாக இருந்தது. பாண்டி, கொழும்பு, பச்சைதின்னி, மல்கோவா, விலாட், அம்பலவி, செம்பாட்டான், சேலம், என்று காங்கேயந்துறை வீதிவழியாக யாழ்ப்பாண நகரம் நோக்கிப் போகும்போது இந்த ஒட்டு மாங்கன்றுகளை விற்பனைக்காக வீதி ஓரங்களில் வைத்திருப்பதை அவதானிக்கலாம். கொழும்பு மாம்பழங்களில் இரண்டுவகை உண்டு. ஒன்று வெள்ளைக் கொழும்பு, மற்றது கறுத்தக் கொழும்பு. சற்றுக் கரும்பச்சை நிறம் கொண்டதால் கறுத்தக் கொழும்பு மாம்பழம் என்று பெயர்பெற்றது. பழுக்கும்போது காம்புப்பக்கம் மஞ்சளாக மாறும். இது சற்று நீண்ட சதைப்பிடிப்புள்ள மிகவும் ருசியானமாம்பழம்.



ஸ்டோர் ரூம் திறந்தேயிருந்தது. கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே சென்றேன். உள்ளே சற்று இருட்டாக இருந்தது. கண்களை இருட்டுக்குள் பழக்கப்படுத்திக் கொண்டு பார்த்தேன். ஒரு சாக்குப் பைமேலே வைக்கோல் பரப்பி அதன்மேல் மாம்பழங்களைப் பரப்பியிருந்தனர். பெரிய பெரிய கறுத்தக் கொழும்பு மாம்பழங்கள் கொழுகொழு என்றிருந்தது மட்டுமல்ல வாசமும் தூக்கியடித்தது. விரல்களால் மெதுவாக அமத்திப் பார்த்து பழுத்த பழங்களாக இரண்டு பழங்களை கையில் எடுத்து முகர்ந்து பார்த்தேன். திருப்திப் படாமல் போகவே அதை வைத்துவிட்டு சற்றுப் பெரிதான ஒன்றை எடுத்து முகர்ந்து பார்த்தேன்.

எனக்கருகே ‘க்ளுக்’ என்ற சிரிப்பொலி கேட்டது.

திடுக்கிட்ட நான், என்னை நானே சமாளித்துக் கொண்டு நிமிர்ந்த போது தான் அவள் கண்ணில் பட்டாள். கால்களை மடித்து முழங்கால்களைக் கைகளால் அணைத்தபடி ஸ்ரோர் ரூம் மூலையில் கிடந்த பலகைக் கட்டிலில் தலையைக் குனிந்தபடி உட்கார்ந்திருந்தாள். ஒரு நிமிடம் திகைத்துப்போய் நின்றேன். இவளேன் இங்கே மௌனமாய் உட்கார்ந்து இருக்கிறாள்.

‘ஏய் பிரியா, ஏன் இங்கே தனியே உட்கார்திருக்கிறாய்?’ என்றேன்.

‘சும்மாதான்’ என்றாள் தலை குனிந்தபடி.

‘உனக்கு இங்கே இருட்டிலே இருக்கப் பயமேயில்லையா?’

‘இல்லையே’ என்று தலையசைத்தாள்.

‘நாங்க சாப்பிடப்போறோம். நீயும் வாவேன் சாப்பிட..’

‘நான் அங்கெல்லாம் வரக்கூடாது’

‘வரக்கூடாதா. ஏன்? யார் சொன்னா?’

‘அம்மா!’

‘தண்டனையா, அப்போ மாம்பழம் சீவிக்கொண்டு வந்து தரட்டா’

‘ம். கூம்.. வேண்டாம். நான் சாப்பிடக்கூடாது’

‘ஏன் உனக்கு மாம்பழம் பிடிக்காதா?’

‘பிடிக்கும்!’

‘பிடிக்குமா, அப்போ ஏன்?’

‘அப்படித்தான்...!’

‘அப்போ எங்களோட விளையாட வரமாட்டியா?’

‘இனிமேல் வரமாட்டேன்!’

‘ஏன் என்னாச்சு உனக்கு? எங்களோட கோபமா? என்னைப்பார்த்துச் சொல்லு’ மெல்ல அருகே நகர்ந்தேன்.

‘கிட்ட வராதே வேணாம் கிட்ட வராதே’ கைகளை குறுக்கே அசைத்துத் தடுத்தாள்.

இவ்வளவு காலமும் இல்லாத பதட்டம் இவளுக்கு இப்போ ஏன் வந்தது?

அவளை முறைத்துப் பார்த்தேன், அவளது கண்கள் கலங்கியிருந்தன. அவளோ அழுதுவிடுவாள்போலக் கூனிக்குறுகி உட்கார்ந்திருந்தாள். எனக்கு எதுவும் புரியவில்லை. இருட்டறைக்குள் இப்படி ஏன் உட்கார்ந்திருக்கிறாள்?

‘வேண்டாம் என்றால் போ’ என்று சொல்லிவிட்டு பசி வயிற்றைக் குடையவே நான் மாம்பழங்களை எடுத்துக் கொண்டு வெளியே ஓடி வந்தேன்

‘ஏன்டா இவ்வளவு நேரம்?’ என்ற அத்தையிடம் மாம்பழங்களைக் கொடுத்துவிட்டுக் காத்திருந்தேன். அத்தை பழங்களின் தோலைச் சீவி, சிறுதுண்டுகளாக நறுக்கி எனது தட்டில் போட்டாள். ஒரு கவளம் பிட்டும், ஒரு கடி மாம்பழமும்.. ஆகா என்ன ருசி. மாங்கொட்டையைச் சூப்பிவிட்டு திருப்தியோடு எழுந்து கை அலம்பினேன்.

சாப்பிட்டு முடித்தாலும் சிந்தனை எல்லாம் ஸ்டோர் ரூமைச் சுற்றித்தான் இருந்தது. இருட்டறைக்குள் தனிமையில் பிரியா ஏன் உட்கார்ந்திருக்கிறாள்?

நேற்று நடந்ததை நினைத்துப் பார்த்தேன். கண்ணாமூச்சி விளையாடும் போது அவள் திடீரென அழுதது ஞாபகம் வந்தது. அந்த இருட்டறையில்தான் கட்டிலுக்குப் பின்னால் அவளுக்குப் பக்கத்தில் நானும் ஒளித்திருந்தேன். யாரோ உள்ளே தேடிவரும் காலடியோசை கேட்டது.

‘ஸ்.. யாரோ தேடி உள்ளே வர்றாங்க..!’ அந்தச் சிறிய இடத்தில் கட்டிலுக்குப் பின்னால் இடித்துக் கொண்டு இருட்டுக்குள் என்னோடு ஒளித்திருந்த அவளது காதுக்குள் கிசுகிசுத்தேன். சற்று நேரம் அறைமுழுவதும நிசப்தம் நிலவியது. தேடிப்பிடிக்க வந்தவன் இருட்டுக்குள் எங்களைக் கண்டு பிடிக்க முடியாமல் திரும்பிச் செல்லும் காலடி ஓசை காதில் மெல்ல விழுந்தது. அதையும் மீறி பிரியா மூச்சிரைக்கும் சத்தம் கேட்டது.

‘ஏய்.. கையை எடுக்கிறியா?’

அவளது தோளில் மேல் எனது கை பட்டிருந்ததை அப்போதுதான் நானும் அவதானித்தேன்.

யாரும் உள்ளே இல்லை, ஆனாலும் காரணம் சொல்லாமல் திடிரென அவள் விம்மி அழுதது எனக்கு அச்சத்தை ஏற்படுத்தியது.

‘ஏய், ஏன் அழுகிறாய்?’ என்று பதட்டத்துடன் கேட்டேன். அவள் எதுவும் சொல்லாமல் மிரண்டு போனவள்போல மீண்டும் ஓவென்று அழுதாள்.

‘வா, வெளியே போயிடுவோம்’ என்றேன்.

‘மாட்டேன்’ என்று அடம் பிடித்தவள் மீண்டும் விம்மினாள்.

பயந்துபோன நான் அத்தையிடம் ஓடிப்போய் முறையிட்டேன். அத்தை ஸ்டோர் ரூமுக்குள் வந்து அவளிடம் ஏதோ கேட்டுவிட்டு, தறதறவென்று அவளை இழுத்துச் சென்றாள். எனக்குப் பயமாக இருந்தது. அவள் அழுததற்குக் காரணம் நான்தான் என்று என்னை வம்பில் மாட்டி விடுவாளோ என்ற பயம் எனக்குள் இருந்தது.

அப்புறம் சற்று நேரம் கழித்து பக்கத்து வீட்டுப் மாமியை அவசரமாக அழைத்து வரச் சொன்னாள் அத்தை. நாங்கள் பீ..பீ என்று ஹார்ண் அடித்துக் கைகளால் கார்விட்டபடியே ஒடிப்போய் மாமியை அழைத்து வந்தோம். அத்தையும் மாமியும் ஏதோ கிசுகிசுத்தார்கள். எங்களை வெளியே போய் விளையாடச் சொல்லிவிட்டு அவளைக் கிணற்றடிக்குக் கொண்டு சென்று தலையிலே தோயவார்த்தனர். அப்புறம் என்ன நடந்தது என்று தெரியவில்லை. நாங்கள் விளையாடிவிட்டு வந்து அந்தக் களைப்பில் அப்படியே தூங்கிவிட்டோம்.

இன்று இவள் இந்த அறையில் தனிமைப்படுத்தப் பட்டிருந்தாள். கேட்டால் எதுவும் சொல்ல மறுக்கிறாள். அத்தை நல்லெண்ணையும், முட்டையும் எடுத்துக் கொண்டு ஸ்டோர் ரூமுக்குப் போவதை அவதானித்தேன்.

‘அத்தை, பிரியா எங்களோட விளையாட வரமாடேன் என்கிறாள்’ என்று முறைப்பாடு செய்தேன்.

‘இனிமே அவள் உங்களோட எல்லாம் விளையாட வரமாட்டாள்’ என்றாள் அத்தை.

‘ஏன் அத்தை?’ என்றேன்.

‘அப்படித்தான்...!’ அத்தை ஒற்றைச் சொல்லில் பதில் சொல்லிவிட்டுப் போய்விட்டாள்.

அன்று ஞாயிற்றுக்கிழமை, அப்பா வந்து எங்களை அழைத்துப் போகப்போவதாக அத்தை சொன்னாள். நாங்க அப்பாவோட போயிடுவோம் என்பதால் நானும் தங்கையும் பிரியாவிடம் விடைபெறச் சென்றோம். நான் தயங்கித் தயங்கி நின்றேன். எத்தனை நாளைக்குத்தான் இவள் இந்த இருட்டறைக்குள் அடைந்து கிடக்கப் போகிறாளோ?

இருட்டறைக்குள் நிற்கப் பயந்த தங்கை அவளை அணைத்து முத்தம் கொடுத்து, அவளுக்கு பாய் சொல்லிவிட்டு சட்டென்று வெளியேறினாள். நானும் என் பங்குக்கு அருகே சென்று,

‘ஏய் பிரியா, நாங்க போயிட்டு வர்றோம்’ என்று கை அசைத்துக் காட்டிவிட்டுத் திரும்பினேன்.

சற்றும் எதிர்பார்க்காத நேரத்தில் அவள் சட்டென்று என் கையை எட்டிப்பிடித்து இழுத்தாள். நான் தடுமாறித் திரும்பிப் பார்த்தேன்.

என்னை நானே சுதாரித்துக் கொள்ளுமுன் என்னை அருகே இழுத்துக் கன்னத்தில் முத்தம் ஒன்று பதித்தாள்.

‘ஏய் என்ன செய்கிறாய்?’ நான் தடுமாறிப்போனேன்.

‘எனக்கு இந்த கறுத்த கொழும்புதான் பிடிக்கும்’ என்றாள் காதுக்குள் மெதுவாக. அவளது மூச்சுக் காற்று கன்னத்தில் சுட்டதில் உடம்பு சிலிர்த்தது.

உறைந்து போய் நின்ற நான், அத்தை அழைக்கும் குரல் கேட்கவே, கன்னத்தைத் தடவிக்கொண்டு மெல்ல வெளி-யேறினேன்.

சுகமான அந்த அனுபவம் மீண்டும் அவளைத் தேடிப் போக வைத்தது. அடுத்த விடுமுறைக்கு ஆவலோடு ஓடிவந்தபோது பிரியாவை எங்களோடு சேர்ந்து விளையாட அனுமதிக்கவில்லை. அத்தை சொன்னதுபோல பெரியபிள்ளையானதால் அவள் தனிமைப் படுத்தப்பட்டிருந்தாள். குமர்ப்பிள்ளைகளோடு கண்டபடி பேசக்கூடாது என்ற அம்மாவின் அறிவுறுத்தல் ஒரு பக்கம் என்னைப் பின்வாங்க வைத்தது. நாங்கள் வெளியே ஓடியாடி விளையாடும் போதெல்லாம் அறை யன்னலுக்கால் அவள் ஏக்கத்தோடு எட்டிப்பார்ப்பதை அவதானித்திருக்கிறேன். சமுதாயக் கட்டுப்பாடுகள் எங்கள் இருவரையும் நெருங்கவே விடவில்லை. அவள் வளர்ந்து அழகாய், கவர்ச்சியாய் இருந்தது மட்டுமல்ல, அவளிடம் சில மாற்றங்களையும் அவதானித்தேன்.

நாட்டுச் சூழ்நிலை காரணமாக மூன்றாம் வருடம் எங்களால் விடுமுறைக்குப் போகமுடியவில்லை. அதற்கு அடுத்த வருடம் போவதென்று முற்கூட்டியே ஆயத்தங்கள் செய்தபோதுதான் அந்தச் செய்தி வந்தது. பிரியா வீட்டைவிட்டுப் போய்விட்டதாகவும், விடுதலைப் போராட்டத்தில் அவளுக்கு இருந்த ஈடுபாடு காரணமாக அவள் இயக்கத்தில் சேர்ந்து விட்டதாகவும் செய்திகள் வந்தன. எனக்கு ஒரே அதிர்ச்சியாக இருந்தது. பிரியாவா.. எப்படி..? தாய்மண்ணை நேசித்த வயது வந்த ஒரு பெண் என்பதால் அவளது விருப்பத்தை யாராலும் தடுக்க முடியவில்லை.

ஆண்களைவிடப் பெண்களிடம்தான் இனவுணர்வு அதிகமாக இருக்கலாம் என நான் நினைத்தேன். மகளின் பிரிவால் மட்டுமல்ல, யுத்தம் காரணமாக அவர்களின் குடும்பமும் சொல்லெனாத் துன்பங்களைத் தாங்கிக் கொண்டு சொந்த வீட்டைவிட்டு இடம் பெயரவேண்டி வந்தது. யுத்தம் முடிந்து விட்டதாக அறிவிக்கப்பட்டாலும், இறுதி யுத்தத்தின் போது பிரியாவிற்கு என்ன நடந்தது என்றே தெரியவில்லை. கால்களை மடித்து முழங்கால்களைக் கைகளால் அணைத்தபடி ஸ்ரோர் ரூம் மூலையில் கிடந்த பலகைக் கட்டிலில் தலையைக் குனிந்தபடி உட்கார்ந்திருந்த, கள்ளங்கபடமற்ற அவளின் சிரிப்புத்தான் என் மனதில் பதிந்து நின்றது. தங்களிடம் சரணடைந்தவர்களையே இல்லை என்று சொல்லும்போது, ஏமாற்றப்பட்ட இனத்தைச் சேர்ந்த இவள் இருக்கிறாளா இல்லையா என்பது கூட உறவுகளுக்குத் தெரியாத ஒரு அவலம்.

‘அம்மா, அத்தைப்பாட்டி வீடு எல்லாம் இடிஞ்சு போய்க்கிடக்குது. அதைப் பார்த்ததும் அப்பாவிற்கு அழுகையே வந்திடிச்சு’ என்றாள் என் மகள் சுவேதா தாயைப்பார்த்து.

எனது மனைவி சங்கீதம் கற்றவள். பாரதி பாடல்கள் என்றாள் அவளுக்கு மிகவும் பிடித்தமானவை. என் கண்கள் கலங்கியிருந்ததை அவளும் அவதானித்திருக்க வேண்டும்.

‘பின்னே இருக்காதா, இந்த அநியாயத்தைப் பார்த்தால் யாருக்குத்தான் அழுகை வராது.’ ‘எந்தையுந் தாயு மகிழ்ந்து குலாவி யிருந்தது மிவ்வீடே.. அதன் முந்தைய ராயிர மாண்டுகள் வாழ்ந்து முடிந்தது மிந்நாடே..’ என்ற பாரதி பாடலின் வரிகளைச் சற்று மாற்றி மெல்லிய குரலில் பாடியபடியே கலங்கிய கண்களோடு என் கைகளைப்பற்றிச் சமாதானப் படுத்தினாள்.

நான் ஏன் அழுதேன் என்பது, என்னைத் தவிர வேறு யாருக்கும் தெரிந்திருக்க நியாயமில்லை. கண்ணீரைத் தவிர வேறெதைத் தரமுடியும்?

(எழுத்தாளர் குரு அரவிந்தனின் ‘தாயகக் கனவுடன்’ என்ற இந்த சிறுகதையை 2022 ஆம் ஆண்டு சிறந்த கதையாக குவிகம் இதழுக்காக, எழுத்தாளர் சிவசங்கரி அவர்கள் தெரிவு செய்திருந்தார்.)

# செய்யும் தொழிலே தெய்வம்



## சிறுகதை

மகாராஜா

குகை சிற்பத்தில் தென் எல்லோரா என பெயர் பெற்ற “கழுகுமலை” தூத்துக்குடி மாவட்டத்தில் கோவில் பட்டி வட்டத்தில் அமைந்துள்ளது. கழுகு மலை தேர்வு நிலை பேருராட்சியானது. அதன் கிழக்கு எல்லையில் புதிதாக உருவான ஒரு நகர். அந்த நகரில் ஒரு நான்கு அடுத்து அடுத்துள்ள வீட்டு மனைகளை மொத்தமாக வாங்கி ஒரு மனையில் வீடும் இரு மனையில் குடிசை தொழிலாக மிக்சர், சேவு, லட்டு, மைசூர் பாகு, இன்னும் பல பலகாரம் செய்யவும், மீதம் உள்ள ஒரு மனையை வெற்றிடமாகவும் வைத்து உள்ளார்

கதையின் நாயகன் மாதேஷ்.

மாதேஷின் மனைவி மாதவி. இரண்டு பெண் குழந்தைகள். மூத்தவள் பெயர் மயூரி. இளையவள் பெயர் தர்ஷினி. மயூரி அறிவியல் கல்லூரியில் முதலாம் ஆண்டு படிக்கிறாள். இளையவள் தர்ஷினி பத்தாம் வகுப்பு படிக்கிறாள்.

மனைவி மாதவி வீட்டையும் குடிசை தொழிலையும் நிர்வாகம் செய்கிறார். குடிசைத் தொழிலின் பெயர் ஸ்வாதி ப்ரியா ஸ்னாக்ஸ்.

வழக்கமான வார விடுமுறைக்கு பின் கல்லூரி கிளம்ப சீக்கிரமாக எழுந்து விட்டாள் மயூரி.

அம்மா சமையல் அறையில் இருக்க, அப்பா தொழில் செய்யும் இடத்தில் இருக்க , தங்கை வெற்று இடத்தில் புதிதாக நடப்பட்ட கொய்யா செடிகளுக்கும், சப்போட்டா செடிகளுக்கும் தண்ணீர் விட்டு கொண்டு இருந்தாள்.

அப்பாவின் மொபைலுக்கு அழைப்பு வர , மயூரி அந்த அழைப்பை எடுத்தாள். மறுமுனையில் இது ஸ்வாதி ப்ரியா ஸ்னாக்ஸ் ஆ, மயூரி ஆம் என்றாள்.

மறுமுனையில் உள்ளவர்கள் அப்பா இல்லையா என கேட்க,

என்ன விசயம் சொல்லுங்க என்றாள் மயூரி.

நாங்கள் சென்னையில் இருந்து பேசுகிறோம், உங்கள் ஸ்னாக்ஸ் மிக ருசியாக இருந்தது.

மயூரி மிக்க சந்தோசம். சொல்லுங்க,

மறுமுனையில் உள்ளவர் நாங்கள் இங்கு உங்கள் ஸ்னாக்ஸ்களை வாங்கி வியாபாரம் செய்யலாம் என்று இருக்கிறோம் என சொன்னார்.

மயூரி , இருங்கள் அப்பாவிடம் கொடுக்கிறேன் என்றாள்.

அப்பா சென்னையில் இருந்து உங்களுக்கு வியாபாரம் விசயமாக போன் என்றாள்.

போனை வாங்கி “இனிய காலை வணக்கம்“ சொல்லுங்க என்றார் மாதேஷ்.

மறுமுனையில் உள்ளவர் நாங்கள் உங்களிடம் ஸ்னாக்ஸ் வாங்கி இங்கே சென்னையில் விற்கலாம் என்று போன் போட்டோம் என்றார்.

மாதேஷ், அப்படியா எவ்வளவு கிலோ வேண்டும் என கேட்க,

மறுமுனையில் உள்ளவர் தினமும் 30 கிலோ வேண்டும் என்றார்.

இவர் மொத்த வியாபாரத்தில் ஒரு கிலோ என்ன விலையோ அதையும், அது போக டிராவல்ஸ் லக்கேஜ் ஜும் சேர்த்து சொன்னார் மாதேஷ்.

மறுமுனையில் உள்ளவர் நீங்கள் சொன்ன விலையை விட பத்து சதவீதம் அதிகம் தருகிறோம் ஆனால் உங்கள் கடை பெயர் இருக்க கூடாது.

மொத்தமாக அனுப்பி விடுங்கள் நாங்கள் இங்கே எங்க கடை பெயர் போட்டு விற்கிறோம் என்றார்.

மாதேஷ், மன்னிக்கவும் அது சரி வராது என சொல்லி அழைப்பை துண்டித்தார்.

மயூரி என்னப்பா , என்னவாம் என கேட்க,

மாதேஷ் அனைத்தையும் சொல்ல ,

ஏன் வேண்டாம் என்று சொன்னீங்க அதிகம் பத்து சதவீதம் நமக்கு லாபம் தானே என கேட்டாள்.

அதற்குள் அம்மா மாதவி, மயூரி , அப்பா முடிவெடுத்தால் சரியாக தான் இருக்கும் நீ கல்லூரிக்கு கிளம்பு.

பாப்பாவையும் கிளம்ப சொல்லு செடிகளுக்கு தண்ணீர் விட்டது போதும் என்றாள் மாதவி.

தர்ஷினி, அம்மா அம்மா, டைகர் வந்துள்ளது. அதுக்கு சோறு போடு நான் குளிக்க போறேன் என்றாள்.

மாதவி ராத்திரி எங்க போன இந்தா சாப்பிடு என நேற்று மீதமிருந்த சாதத்துடன் தயிரை பிணைந்து வைத்தாள்.

டைகர் சாப்பிட்டு விட்டு சென்றது.

மாதேஷ் சரி சாப்பாடு வை, நான் சாப்பிட்டு விட்டு கடையில் நேற்று அடித்த லட்டை பிடிக்கனும்.

மாதவி என்னங்க , சொல்ல மறந்துட்டேன் , நம்ம குருவம்மக்கா அவங்க பொன்னு மறு வீடு பலகாரத்துக்கு ஆயிரம் முறுக்கும் ஆயிரம் அதிரசமும் கேட்டு உள்ளார். அதிரசத்துக்கு மாவு சேர்த்திடுங்க என்றாள்.

என்னைக்கு வேண்டும் என மாதேஷ் கேட்டார்.

இன்னைக்கு புதன் கிழமை யா வெள்ளி கிழமை வேண்டும் என்றாள்.

சரி சரி என சொன்னார்.

ஏன் சென்னை ஆர்டர் வேண்டாம் என்று சொன்னீர்கள் என கேட்டாள்.

இல்லை நம்ம இன்று பத்து சதவீதம் ஆசைப் பட்டு கொடுத்தோம் என்றால் நஷ்டம் நமக்கு தான் என்றார்.

எப்படி என கேட்டாள்.

நம்ம கடை டேஸ்ட் பார்த்து தான் அவங்க நம்ம கிட்ட ஆர்டர் கேட்டாங்க .நம்ம கடை பெயரில் உள்ள போன் நம்பரை பார்த்து தான் போன் போட்டாங்க. அதுபோல அவங்க நம்ம கடை பெயரோடு போட்டால் தான் இன்னும் நிறைய பேர் சுவையாக இருக்கிறது. இது எந்த கடைனு பார்ப்பாங்க. அப்போது நமது கடை பெயர் இல்லாமல் அவங்க கடை பெயர் இருந்தால், நம்ம கடை பெயர் தெரியாமல் போய் விடும் என்றார்.

மாதவி ஓ அப்படியா !சரி சரி என்றாள்.

மீண்டும் சென்னையில் இருந்து போன் ,

மாதேஷ் தான் பேசினார்.

உங்கள் முடிவில் எதுவும் மறு பரிசீலனை செய்ய முடியுமா என்றார்

வாய்ப்பு இல்லை என்றார் மாதேஷ்.

மறுமுனையில் உள்ளவர் சரி நாங்கள் உங்க வழிக்கு வாரோம். சொன்னது போலவே தினமும் 30கிலோ தினசரி சென்னை ட்ராவல்ஸ்ல அனுப்பி விடுங்கள் நாங்கள் உங்களுக்கு ஆன்லைன்ல சொன்னது போல் பத்து சதவீதம் பணம் அனுப்பி விடுகிறோம் என்றார்.

என்ன என்ன வேண்டும் என கேட்டு குறித்து கொண்ட பின் மாதேஷ் மிக்க சந்தோசம் .ஆனால் பத்து சதவீதம் அதிகம் வேண்டாம். நான் சொன்ன விலையை மட்டும் கொடுத்தால் போதும் என்றார்.

அவர்களின் முழு விபரங்களையும் கேட்டு தெரிந்து கொண்ட பின் மாதவியிடம் அனைத்தையும் கூறி விட்டு தன் லட்டு பிடிக்கும் பணியை தொடர்ந்தார் மாதேஷ்.

மாதவியும் சமையலை முடித்து வீட்டு வேலை களை எல்லாம் முடித்துவிட்டு மாதேஷுக்கு உதவியாக பிடித்த லட்டுக்களை எடை போட்டு பேக் செய்தாள்.



# நீயே என் உலகம் அம்மா

***கவிதை***



வெயில் என்றால்
நடக்கையில் – உன்
நிழல் தந்து என்னை சுமப்பாய்

மழை என்றால்
குடை பிடித்து – எனை
காத்து நீ நனைவாய்

வாடைக் காற்று
பனி என்றால் - ஆடை
கொண்டு சிறகணைப்பாய்

உன் அமைதி
குலைத்து நான் - ஓ வென்று
அழுதுவிட்டால்
ஓடி வந்து
எனை அணைத்து
அமைதி கொள்வாய்

நீயே – என்
உலகம் அம்மா
நீயே என் உலகம்

எனைக் கருவில் - நீ சுமக்க
என்ன தவம் செய்தேனோ
மீண்டும் எப்போ – நீ பிறப்பாய்
என் கருவில் உனை சுமக்க
நீயே
என் உலகம்
அம்மா

**- வடிவேல் ஜனார்த்தன் -**
***திருவையாறு, கிளிநொச்சி***

# புதுக்கோட்டையில் ஹைக்கு உலக மாநாட்டில் எமது கவிஞர்களின் ஹைக்கூ நூல்கள் வெளியீடு

கடந்த 17ஆம் திகதி (17.05.2026) அன்று தமிழ் நாட்டின் புதுக்கோட்டையில் தமிழ்ச்சங்கத்துடன் இணைந்து நாத்திய உலக ஹைக்கூ மாநாட்டு நிகழ்வில் எமது கவிஞர்களாகிய வைத்திய கலாநிதி ஜலீலா முஸ்ஸம்மில், மற்றும் காசி ஜீவலிங்கம் (யாழ்ப்பாவாணன்) ஆகியோர் தங்கள் ஹைக்கூ கவிதைத் தொகுப்பு நூல்களை வெளியிட்டிருப்பது மகிழ்ச்சியழிக்கிறது..




**வைத்திய கலாநிதி ஜலீலா முஸ்ஸம்மில்** ஏற்கனவே நான்கு கவிதைத் தொகுப்புகளை வெளியிட்டவர். இது இவரது ஐந்தாவது கவிதைத் தொகுப்பு நூல் வெளியீடாகும். அதே வேளை இது இவரது இரண்டாவது ஹைக்கூ தொகுப்பு நூல் என்பதும் குறிப்பிடத்தக்கது. வைத்தியராக இருந்தபோதிலும் தனது வைத்தியப் பணிக்கு மத்தியிலும் அதிகப்படியான நேரத்தை தமிழ் இலக்கிய வவளர்ச்சியில் தனது கவிதைகளை படைப்பதிலும் வெளியிடுவதிலுமாக தனது பங்களிப்பை செலுத்தி வருவது குறிப்பிடத்தக்கது. இவர் தொடர்ச்சியாக பல விருதுகளை தனது படைப்புகளின்பொருட்டு பெற்றுக் கொண்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. அதுமட்டுமன்றி பல இதழ்களிலும் பத்திரிகைகளிலும் தனது கவிதைகளை தொடர்ச்சியாக வெளியிட்டு வருகிறார். கவிதைகள் மட்டுமன்றி கட்டுரைகளையும் இவர் எழுதி வெளியிட்டுவருகிறார். இனிய நந்தவனம் இதழ் நடாத்திய 5வது உலக ஹைக்கூ மாநாட்டின்போது இவரது **'ஒரு குடம் கானல் நீர்'** என்ற பெயரிலான ஹைக்கூ நூல் வெளியிடப்பட்டிருப்பது பெருமையளிக்கும் விடயமாகும்.




**'யாழ்ப்பாவாணன்'** என அழைக்கப்படுகின்ற காசி ஜீவலிங்கம் அவர்களும் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் தனது ஆழமான ஈடுபாட்டை வெளிப்படுத்தி வருபவர். தொடர்ந்து தனது இலக்கியப் பங்களிப்பைப பல்வேறு நிகழ்வுகளின் மூலம் மேற்கொண்டு வருபவர். அண்மையில் இனிய நந்தவனம் சஞ்சிகையின் 29வது ஆண்டு மலர் அறிமுக நி-கழ்வை இலங்கையில் சிறப்பாக ஒழுங்குபடுத்தி நடாத்தி முடித்தவர். வெவ்வேறு சஞ்சிகைகள் பத்திரிகைகளில் இவரது படைப்புகளை வெளியிட்டு வரும் இவர் தனது அடுத்த கவிதைத் தொகுப்பாகிய **'யாழ்ப்பாவாணனின் துளிப்பாக்கள்'** என்ற ஹைக்கூ தொகுப்பு நூலினை இனிய நந்தவனம் நடாத்திய 5வது உலக ஹைக்கு மாநாட்டில் வெளியீடு செய்தமை இலக்கிய உலகிற்கு இவர் அளிக்கம் பங்களிப்புக்கு மற்றுமோர் அடையாளமாக திகழ்கிறது. இவர் இதற்கு முன்னர் தனது முதலாவது வெளியீடா **'யாழ்ப்பாவாணனின் கவிதைகள்'** என்ற பெயரில் கவிதை நூல் ஒன்றை வெளியிட்டமையும் குறிப்பிடத்தக்கது. இதைவிட இவர் உள நலம் சார் ஆற்றுப்படுத்தல் செயற்பாடுகளிலும் ஈடுபட்டுவருவது குறிப்பிடத்தக்கது.

இந்த நூலின் அறிமுக நிகழ்வு இலங்கையில் 05.06.2026 அன்று யாழ்ப்பாணம் இளவாலையில் இடம்பெறுகிறது.

இவர்கள் இருவரும் தொடர்ந்தும் தமது படைப்புகள் மூலம் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் பங்களிப்பு செய்யவேண்டுமெனக் கேட்டுக்கொள்வதோடு இருவருக்கும் இரவி சஞ்சிகையும் சஞ்சிகைக் குழுமமும் தனது வாழ்த்தையும் தெரிவிக்கிறது.




## அத்தியாயம் 8

எதிர் பாராதவிதமாக திடு திப்பென்று ஒருவர் தன் சட்டையைப் பிடித்து உலுக்கியவுடன் அதிர்ச்சியில் உறைந்துபோய் நின்றான் ராஜா.

“டேய் கேக்கிறதுக்கு ஆள் இல்லைன்னு நினைச்சியா! உனக்கு என்னடா அவ்வளவு துணிச்சல்” எனப் பேசிக்கொண்டே அவனுடைய கன்னத்தில் ஓங்கி ஒரு அறை விட்டான்.அதோடு விடவில்லை அவனைக் காலால் உதைத்துக் கீழே சாய்த்து முரட்டுத்தனமாக மாறி மாறி அடித்தான். இதைக்கண்ட ராஜாவின் தாயார் அவன் மேலே விழும் அடிகளை தடுக்க முயன்று கதறி அழுதுகொண்டே அவனுக்கு விழும் அடிகளை அவளே வாங்கினாள். இந்தக் கொடுமையை பார்த்த ஊர்மக்கள் இதை வேடிக்கை பார்த் துக்கொண்டிருக்க அவர்களின் மனச்சாட்சி இடம் கொடுக்கவில்லை.

நடந்த பிரச்சனைக்கு சம்மந்தமே இல்லாமல் உள்ளே புகுந்து அடாவடிசெய்த அந்த வில்லனை நடந்த நிகழ்வுகளையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த நடுநிலைக்கூட்டம் அவனை சுற்றிவளைத்து தர்ம அடி கொடுத்து விலக்கி விட்டனர். அவன்தான் ஏழுவழியான் ஏழுமலை. ஊருக்கு ஒரு சகுனி இருப்பான் என்று சொல்வார்கள் அல்லவா, அவன்தான் இவன். ஊருக்குள் குழப்பம் விளைவித்து ஊர் மக்களை காவல் நிலையத்திற்கு அலைய விட்டு வீண் செலவு செய்ய வைத்து அதிலே வயிறு வளர்க்கும் வம்புக்காரன் இவன். கிராமப் பஞ்சாயத்து தேர்தல் வந்தாலே இவனுக்கு நல்லவேட்டைதான்.

கிராமத்தில் போட்டி இல்லாமல் ஒரு நல்லவரை பஞ்சாயத்துத் தலைவராக தேர்ந்து எடுக்கலாம் என கிராமம் முடிவெடுத்தாலும் இவன் அதற்கு உடன்பட மாட்டான். எவனையாவது ஒரு ஏமாந்தவனை உசுப்பேற்றி போட்டியை உருவாக்கி அந்த அப்பாவியை கடனாளியாய் ஆக்கிவிடுவான்.

ஆகவே இந்த ஏழுவழியானைக் கண்டாலே ஊரில் பெரும் பாலான மக்களுக்கு எரிச்சலாகத்தான் இருக்கும்.அதனால்தான் இதையெல்லாம் மனதில் வைத்துக்கொண்டுதான் அன்று ஆத்திரம் தீர அடித்துத் துவைத்துப் பிழிந்து விட்டனர். ஊரே ஒன்று கூடிவிட்டதைக்கண்ட அவன் துண்டைக்காணோம் துணியைக்காணோம் எனத் தப்பித்து ஓட்டம் பிடித்து விட்டான். இதுதான் கிராமத்துக்கும் நகரத்துக்கும் உள்ள வேறுபாடு.


நகரத்தில்அக்கம் பக்கம் வீட்டார் என்றுகூட அண்டிப் பழகமாட்டார்கள். ஐக் அடுத்த வீட்டில் என்ன நடந்தாலும் கண்டு கொள்ளாமல் எந்திரத்தனமான வாழ்க்கை வாழ்வார்கள். பாசம் பரிவு நேசம் என்ற புரிதல் இல்லாத சலனமற்ற மனிதர் என்ற மனிதராய் வாழ்வார்கள்.

ஆனால் கிராமம் இதற்கு நேர்மாறாய் இருக்கும். கிராமத்தின் பரப்பும் கூட்டமும் குறுகி இருக்கும்.ஆனால் மனது விசாலமாய் இருக்கும். ஒருவருக் கொருவர் அந்நியோன்யமாய் ஒரு குடும்ப உணர்வாய் ஒரே பந்தமாய் பழகியும் உதவியும் புரிதலோடு வாழ்வார்கள்.

எந்தப் பக்கம் நியாயம் இருக்குமோ அந்தப்பக்கம் ஒட்டு மொத்தமாகச் சேர்ந்து நிற்பார்கள். அதாவது அந்தக்கிராமம் ஒரு குட்டி சாம்ராஜ்யம் என்றும் கூறலாம். அந்தக்கிராமத்தில் என்ன பிரச்சனைகள் நிகழ்ந் தாலும் அவ்வளவு எளிதில் காவல் நிலையம்வரை போகாது.

அந்த அளவிற்கு கிராமத்தினர் பஞ்சாயத்துத் தலைவருக்கு மதிப்பும் அளித்து வந்தனர்.

ராஜாவும் ஒரு நல்ல பையன். எந்த வம்பு தும்புக்கும் தலையிடமாட்டான். தன் கல்வியில் மட்டுமே கவனமாக இருப்பான். அதனால் கிராமத்தார் அவன் மீது ஒரு அலாதி அன்பு வைத்திருந்தனர்.



அவனுடைய அம்மாவும் ஊரோடு ஒன்றி வாழ்ந்து வந்தாள். அந்த ஊரில் யார் வீட்டிலும் நல்லது கெட்டது எது நடந்தாலும் இவள் முதல் ஆளாய் நின்று இறுதிவரை எல்லாப் பணிகளையும் உதவியாகச்செய்வாள்.

ஆகவே அவளைப்பற்றி யார் என்ன சொன்னாலும் ஊர் நம்பாது. அப்படித்தான் அன்றும் ஊர் அவள் பக்கம் நின்றது. அன்று அந்தகிழவியின் அபாண்டமான பேச்சு அவளை மட்டுமல்ல ஊரையே காயப்படுத்திவிட்டது. இளம் வயதில் விதவையானாலும் தன் மகனுக்காக தன் சுய சுக துக்கங்களை எண்ணாது தன் மகனின் எதிர் காலமே லட்சியம் எனக் கொண்டு ஒரு சத்திய வாழ்க்கை வாழ்ந்து வந்தாள். அதனால் அந்த ஊர் அவளுக்கு பக்க பலமாக இருந்தது.

கமாலாவின் ஆச்சியை வண்டியில் ஏற்றி மருத்துவ மனைக்கு அனுப்பி வைத்து துணையாக கிராமத்துத் தலைவரும் உடன் சென்றார்.

**(தொடரும்)**



# மலரும் காலை வேளை

*மலரும் காலை வேளை எந்தன் கவிதை.*
*காலையிளங் கதிரொளி கண்களில் மலர்ந்திட*
*சோலைப்பூக்கள் புன்னகை பூத்துப் பூரித்திட*
*சாலையோரம் செந்தமிழ்ப் பெண்ணாள் நடைபயில*
*கலைநயம் விழிகளில் கவிநயம் கனியவே,*

*எண்ணங்கள் வண்ணத்துப் பூச்சிகளாய் சிறகடிக்க*
*மென்துகிலாய் நினைவுகள் மெல்லவே மீட்டிட*
*வண்ண மயிலாய் உள்ளமும் களித்தாட*
*தேனூறும் தீந்தமிழ் சந்தக்கவி பாடுதே*

**- வாசுகி பிரபாகரன் -**

இலண்டன்

# சிறுகதை

கவிஞர் கவிமாறன் இறந்து போயிருந்தார். போலீஸ் நாய்கள் சுற்றி சுற்றி ஒரு தெருக்கோடியில் நின்று விட்டன. இன்ஸ்பெக்டர் இளந்தேவன் அந்த ஐந்து நட்சத்திர ஹோட்டலின், அந்த அறையை ஒவ்வொரு பகுதியாக ஆராய்ந்து கொண்டிருந்தார்.

“சார், ஆம்புலனஸ் வந்து விட்டது. பாடியை எடுத்து விடலாமா?” என்று கேட்ட சப்- இன்ஸ்பெக்டர்டம் “சரி” சொல்லி விட்டு தன்னுடைய தேடுதலை தொடர்ந்தார்.

ஹோட்டல் ரிஷப்சனில் கேட்ட பிறகு கவிஞர் நேற்று காலை ரூம் போட்டு விட்டு சாயங்காலம் தான் வந்திருக்கிறார். வேறு யாரும் வரவில்லை என்று தெளிவாகத் தெரிந்த பிறகு தான், தன்னுடைய விசாரணையை தொடங்க ஆரம்பித்திருந்தார்.

திரும்பிப்பார்த்த போது சோபாவின் அடியில் மல்லிகைப் பூவும், ஹேர்ப் பின்னும் கிடந்தன. எடுத்து வைத்துக் கொண்டு நேற்று தேடி வந்த பெண்ணை உடனடியாக கண்டு பிடித்து விட வேண்டும் என்று எண்ணிக் கொண்டு காவல் நிலையத்திற்கு கிளம்பினார்.






- இரஜகை நிலவன் -

அந்தக் குட்டி நடிகை ஜெய மாலா முதலில் மறுத்தாலும் மல்லிகைப் பூ ஹேர்ப் பின் காட்டி அவள் ஹோட்டலுக்கு வந்ததைச் உறுதிபடுத்தி விடுவார்கள் என்று சொன்னதும் “நான் அங்கு போனது உண்மை, சார். அவர் என்னை உபயோகித்துக் கொண்டு சினிமாவில் ஹீரோயின் சான்ஸ் வாங்கித் தருவதாக ஒப்புக் கொண்டார்” என்றாள்.

“சரி, நீ அங்கே போகும் போது எத்தனை மணி இருக்கும்?”

“எட்டு மணி, சார். அருகிலுள்ள தொழிற்சாலையில் சரியாக அப்போது சங்கு ஊதியது சார்” என்றாள்.

இளந்தேவனுக்கு திரும்பவும் குழப்பம் ஏற்பட்டது. கவிமாறன் இறந்தது பத்திலிருந்து பதினோரு மணிக்குள் என்று போஸ்ட்மார்டம் ரிப்போர்ட் கூறுகிறது.

“நீ பொய் சொல்ல வில்லையே”

“இல்லை, சார்”

இன்ஸ்பெக்டருக்கு கடைசியில் கவிமாறனின் உதவியாளன் மேகவண்ணன் மீது சந்தேகம் வலுத்தது. எந்த ஒரு சாட்சியமும் இல்லாமல் வெறும் சந்தேகத்தின் அடிப்படையில் எப்படி அவனை கைது செய்வது என யோசித்துக் கொண்டே மேகவண்ணன் வீட்டிற்குள் நுழைந்தார்.

“என்ன சார், யார் கொன்னாங்க கண்டு பிடிச்சிட்டீங்களா?” என்று கேட்க மேகவண்ணனை கூர்மையாக கவனித்த இன்ஸ்பெக்டர் அவன் சட்டையில் காலர் பட்டன் இல்லாமல் இருப்பதைக் கண்டு, அதிரடியாக “மிஸ்டர் மேகவண்ணன். நீங்கள் தான் நேற்று கொலைக் குற்றம் புரிந்தவர். உங்கள் சட்டை காலர் பட்டன் கவிமாறன் இறந்த அறையில் கிடைத்தது.” என்று சொல்லி விட்டு மேகவண்ணனின் அதிர்ச்சிகளை கூர்ந்து கவனித்தார்.

“இல்லை, சார். நான் கொலை செய்யவில்லை. எனக்குத் தெரியாது. இது எப்படி உங்களுக்கு கிடைத்தது என்று எனக்கு தெரியாது” என்றான் மேகவண்ணன்.

கொஞ்சம் குழம்பிய இளந்தேவன் “சரி, என்னோடு வாருங்கள். உங்களை ஸ்டேஷனில் வைத்து கவனிக்கிற மாதிரி கவனித்தால் உண்மையை கக்கி விடுவீர்கள்” என்றார்.

அதிர்ந்து போன மேகவண்ணன், ''சார், இந்தக் சட்டையை நேற்று என் தம்பி தான் போட்டிருந்தான்'' என்ற போது அவனுக்கு வியர்த்துக் கொட்டியது.

எந்த வித ஆதாரமும் இல்லாமல் ''ஒத்துழைக்க சொல்லுங்கள். எப்படி, எதற்காக கவிமாறனை கொலை செய்ய அனுப்பினீரகள்'' என்றார்.

''நான் கொலை செய்ய அனுப்பவில்லை. அவன் தான் கவிஞர் கவிமாறனைக் கொன்று விட்டு வந்து, 'நான் அவனைக் கொன்று விட்டேன். நான் மாய்ந்து மாய்ந்து எழுதும் கவிதைகளுக்கு எனக்கு எலும்பு துண்டு போல பணத்தை வீசி விட்டு தான் எழுதியது என்று மார்தட்டி கொண்டிருக்கிறான். இதிலே கவிஞர் பட்டம் வேறு' என்று கத்திக் கொண்டிருந்தான். இப்போது எங்கே போனான் என்று தெரிய வில்லை'' என்றான்.

''உங்கள் தம்பி தான் கொலை செய்ததா? அவரைப் பிடிக்க எங்களுக்குத் தெரியும்'' என்று சொல்லிக் கொண்டு, திரைச் சீலை அசைவதைப் பார்த்து, பாய்ந்து சென்று, ஒளிந்திருந்த மேகவண்ணனின் தம்பியைப் பிடித்து விலங்கிட்டு அழைத்துச் சென்றார்.



# கவிதை

*தலைக்கறி*

*ரத்தப் பொரியல்*

*குடல் குழம்பு*

*மீன் வறுவல்*

*இறால் தொக்கு*

*பருப்பு சாம்பார்*

*மிளகு ரசம்*

*காய்கறி கூட்டு என*

*சைவமும் அசைவமும்*

*சுவையாக சமைத்து*

*தலை வாழை இலையில்*

*பரிமாறப்பட்ட*

*படையலுக்கு முன் அமர்ந்து*

*பெரும் பசியோடு*

*ஒரு மொடக்கு தாய்ப்பாலுக்கு*


*அழுகிறது குழந்தை*

*விம்மி புடைத்துச் சுரக்கும்*

*மார்போடு*

*கண்ணீர் அஞ்சலி பதாகையில்*

*தவிக்கிறாள் அம்மா.*




***- வெறுத்தா -***




மலைகளால் சூழப்பட்ட ஒரு அழகான கிராமம் இருந்தது. அந்தக் கிராமத்தின் பெயர் மருதமலைபட்டி. பசுமையான வயல்கள், தெளிந்த நீர்நிலைகள், பழமையான கோவில்கள், இவை அனைத்தும் அந்தக் கிராமத்தின் அழகை இன்னும் அழகாக்கின. ஆனால் அந்த அழகின் பின்னால் ஒரு மர்மமும் இருந்தது.

கிராமத்தின் எல்லையில் ஒரு அடர்ந்த காடு இருந்தது. அந்தக் காட்டை “இருள் வனம்” என்று அழைப்பார்கள். அந்தக் காட்டுக்குள் யாரும் செல்லத் தயங்குவார்கள். காரணம், அங்கு ஒரு மர்மம் இருப்பதாகக் கிராம மக்கள் நம்பினர். ஏதோ வித்தியாசமான சத்தம் கேட்கும்.

“அவன் மனிதனா? மந்திரவாதியா? அல்லது பேயா?” என்று பலர் பலவிதமாகக் கூறுவார்கள்.

அந்தக் கிராமத்தில் “அருண்“ என்ற புத்திசாலியான சிறுவன் வசித்து வந்தான். அவன் எல்லாவற்றையும் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வமுள்ளவன். எல்லா விஷயங்களையும் அறிய விரும்புவான்.

ஒருநாள் கிராமத்தின் பெரியவர்கள் பேசிக் கொண்டிருந்ததை அவன் கேட்டான்.



**– ருக்மணி வெங்கட்ராமன் –**

“நேற்று இரவு காட்டுக்குள் ஒரு விசித்திரமான ஒளி தெரிந்தது!” என்று ஒருவர் சொன்னார்.

“அது அந்த மர்ம மனிதனின் மந்திர ஒளி என்று சொல்கிறார்கள்,” என்றார் மற்றொருவர்.

அந்த வார்த்தைகள் அருணின் மனதில் ஒரு ஆவலை ஏற்படுத்தின.

“அந்த மர்மம் என்ன என்று கண்டுபிடிக்க வேண்டும்!” என்று அவன் தீர்மானித்தான்.

அடுத்த நாள் காலை, அவன் தனது நண்பர்களான குமார் மற்றும் ராஜு ஆகியோருடன் காட்டுக்குச் சென்றான்.

காட்டுக்குள் நுழைந்தவுடன் அவர்கள் ஒரு விசித்திரமான அமைதியை உணர்ந்தனர். பறவைகள் கூட கீச்சிடவில்லை. காற்று மெதுவாக மரங்களை அசைத்தது.

“அருண்... பயமாக இருக்கிறது,” என்று குமார் மெதுவாகச் சொன்னான்.

“பயப்படாதே. நாம் உண்மையை தெரிந்து கொள்வதற்காகவே வந்திருக்கிறோம்,” என்றான் அருண்.

அவர்கள் சிறிது தூரம் நடந்தபோது, ஒரு பழைய கல்லால் ஆன மண்டபம் அவர்களுக்கு கண்ணில் பட்டது. அந்த மண்டபம் மிகவும் பழமையானது. அதன் சுவர்களில் சில குறியீடுகள் பொறிக்கப்பட்டிருந்தன.

அருன் அந்த குறிகளை கவனமாகப் பார்த்தான்.


“இது உழைப்பின் உயர்வை குறிக்கும் குறியீடு. ரகசியம் இல்லை.” என்றான் அவன்.

அவர்கள் அந்த மண்டபத்தின் உள்ளே சென்றார்கள். அப்போது திடீரென்று ஒரு காற்று வீசியது. மண்டபத்தின் உள்ளே ஒரு விசித்திரமான ஒளி தோன்றியது.

அந்த ஒளிக்குள் மெதுவாக ஒரு மனிதன் தோன்றினான்.

அவன் நீண்ட வெள்ளை தாடியுடன் இருந்தான். கண்களில் ஒரு ஆழமான ஒளி. அவன் உடை மிகவும் எளிமையானது.

நண்பர்கள் மூவரும் பயந்து நின்றார்கள்.



“பயப்படாதீர்கள்,” என்று அந்த மனிதன் மெதுவாகச் சொன்னான்.

“நீங்கள் யார்?” என்று அருண் தைரியமாகக் கேட்டான்.

“நான் இந்தக் காட்டின் காவலன்,” என்றான் அந்த மனிதன்.

“அப்படியென்றால் நீங்கள் தான் அந்த மர்ம மனிதனா?”

அவன் சிரித்தான்.

“மர்மம் என்பது மனிதன் புரிந்துகொள்ளாத வி'யத்திற்கு வைத்த பெயர் தான். நீண்ட நாட்களாக உங்களைப் போல் யாராவது வர மாட்டார்களா என்று காத்திருந்தேன்.” என்றான்.

அருண் இன்னும் ஆச்சரியப்பட்டான்.

“அப்போ அந்த மந்திரம் என்ன?” என்று கேட்டான்.

அந்த மனிதன் சற்று அமைதியாக நின்று, பின்னர் சொன்னான்:

“இந்த உலகில் மிகப் பெரிய மந்திரம் ஒரு சொல் தான்.”

அவன் மெதுவாக அந்தச் சொல்லை கூறினான்: “நம்பிக்கை!”

“இந்த சொல்லை மனதில் வைத்துக் கொண்டால், எந்த இருளையும் வெல்ல முடியும்,” என்றான் அவன்.

அவர்கள் பேசிக்கொண்டிருந்தபோது திடீரென்று மண்டபத்தின் பின்னால் ஒரு பெரிய சத்தம் கேட்டது.

ஒரு பெரிய கல் கதவு மெதுவாக திறந்தது. அதன் உள்ளே ஒரு பழமையான பாதை இருந்தது.

“இந்த பாதை ஒரு ரகசியத்தை மறைத்து வைத்திருக்கிறது,” என்றான் அந்த மர்ம மனிதன்.

அவர்கள் அந்த பாதையில் நடக்கத் தொடங்கினர். சில நேரத்தில் அவர்கள் ஒரு பெரிய குகையை அடைந்தார்கள்.

அந்தக் குகையின் நடுவில் ஒரு பழமையான பெட்டி இருந்தது.

அருண் அதைத் திறந்தான்.

அதன் உள்ளே பொன்னும் வெள்ளியும் இல்லை.

ஒரு பழைய ஓலைச்சுவடி மட்டும் இருந்தது.

அதில் எழுதப்பட்டிருந்தது:

“அறிவு, துணிவு, நம்பிக்கை — இவை மூன்றும் இருந்தால் மனிதன் உலகையே வெல்ல முடியும்.”

அதைப் பார்த்த அருணும் நண்பர்களும் ஆச்சரியப்பட்டார்கள்.

அவர்கள் திரும்பிப் பார்த்தபோது அந்த மர்ம மனிதன் அங்கு இல்லை.

அவன் மறைந்து விட்டான்.

அவர்கள் கிராமத்துக்குத் திரும்பி, தங்கள் அனுபவத்தை எல்லோருக்கும் கூறினர்.

அந்த நாளிலிருந்து அந்தக் காடு பயமுறுத்தும் இடமாக இல்லை. அது ஒரு அறிவின் இடமாக மாறியது.

அருண் அந்த மந்திரச் சொல்லை என்றும் மறக்கவில்லை.

ஏனெனில் அவன் புரிந்துகொண்டான் —

உலகிலேயே பெரிய மந்திரம் “நம்பிக்கை” தான்.




கிளிநொச்சி இராமநாதபுரம் மகா வித்தியாலய மாணவர் தேசிய மட்ட நாடகப்போட்டியில் சாதனை

அண்மையில் பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட நாடகப் போட்டி இடம்பெற்றிருந்தது. இந்த நாடகப்போட்டியில் கலந்துகொண்ட கிளிநொச்சி இராமநாதபுரம் மகா வித்தியாலயம் ஆறு தேசிய விருதுகளை வென்று வரலாற்றுச் சாதனையை நிகழ்த்தியுள்ளமை கிளிநொச்சி மண்ணுக்கும் ஒட்டுமொத்த கிளிநொச்சி மக்களுக்கும் பெருமை சேர்க்கும் விடயமாக அமைந்துள்ளது.



இந்த நிகழ்வானது இலங்கையின் பிரதம மந்திரி அவர்களின் தலைமையில் இடம்பெற்ற தேசிய விருது வழங்கும் விழாவில், இந்தப் பாடசாலையின் மாணவர்கள் தங்கள் அசாத்தியத் திறமையை வெளிப்படுத்தி விருதுகளை வென்று சாதனை நிகழ்த்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தப் போட்டியின்பொருட்டு இவர்களால் மேடையேற்றப்பட்ட “விளை நிலம்” என்ற நாடகமே ஆறு தேசிய விருதுகளையும் இந்தப் பாடசாலைக்காகப் பெற்றுக்கொடுத்துள்ளது. இவர்கள் பெற்றுக்கொண்ட விருதுகள் வருமாறு:

சிறந்த நாடகக் கதை – முதலாம் இடம்

சிறந்த நாடகத் தயாரிப்பு - இரண்டாம் இடம்

சிறந்த நடிகன்

சிறந்த நடிகை

சிறந்த துணை நடிகன்

சிறந்த இசையமைப்பு




இவ்வாறு ஒரு தேசிய மட்டத்திலான பாடசாலைககளுக்கிடையிலான நாடகப்போட்டியில் நாடகக்கதை, நெறியாள்கை, இசையமைப்பு மற்றும் நடிப்பாற்றல் என்ற முக்கியமான சகல பிரிவுகளிலும் முன்நிலை பெறுவதென்பது மாணவர்களின் அசாத்தியத் திறமையை வெளிப்படுத்துவதாகவே அமைந்துள்ளது. இது சாதாரணமாக மெய்ச்சப்படாமல் கடந்து போய்விடக்கூடிய ஒரு விடயமல்ல. நாடகக் கலைத் துறையில் தேசிய மடடடத்தில் சாதனைபுரிந்து தங்கள் திறமையை வெளிக்காட்டியுள்ள அனைத்து மாணவர்களுக்கும், சிறப்புற கதை எழுத்தாக்கத்தை மேற்கொண்ட எழுத்தாளருக்கும், சிறந்த முறையில் வழிநடாத்தி நெறியாள்கை செய்த நெறியாளருக்கும், இதற்கு பக்கபலமாக இருந்து ஆதரவு நல்கி ஊக்கப்படுத்திய அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோருக்கும் “இரவி” சஞ்சிகை தனது வாழ்த்தைத் தெரிவிக்கிறது. இம்மாணவர்கள் மென்மேலும் வளர்ச்சிபெற்று மேலும் பல சாதனைகளை எதிர்காலத்தில் பெற்று வாகைசூட எமது ஆசிகளை தெரிவிக்கிறோம்.

# கேளும்... கேளும்... கேட்டுப்பாரும்...

**- கீரர் -**

பதிலளிக்கிறார்.

**புதுக்கவிதை என்றால் எதுகை மோனை சந்தம் எதுவுமே கூடாதா?**

**- கீதாரமணி - சூளைமேடு, சென்னை**

நற்றமிழ் வணக்கம் கவிஞரே! தங்கள் கேள்வி நியாயமானதுதான். புதுக் கவிதை என்பதே சொல்லவரும் விடயத்தை உடன் விளங்கும்படியாகவும் சுருக்கமாகவும் சொல்வதுதானே. இதற்கென்று தனியான இலக்கண விதிமுறைகள் கிடையாது. பொதுவாக இதுக்கக்கூடிய இலக்கண விதி முறைகள் பின்பற்றப்பட்டால் போதுமானது. எதுகை, மோனை சேர்க்கக்கூடாது என்று விதிமுறைகள் இல்லை. புதுக்கவிதையிலும் இது சேர்ந்தால் படிக்கும்போது கவிதை இரசனையாகத்தான் இருக்கும்.

**மரபு வழிக் கவிதை கற்றுக்கொள்ள லிங்க் எதுவும் இருந்தால் அறிய தரவும். நன்றி.**

**- சந்திரா பிள்ளை -**

நற்றமிழ் வணக்கம் பாவலரே! தங்கள் ஆர்வத்துக்கு வாழ்த்துகிறேன். அவ்வப்போது முகநூலில் அறிவிப்புகள் வெளி-வருகின்றனவே. நீங்கள் கவனிக்கவில்லையா? நான் கவனித்தால் உங்களுக்கு அறியத்தருகிறேன். அல்லது நீங்களாகவே யாப்பிலக்கணம் கற்றுக்கொள்ளுங்கள் மரபுக்கவி சுயமாகப் பழகலாம். இதற்கென்று யாப்பிலக்கண நூல்கள் இருக்கின்றன. மரபுக் கவிதை நிகழ்வுகளை நடாத்தும் நண்பர்களிடமும் கேட்டுப்பார்க்கலாமே.

**அன்றைய மாத இதழ்கள் வெளியிடும் பொழுது போட்டி போட்டுக் கொண்டு ஆர்வமாக குடும்பமே படிப்போம். ஆனால் இன்று?**

**- ருக்மணி வெங்கட்ரமணன் -**

நற்றமிழ் வணக்கம் பாவலரே! உங்கள் ஆதங்கம் எல்லா படைப்பாளர்களுக்கம் உள்ளதுதான். இன்றுதான் அனேகமானவர்கள் முகநூலிலும், யுரியூப், டிக்டாக் என்று இவற்றில் மூழ்கிப்போயிருக்கிறார்களே, அப்படியிருக்க எங்கே இவர்களுக்கு நேரமிருக்கும். வாசிப்புப் பழக்கம் அருகி வருகிறது, மீண்டும் அந்தப் பழக்கத்தை உருவாக்க அனைவரும் இணைந்து முயற்சித்தால் பலன் கிடைககலாம்.

**முகநூல் குழுமங்களில் பிழைகள் சுட்டிக் காட்டப் படுவதில்லை பெரிதாக எடுத்துக் கொள்வதில்லை எடுத்துக் கூறினாலே தவறைத் திருத்த வாய்ப்பாகும். ஒற்றை வரியில் அருமை மிக அருமை சிறப்பு நன்று. ஒற்றைச் சொல் பயன் படுத்துதல் முறையா? நடுவரே பிழை செய்தாலும் தெரிந்த பாவலர்கள் சுட்டிக் காட்டலாம் என்கிறேன் தங்கள் பதில்?**

**- ரேனு பாலு -**

நற்றமிழ் வணக்கம் பாவலரே! அருமையான கேள்வி. என்னை முகநூல் குழுக்களினதும், நடுவர்களினதும் பகைவன் ஆக்க முயற்சிக்கிறீர்கள்போல் தோன்றுகிறது. எனக்கு ஏன் இந்த அவசியமற்ற பதிலிறுப்பு என்று கடந்து போக முடியவில்லை. தங்கள் ஆதங்கம் சரியானதே. இது நடுவர்கள் பற்றியது. அனேகமாக நடுவர் தெரிவை குழக்களின் தலைமைகள் தங்கள் வசதிக்கேற்ப மேற்கொள்வதே இந்தத் தவறுக்கு காரணம். அவர்கள் தங்களையும் தங்கள் குழுக்களின் செயற்பாடுகளையும் பாதுகாப்பதில் அவதானமாக இருக்கிறார்கள். சில குழுக்கள் கோரிக்கைவிடும்போது சிறப்பாக நடுவப்பணியாற்றக்கூடியவர்கள் முன் வராமையும் இதற்கு ஒரு காரணமே. பொறுப்பேற்கும் சில நடுவர்களுக்கு நடுவர் சான்றிதழ் மட்டுமே இலக்கு ஆகவே சிறப்பு நன்று என்று தீர்ப்பை வழங்கி செல்கிறார்கள். சில குழுக்கள் தங்கள் உறுப்பினர்களை இழந்துவிடக்கூடாது என்பதற்காக இதனை பெரிதாக கருத்திற்கொள் வதில்லை. ஆக அனைத்தும் குழுக்களின் நலன் சார்ந்தே நடைபெறுகிறது.

**ஒவ்வொரு கவிதைகளையும் என்ன செய்ய போகிறீர்கள் புத்தகமாக வெளியிடப் போறீங்களா, இல்லை சும்மா தானா கவிஞர்களின் படைப்புகள் வீணாகுமே?**

**- பாலம்மாள் பொன்னுசாமி -**

நற்றமிழ் வணக்கம் பாவலரே! தங்கள் ஆர்வம் புரிகிறது. அனைத்தையும் நூலாக வெளியிட வேண்டும் என்பதே எமது நோக்கம். அதற்கான முயற்சியில் இருக்கிறோம். எல்லோருடைய கவிதைகளையும் ஒரு தொகுப்பில் வெளியிடுவதால் பயன் இல்லை எனக்கருதுகிறேன். ஆகவே மேலும் பல படைப்புகள் சேரும்போது ஒவ்வொன்றாக, இரண்டு அல்லது மூன்று கவிஞர்களின் தொகுப்பாக அல்லது ஒவ்வொரு கவிஞருக்கும் தனித் தொகுப்பாக வெளியிடலாம் என்பது எனது திட்டம். கவிதை மட்டுமல்ல சிறுகதை, கட்டுரை, ஆய்வுக் கட்டுரை என்று ஒவ்வொன்றையும் வெளியிட உத்தேசம். நிதி சார் பிரச்சினையும் உண்டல்லவா?....

# எங்கள் படைப்புகளை கொண்டாடுவோம்

எங்கள் படைப்புகளை நாம் கொண்டாட வேண்டியது மிக மிக அவசி யமானது. என்ற அடிப்படையில் 'இரவி' சஞ்சிகையும் ஈழத்துத் திரைப்பட தயாரிப்பாளர்கள் அனைவருடனும் கைகோர்ப்பதோடு அவர்களை ஊக்கப் படுத்தும் பொருட்டு ஈழத்துப் படைப்புகள் சார் விடயங்களை ஒவ் வொரு இதழிலும் பகிர்ந்து வருகிறோம். அந்தவகையில் இந்த இதழில் இடம்பிடித்த 'துவக்கு'' என்ற மற்றொரு திரைப்படத்துடன் சந்திக்கிறோம்.




## 'துவக்கு'

தயாரிப்பு: தேவா சினி புரொடக்சன்

இயக்குனர்: தேவா அலோசியஸ்

திரைக்கதை வசனம்: தேவா அலோசியஸ்

இலங்கைத் தமிழ் சினிமா வரலாற்றில் தடம் பதித்து 25 படைப்புகளை இதுவரை தந்துள்ள 'தேவா சினி புரொடக்சன்' நிறுவனம் தனது 26ஆவது படைப்பினை தொடங்கி விறுவிறுப்பாக அதன் படப்பிடிப்பு வேலைகள் மற்றும் படத்தயாரிப்புடன் தொடர்புடைய ஏனைய அனைத்துப் பணிகளையும் மிக விரைவாக நிறைவு செய்து வருகின்றது. ஏற்கனவே 'சாவடி' என்ற திரைப்படத்தை தயாரித்து வெளியிட்டு அதற்கு அமோகமான ஆதரவை இரசிகர்களிடமிருந்து பெற்ற நிலையில் தனக்கான இரசிகர் பட்டாளத்தை உருவாக்கி ஆழக் கால்பதித்திருந்த நிலையில் இந்தத் திரைப்பட வேலைகள் இடம்பெற்று வருகின்றன. இத்திரைப்படமும் மிக விரைவில் மக்கள் பார்வைக்காக திரைக்கு வரவிருப்பதாக அறியக் கிடைக்கிறது.

இந்தத் திரைப்படத்தின் பிரதான பாத்திரத்தில் தஷிகா யோகேஸ்வரன் அறிமுகமாகிறார். இவர் திரைப்படத்தில் 'ராகினி' என்ற முதன்மைப் பாத்திரத்தில் நடித்துவருவதாக அறியக்கிடைக்கிறது. பிரதான ஆண் பாத்திரத்தில் நரேந்திரன் நிருசாந்த் அவர்களும் மற்றொரு பிரதான பாத்திரத்தில் மதிசுதாவும் நடித்திருக்கிறார்கள். அத்தோடு இந்தியத் திரையுலகில் தடம்பதித்து பல திரைப்படங்களில் நடித்ததோடு பல விருதுகளையும் வென்ற இலங்கையைச் சேர்நத நடிகர் ஜெயபாலன் அவர்களும் இத்திரைப்படத்தில் பாத்திரமேற்றுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. தற்போது இந்தத் திரைப்படத்தின் முதற்பார்வை சுவரொட்டி பிரதான கதாபாத்திரத்தையும் போர்க்களப் பின்னணியையும் காட்சிப்படுத்தி வெளியாகி சமூக ஊடகங்களில் வலம்வரும் அதேவேளை இது மக்கள் மத்தியில் பெரும் எதிர் பார்ப்பையும் வரவேற்பையும் பெற்றுள்ளது. இந்தத் திரைப்படத்தில் இலங்கையின் பல பாகங்களையும் சேர்ந்த பல நடிகர்கள் பங்கேற்றுள்ள அதேவேளை மலையகக் கலைஞர்களின் சிறப்பான பங்களிப்பும் நிறைவாக






உள்வாங்கப்பட்டிருக்கிறது. படத்திற்கான இசையமைப்பை மூன்று இசையமைப்பாளர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தத் திரைப்படத்தின் கதை, திரைக்கதை, வசனம் போன்றவற்றை தேவா அலே-ாசியஸ் அவர்கள் எழுதி, அவரே திரைப்படத்தை இயக்கியும் வருகிறார். இந்தத்திரைப்படத்தின் கதைக்கு 1990ஆம் ஆண்டு காலப் பகுதியின் சூழலை மையமாக வைத்து 'ஒரு நிலம், ஒரு இனம், ஒரு போர்' என்ற சுட்டு வரிகளுடன் கதையை மெருகேற்றி தயாரிப்பில் ஈடுபட்டுவருகிறார். அதேவேளை இந்தத் திரைப்படமானது மட்டக்களப்பு மாவட்டத்தை களமாக முன்நிறுத்தி எடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இது இதற்கு முன்னர் வெளிவந்த 'சாவடி' திரைப்படத்தின் இரண்டாம் பாகம் என்ற பிம்பத்தையும் 'சாவடி' திரைப்படத்தின் முக்கோண திரைக்கதையமைப்புக்கு அமைவாகவும் உருவாக்கும் என கருத்துகள் நிலவுகிறது. 'சாவடி' திரைப்படத்தைப்போல பல திருப்பங்களையும் ஆச்சரியங்களையும் இப்படமும் கொண்டிருக்கும் என்ற நம்பிக்கை இரசிகர்கள் மத்தியில் தற்போதே வேரூன்றியுள்ளது. இந்தத் திரைப்படமானது இலங்கைத் தமிழ் சினிமாவினதும் தேவா சினி புரொடக்சனதும் மற்றொரு மைல்கல்லாக அமையும் என நம்ப முடிகிறது. மாசி மாதம் 15ஆம் திகதி ஆரம்பித்த படப்பிடிப்புப் பணிகள் மிக வேகமாக இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளதா தயாரிப்பாளர் தரப்பிலிருந்து அறியவருகிறது. இதனை மிக வீரைவில் திரையில் காணலாம் என்ற ஆர்வத்தோடு நாமும் எமது வாழ்த்தை திரைப்படத் தயாரிப்பாளருக்கும் குழுவினருக்கும் தெரிவிக்கிறோம்.

# 29வது அகவையில் இனிய நந்தவனம் சஞ்சிகை

**- சுட்டா -**



ஈழத்தில் பல சிற்றிதழ்கள் வெளிவந்தன. அவற்றில் சில குறுகிய காலத்திலேயே காணாமல் போயின. சில இதழ்கள் ஆழமாய் காலூன்றி இன்றும் வெளிவந்தவண்ணம் உள்ளன. இந்த சிற்றிதழ்கள் யாவும் ஈழத்தின் இலக்கிய ஆளுமைகளால் ஈழத்திலேயே வெளியிடப்பட்டவை. ஈழத்தின் ஆளுமை ஒருவரால் இந்தியாவின் தமிழ் நாட்டில் திருச்சி மாநகரிலிருந்து ஒரு சஞ்சிகை வெளியிடப்பட்டு வருகின்றது. அதுதான் **'இனிய நந்தவனம்'** சஞ்சிகை

இனிய நந்தவனம் சஞ்சிகையின் ஆசிரியர் திரு சந்திரசேகரன் அவர்கள் இலங்கையின் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்தவர். அவர் இங்கிருந்து இந்தியாவின் திருச்சியில் வாழ்வுரிமைபெற்று வாழும் ஒரு மிகச்சிறந்த ஆளுமை. அவரது தமிழ் வளர்ச்சிக்கான பணிகளைப் பார்க்கும்போது இத்தனை செயற்பாடுகளை ஒரு மனிதராக நின்று செயற்படுத்த முடிகிறதா என்ற வியப்புத் தோன்றும். அத்தகையதே அவரது செயற்பாடுகள். நான் இனிய நந்தவனம் இதழில் 32வது இதழில் இனிய நந்தவனத்துடன் இணைந்தவன். என்னை அதனுடன் பிணைத்துவிட்டவர் கனடாவில் புலம்பெயர்ந்து வசிக்கும் மற்றறொரு ஆளுமை நண்பர் குரு அரவிந்தன் அவர்கள். அதைத் தொடர்ந்து இனிய நந்தவனத்தின் நகர்வுகளையும் வளர்ச்சியையும் மிகுந்த மனமகிழ்வோடு அவதானித்து தூரத்தே இருந்து அதனுடன் இணைந்து பயணிக்கிறேன்.

இந்த இனிய நந்தவனம் சஞ்சிகை ஆரம்பத்தில் சில பக்கங்களுடன் மட்டுமே ஆரம்பிக்கப்பட்டு கட்டம் கட்டமாக இதனுடன் பல எழுத்தாளர்கள் இணைந்துவிட பக்கங்கள் அதிகரிக்கப்பட்டு தற்போது அது மிகவும் வளர்ச்சியடைந்து பலரால் வரவேற்கப்படும் பல நாடுகளிலும் வசிக்கும் ஆளுமைகளாலும் வாசகர்களாலும் மதிக்கப்படும், இரசிக்கப்படும் ஒரு இதழாக மாறியிருக்கிறது என்பது மனதுக்கு மகிழ்ச்சி தருகிறது.

இந்த வருடம் தனது 29ஆவது அகவையை இனிய நந்தவனம் சஞ்சிகை எட்டியிருக்கிறது. இதனுடைய ஆண்டு நிறைவையொட்டி வருடம்தோறும் ஆண்டு நிறைவு மலர் விசேட இதழாக வெளியிடப்படுவதுண்டு. அவ்வாறே இந்த ஆண்டும் இதனுடைய 29ஆவது ஆண்டு நிறைவு விசேட இதழ் வெளியிடப்பட்டது. சந்திரசேகரனின் ஒரு சிறப்பான வழக்கம் தான் தற்போது சார்ந்திருக்கும் பிரதேசத்தில் மட்டும் சிறப்பு மலர் வெளியீட்டை நிகழ்த்தாமல் வெவ்வேறு நாடுகளிலும், வெவ்வேறு நகரங்களிலும் இந்த ஆண்டு நிறைவு மலர் வெளியீட்டை நிகழ்த்துவது. அதனடிப்படையில் கடந்த சித்திரை மாதம் 25ஆம் திகதி 2026 அன்று இலங்கையிலும் தனது 29வது அகவை நிறைவையொட்டிய சிறப்பு மலர் வெளியீட்டை நிகழ்த்தியிருந்து.



இந்த நிகழ்வானது யாழ் நகரில் அமைந்துள்ள **'எங்கட புத்தகங்கள்'** இல்லத்தின் கேட்போர் கூடத்தில் இந்த



நிகழ்வு இடம்பெற்றது. இந்த நிகழ்வுக்கான ஒருங்கிணைப்பு செயற்பாடுகள் அனைத்தையும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கவிஞர் **காசி ஜீவலிங்கம் (யாழ்ப்பாவாணன்)** அவர்கள் மேற்கொண்டு சிறப்பாக சகல ஏற்பாடுகளையும் செய்திருந்தமை மகழ்சியளிப்பதாய் அமைந்தது. இந்த நிகழ்வை கவிஞர் புரட்சி அவர்கள் தலைமையேற்று அவரது தலைமை உரையுடன் நிகழ்வு ஆரம்பமாகியது. தொடர்ந்து பாவலர் மணி உடுவிலூர்க்கலா அவர்கள் இந்த சஞ்சிகைக்கான நூல் ஆய்வுரையை நிகழ்த்தியிருந்தார். உடல் நிலை பங்குபற்றலுக்கு ஒத்துழைக்காத நிலையிலிருந்தபோதும் அவர் இந்த நிகழ்வில் முயன்று பங்கெடுத்து தனது ஆய்வுரையை சிறப்பாக செய்து முடித்திருந்தமை அவரது தமிழின் பொருட்டான கடமையுணர்வை பறைசாற்றியிருந்தது குறிப்பிடத்தக்கது. அதேபோன்று ஊடகவியலாளர் பார்வையில், இனிய நந்தவனம் ஆண்டுமலர் என்ற பார்வையில் ஊடகவியலாளர் யாழ். தர்மினி பத்மநாதன் அவர்கள் தனது ஆய்வுரையை நிகழ்த்தினார். அதைத் தொடர்ந்து இனிய நந்தவனம் சந்திர சேகரன் (இதழாசிரியர்) அவர்கள் தனது ஏற்புரையை நிகழ்த்தியிருந்தார். அவரது ஏற்புரையில் தனது



வளர்ச்சிப்படிகளில் தான் சந்தித்த பல சவால்களையும் தெளிவுபடுத்தியதோடு நூல் ஆய்வில் முன் வைக்கப்பட்ட சில சுட்டுதல்களுக்கமைவான தனது தெளிவுபடுத்தல்களையும் விளங்கிக்கொள்ளும்படியான, ஏற்புடைத்தான காரண காரியங்களுடன் முன்வைத்தமை சிறப்பான அணுகுமுறையாக அமைந்தது. இவர் தொடர்ந்து தனது உரையில் இனிய நந்தவனம் பல்வேறு வகையான சிறப்பிதழ்களை வெளியிடுவது, நாடுகளுக்கான இதழ்களை வெளியிடுவது, ஹைக்கூ கவிதைகளை ஊக்குவிக்கும் நோக்கோடு ஆண்டுதோறும் ஹைக்கூ மாநாடுகளை நடாத்துவது, ஹைக்கூ மாநாட்டில் தூண்டில் என்ற பெயரில் ஹைக்கூ கவிதைகள் அடங்கிய தொகுப்பு நூல் வெளியிடுவது, இனிய நந்தவனம் சஞ்சிகை வெளியீட்டினை வெவ்வேறு நாடுகளில் மற்றும் நகரங்களில் வெளியிடுவது, சாதனைப் பெண்களை ஆண்டுதோறும் விருதுகள் வழங்கி மதிப்புரவு செய்வது, ஆளுமைகளை ஆண்டுதோறும் விருது வழங்கி மதிப்புரவு செய்வது போன்ற இவரால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகின்ற தமிழ் இலக்கிய வளர்ச்சிப் பணிகளையும் பட்டியலிட்டு தெளிவுபடுத்தினார். இது இவரது பணி பற்றி அறியாத பலருக்கு அறிவதற்கான வாய்ப்பபை ஏற்படுத்தியது என்பது திண்ணம். ஏற்புரையின் பின்னர் ஆண்டு மலர் வெளியிடப்பட்டு அனைத்து பங்குபற்றுனர்களுக்கும் வழங்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து இந்த நிகழ்வின் சிறப்பு நிகழ்வாக இரண்டு மூத்த ஆளுமைகளுக்கான விருதுகள் இனிய நந்தவனம் சஞ்சிகையால் வழங்கப்பட்டது. இது வாழும்போதே ஆளுமைகளுக்கு மதிப்பளிக்கும் ஒரு சிறந்த ஏற்பாடாகவே என்னால் கருதமுடிகிறது. ஈழத் தமிழ்ப் படைப்பாளர்களான **காரைக்கவி கந்தையா பரமானந்தன்** மற்றும் **விக்கிப்பீடியா வேலுப்பிள்ளை மயூரநாதன்** ஆகியோரே விருது வழங்கி மதிப்பளிக்கப்பட்டனர். இவர்களுக்கு **'தமிழ்மாமணி'** விருது வழங்கப்பட்டமையானது, அவர்கள் தமிழுக்காற்றிய பங்களிப்புகளுக்கு ஏற்புடையதே. இந்த ஆளுமைகளுக்கான விருதுகள் இனிய நந்தவனம் சந்திரசேகரன் அவர்களால் பொன்னாடை போர்த்தி மதிப்பளிக்கப்பட்டு வழங்கப்பட்டது. அதைத்தொடர்ந்து சந்திரசேகரன் அவர்கள், அவரது தமிழ் வளர்ச்சி செயற்பாடுகளின் பொருட்டு **'இரவி' காலாண்டு மின் இதழின் ஆசிரியர் நரேஸ் நியூட்டன்** அவர்களால் பொன்னாடை போர்த்தி மதிப்புரவு செய்யப்பட்டார். இது இத்தகைய சாதனையை 29வருடகாலமாக புரிந்துவரும் ஒரு சாதனையாளருக்கு வழங்கப்படவேண்டிய மதிப்பளிப்பாகவே நான் கருதுகிறேன். அத்தோடு பங்குபற்ற வந்திருந்த மற்றொரு ஆளுமையும் திரு. சந்திரசேகரன் அவர்களுக்கு பொன்னாடை அணிவித்து மதிப்பளிப்பு செய்தார்.

அதன் பின்னர் விருது வழங்கல் நிகழ்வைத்தொடர்ந்து பங்குபற்றுனர்களுடனான சிறு கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. இந்த கலந்துரையாடலில் ஈழத்தில் வெளிவரும் சஞ்சிகைகள் அவை தொடர்ச்சியாக வெளி வருவதில் எதிர்கொள்ளும் சவால்கள் போன்ற விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. அதைத் தொடர்ந்து வருகை தந்தவர்களுடனான குழு புகைப்படம் எடுக்கப்பட்டதோடு நிகழ்வு இனிதே நிறைவடைந்தது. மிகவும் நேர்த்தியாக இனிய நந்தவனம் சந்திரசேகரன் அவர்கள் கவிஞர் காசி ஜீவலிங்கத்துடன் இணைந்து இந்த நிகழ்வை ஒழுங்குபடுத்தியிருந்தமை சிறப்பாக இருந்தது. நேரத்தை மிகச் சிறப்பாக கட்டுப்பாட்டுக்குள் வைத்து சரியான மணித்துளியில் நிகழ்வு நிறைவு செய்யப்பட்டது மகிழ்ச்சியளித்தது. அவசியமற்ற அளவலாவல்கள் எதுவுமின்றி ஒரே சீராக நிகழ்ச்சியை வழிநடாத்திய தலைமை மெச்சலுக்குரியதே.

**உங்கள் படைப்புகளுக்கான திறனாய்வு எமது சஞ்சிகையில் வெளிவரவேண்டும் என விரும்புவோர் உங்கள் படைப்பின் இரண்டு பிரதிகளை எமக்கு அனுப்பி வையுங்கள். முன்னுரிமை அடிப்படையில் நூல்களுக்கான ஆய்வுரைகள் 'இரவி' சஞ்சிகையில் வெளியிடப்படும். நூல்களை அனுப்ப iravi.magazine@gmail.com என்ற எமது மின் அஞ்சல் முகவரியில் எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்.**




# யாழ் இந்துக் கல்லூரி மாணவன் சாதனை

எங்கள் இளையவர்கள் உலக நாடுகளுடன் ஒப்பிடுகையில் எந்த வகையிலும் சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபித்துக்காட்டிய யாழ் இந்துக் கல்லூரியின் மாணவன்

கொமன்வெல்த் நாடுகளுக்கிடையிலான போட்டிகள் ஆண்டுதோறும் இடம் பெறுவது வழக்கம். அந்த வகையில் அண்மையில் இந்த ஆண்டுக்கான இளையோர் கொமன்வெல்த் போட்டிகள் சமோவா நாட்டில் இடம்பெற்றது. இந்தப்போட்டியில் பல்வேறு போட்டி நிகழ்வுகள் இடம் பெறுவதோடு அதில் பல நாடு களையும் சேர்ந்த போட்டியயாளர்கள் பங்கேற்பது வழக்கம்.

இவ்வருடம் சமோவா நாட்டில் இளையோர்களுக்கான கொமனவெல்த் நாடுகளுக்கிடையிலான போட்டியில் பங்குபற்றும் பல இளையோர்களுள் பழு தூக்கும் போட்டியில் கலந்துகொண்ட யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த யாழ். இந்துக்கல்லூரியின் மாணவன் பரமலிங்கம் தாரகன் அவர்கள் வெண்கலப்பதக்கத்தை வென்று நாட்டுக்கும் தான் சார்ந்த பாடசாலைக்கும் பெருமை சேர்த்துள்ளார்.

அவரை இலங்கை வாழ் மக்களுடன் இணைந்து இரவி சஞ்சிகையும் வாழ்த்துகிறது.




## யாழ். இந்துக் கல்லூரியின் மாணவன் பிரகலாதன் ஜனுக்சன் தேசிய சதுரங்க அணிக்குத் தெரிவானார்

இலங்கைத் தேசிய சதுரங்க அணித்தேர்வில் யாழ். இந்துக்கல்லூரியின் மாணவன் பிரகலாதன் ஜனுக்சன் அவர்களள் 2026ஆம் ஆண்டிற்கான அணியில் தேர்வாகியுள்ளார்.

இந்த அணிக்கு ஐந்துபேர் தெரிவாகியுள்ள நிலையில் அந்த ஐவரில் இவரும் ஒருவராக தெரிவாகியுள்ளார் என்பது பெருமைக்குரிய விடயமே. இவரும் இவரது அணியினரும் பங்குபற்றும் போட்டிகளில் சிறப்பு வெற்றிகளை யீட்ட இரவி சஞ்சிகை தனது வாழ்த்து களைத் தெரிவித்துக்கொள்கிறது



பாடசாலைகளுக்கிடையிலான தேசிய நாடகப்போட்டியில் பல வெற்றிகளையீட்டி மன்னார் சித்திவிநாயகர் இந்துக்கல்லூரி சாதனை.

அண்மையில் கல்வி அமைச்சு மற்றும் ரவர் மண்டபம் கொழும்பு இணைந்து பாடசாலைகளுக்கிடையிலான நாடகப்போட்டியினை நடாத்தியிருந்தது. இந்த நாடகப்போட்டியில் வடபகுதியைச் சேர்ந்த பாடசாலைககளும் பங்குபற்றியிருந்தன. மிகச் சிறப்பாகவும் விமரிசையாகவும் நடந்து முடிந்த இந்த நாடகப்போட்டியில் மன்னார் மாவட்டத்தின் சித்திவிநாயகர் இந்துக்கல்லூரியும் கலந்துகொண்டது. இப்போட்டியல் பங்குபற்றி மிகவும் சிறப்பாக தனது அரங்க ஆற்றுகையை வெளிப்படுத்திய இப் பாடசாலை **குறுநாடகம்** மற்றும் **நெடு நாடகத்துக்கான** போட்டிகளில் பங்குபற்றியிருந்தது. **'பிரளயம்'** என்ற நெடுநாடகம் இப்போட்டியில் முதலாவது இடத்தைப் பெற்றுக்கொண்டதோடு, மேலும் பல பரிசுகளை வென்று குவித்து மன்னார் மாவட்டத்திற்கும் சித்திவிநாயகர் பாடசாலைக்கும் பெருமை சேர்த்துள்ளது.

ஆசிரியர் **திரு. டினேஸ்** அவர்களின் சிறப்பான எழுத்துருவாக்கத்திலும் தத்ரூபமான நெறியாழ்கையிலும் இந்த நாடகங்கள் உருவாக்கப்பட்டு மேடையேற்றப்பட்டிருந்தனன. ஆடை வடிவமைப்பு ஒப்பனை போன்றவை ஆசிரியை **அல்டினா குரூஸ்** அவர்களால் மேற்கொள்ளப்பட்டிருந்தது.




இந்தப்போட்டியின் பரிசளிப்பு மற்றும் விருது வழங்கல் வைபவம் இலங்கை பிரதம மந்திரியும் கல்வி அமைச்சருமாகிய மதிப்புக்குரிய ஹரிணி அமரசூரிய அவர்களின் தலைமையில் 15.05.2026 அன்று இடம்பெற்றது. இதன்போது மன்னார் சித்திவிநாயகர் இந்துக்கல்லூரி பெற்றுக்கொண்ட பரிசுகள் வருமாறு:

சிறந்த இசையமைப்பு 'உண்மைத்தரிசனம்' – குறுநாடகம் – தெ. டினேஸ்

சிறந்த இசையமைப்பு (ஜுரி விருது) 'பிரளயம்' - நெடுநாடகம் - தெ. டினேஸ்

ஒப்பனை – 'பிரளயம்' நெடுநாடகம் - அல்டினா குரூஸ்



வேட உடை – 'பிரளயம்' -நெடுநாடகம் - அல்டினா குரூஸ்

அசைவியக்கம்-'பிரளயம்' – நெடுநாடகம் - அல்டினா குரூஸ்

சிறந்த நடிகர் - பிரளயம் - நெடுநாடகம் - கே. லூசாளணன்

சிறந்த துணை நடிகர்-'பிரளயம்' - நெடுநாடகம்-து. தரணீஸ்

அரங்க வடிவமைப்பு–'பிரளயம்' நெடுநாடகம் -எஸ். நெகேமி


சிறந்த ஒப்பனை – 'உண்மைத்தரிசனம்' – குறு நாடகம் - எஸ். சதுர்ஷன்

சிறந்த நெறியாள்கை–'பிரளயம்' –நெடுநாடகம்-தெ. டினேஸ்

சிறந்த நாடகப்பிரதி (3ஆம் இடம்) – 'பிரளயம்' நெடுநாடகம் - தெ. டினேஸ்

வருடத்தின் சிறந்த நாடகத்தயாரிப்பு – 'பிரளயம்' – நெடுநாடகம் - தெ. டினேஸ்

இந்த பரிசுகள் அனைத்தும் விருது வழங்கும் விழா மேடையில் வைத்து அறிவிக்கப்பட்டு பிரதம அதிதிகள் மற்றும் விசேட அதிதிகளால் வழங்கப்பட்டிருந்தது. இவ்வாறானா போட்டிகளில் எதிர்காலத்திலும் சிறந்து பிரகாசித்து பல பரிசில்களை வெல்ல **'இரவி'** சஞ்சிகைக் குழுமமும் வாழ்த்துகிறது. இவ்வாறு ஏனைய பாடசாலைகளும் முனைப்புடன் செயற்படுவற்கூடாக எதிர் காலத்தில் அருகிவரும் அரங்கக்கலையில் மிகப்பெரிய முன்னேற்றத்தைகக்காணலாம். இப்போட்டியில் பங்குபற்றி சாதித்த அனைத்து மாணவர்களுக்கும் வழிகாட்டி நெறிபடுத்திய அனைத்து ஆசிரியர்களுக்கும், அனுமதியளித்து உந்துசக்தியாய் இருந்த பாடசாலையின் அதிபர் அவர்களுக்கும் ஆதரவளித்து ஊக்கம் வழங்கிய பெற்றோருக்கும் வாழ்த்தை தெரிவிக்கிறோம்.



யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசாமி கோவிலின் வடக்கே அமைந்துள்ள
நல்லூர் சட்டநாதர் ஆலயம்.
70 வருடங்களுக்கு முன்னைய தோற்றம்
- நன்றி ஸபாஸ் -